# ஆத்துமநேசரின் அங்கமகத்துவம்



சாமுவேல் பவுல் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சேவை சங்கம்

Regd No. SI : 36/2004

# ஆத்தும நேசரின்
# அங்க மகத்துவம்

இராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சேவை சங்கம்
Regd. No. SI : 36/2004

# இராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

கனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்கரையைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி பிறந்தார். இக்கிராமம் மெஞ்ஞானபுரத்திற்கருகில் உள்ளது. நிலவளம், நீர்வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவருடைய தந்தையார் கனம் தானியேல் பவுல் ஐயரவர்கள் சிறந்த பக்தன், வைராக்கிய பிரசங்கி, புகழ்பெற்ற மிஷனெரியாகிய கனம் ஜே. தோமாஸ் ஐயரவர்கள் இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு எழுப்புதலடைந்து கூறியதாவது: ''பவுல் தானியேல் ஐயர் செய்யும் பிரசங்கங்களைப் போலொத்த பிரசங்கங்கள் லண்டன் பட்டணத்துப் பொறபங்களில் செய்யப்படுமாகில், ஆலயங்களில் இடம் காணாதேபோம். ஒரு வேளை இந்தியாவில் எழும்பின குருக்களில் இவர்தான் மகோன்னத பிரசங்கியாயிருக்கலாம்.''

இச்சிறந்த பக்தனின் பதினொரு பிள்ளைகளில் சாமுவேல் பவுல் ஐயர் ஆறாவது பிறந்த ஆண் மகன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள். சாமுவேல் பவுல் ஐயர் இளமையில் தம் தந்தையார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக் கொண்டார். வேத அறிவைப் பெருக்கி வந்தார். மெஞ்ஞானபுரம் கலா சாலையில் கனம் ஜே. தோமாஸ் மிஷனெரியின் கீழ் உயர்தரக் கல்வி கற்றார். பாளையங்கோட்டையில் கனம் சார்ஜென்ற் மிஷனெரியின் கீழ் வேத சாஸ்திரக் கல்வி பெற்றார். பின்னர் சென்னைப் பட்டணத்தில் கனம் சத்தியநாதன் ஐயரவர்களின் கீழ் உபதேசியாராகச் சிறந்த பணியாற்றினார். திருநெல்வேலி அத்தியட்சாதீன குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயரவர்களின் குமாரத்தியை 1868ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து மீண்டும் சென்னைப்பட்டணத்திற்கே தேவ ஊழியம் செய்யும்படி வந்தார். 1871இல் குருத்துவ ஊழியத்திற்கெனத் தெரிந்து கொள்ளப்பட்டு, அதற்குரிய பரீட்சைகளில் முதல்

தரமாகச் சித்திபெற்று, *1874* ஆம் ஆண்டு அக்டோபம் மாதம் *11*ஆம் தேதி மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்களால் திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. ஆலயத்தில் குருப்பட்டம் பெற்று, உதக மண்டலம் சி.எம்.எஸ். சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்: *(1)* மலை ஊழியம், *(2)* நகர ஊழியம், *(3)* நாட்டுப்புற ஊழியம்.

***உதகமண்டலம்:*** *(1)* மலை ஊழியம் *(1874-1883)*. உதக மண்டலத்துத் தமிழ்ச் சபையில் ஒன்பது வருடங்கள் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்துக் கடைசியாக மரணத்துக்கேதுவான வியாதி நிலையுண்டாகி அநேக நாள் ஆஸ்பத்திரியிலிருந்து சற்று சுகமான பின் நீலகிரி மலை அவருக்கு ஒத்துக் கொள்ளாதென்று வைத்தியர் அபிப்பிராயப் பட்டதால் அவ்விடத்தை விட்டு சென்னைப் பட்டணத்துக்கு மாற்றப்பட்டார். நீலகிரியிலிருக்கையில் உவைநாடு சபையை (Wynaad Mission) ஸ்தாபித்துக் கவனித்து வந்தார். *1882* ஆம் வருஷம் கள்ளிக் கோட்டையில் சிதறியிருந்த தமிழ்ச் சபை அங்கத்தினரை ஒன்று சேர்த்து அச்சபையை ஸ்திரப்படுத்தினார். அங்ஙனமே குன்னூரிலும் சர்ச் மிஷன் சபையை ஸ்தாபித்தார். உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலை செய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும் படியாக வேலைக்காரர் மிஷன் (Servants' Mission) என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீட்டிலும் மாதம் 1 ரூபாய் வீதம் வசூல் செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்விதமாய்க் கிடைக்கும்படி ஒழுங்கு செய்தார். இதர மதஸ்தருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல முறைகளைக் கையாடி வந்தார். ஹோபார்ட் பாடசாலையில் இரண்டு வாரத்துக்கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்தருக்கு விசேஷ பிரசங்கம் செய்து பிரசங்கம் முடிந்தபின் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சந்தோஷமாய் விடையளிப்பார். வாரந்தோறும் சந்தைக் கூட்டங்களில் புறமதஸ்தருக்கென்று பிரசங்கம் நடத்துவார். மாதத்துக்கொருமுறை பௌர்ணமி தின இரவில் சதுர்ப் பிரசங்கம் செய்வார். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார்.

***சென்னையில் குருத்துவ ஊழியம்:*** (2) நகர ஊழியம் (1883 - 1887) சென்னைப்பட்டணம் டக்கர் கோவிலுக்கு 1833ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் குருவாக நியமிக்கப்பட்டு அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப்பித்தார். இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்களும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவை களாயிருந்தன. இவர் காலத்தில்தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டுக் கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட்டன. இளைப்பாறும் நேரமெல்லாம் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமுமான நூல்களைத் திரளாக எழுதினார். இதனால் தமிழ்ச் சபையோரெல்லாம் ஐயருக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

***சாட்சியாபுரம்*** : (3) கிராம ஊழியம் (1887-1900). இது வட திருநெல்வேலி சபையை விசாரணை செய்த காலத்தைக் குறிக்கும். வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக் கொடுத்த கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்து ஞாபக ஸ்தம்பமாக விளங்கி நிற்கும் சிவகாசியென்னும் ஊருக்கருகிலுள்ள சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் அவர் தம் கிராம ஊழியத்தை ஆரம்பித்தார். சாட்சியாபுரம், வாகைக் குளம் ஆகிய இரண்டு வட்டாரங்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டு மரண பரியந்தம் அங்கேயே தங்கி மிக ஆர்வத்துடன் திருப் பணியாற்றினார். தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின்படிதான் தவச உற்சவம் நம் நாட்டில் முதல் முதலாக 1891ஆம் வருடம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் கொண்டாடப்பட்டது.

***இதர தொண்டு:*** 1890 ஆம் வருஷம் முதல் 'நற்போதகம்' என்னும் மாதாந்தர தமிழ் பத்திரிகைக்குப் பத்திராதி பராயிருந்தார். 1894 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி சென்னை அத்தியட்சரவர்கள் இவரை ஆனரெரி சாப்பிளினாக (Honorary Chaplain) நியமித்தார். திருநெல்வேலி சபைகளைக் கண்காணித்து வந்த கனம் மோர்ளி (Bishop Morley) அத்தியட்சரவர்களுக்கும் இவர் ஆனரெரி சாப்பிளினாக இருந்தார்.

**இராவ் சாஹிப் பட்டம்:** சபையின் வாழ்வை வெகுவாய்க் கருதியிருந்தது மல்லாமல் இராஜாங்க விஷயமாகவும், பொது ஜன நன்மைக்காகவும் பலவாறாகத் தம்மால் கூடியமட்டும் உழைத்து வந்தார். சிரிவிலிப்புத்தூர் தாலுகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமகம் பெற்று அச்சங்ககங்களில் நல்ல ஆலோசனை கொடுத்து வந்தார். பிரஜைகளின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புத்தகங்களை நன்கு மதித்து இந்தியாவின் கவர்னர் ஜெனரலவர்கள் 1898ஆம் வருஷம் இவருக்கு ''இராவ் சாஹிப்'' (Rao Saheb) என்னும் பட்டம் கொடுத்துக் கனப்படுத்தினார்கள். இந்தியாவில் இந்தக் கவுரவத்தைப் பெற்றுக் கொண்ட முதலாவது சுதேச குரு இவரே.

இவர் மரிப்பதற்கு முந்தின வருடமாகிய 1899 ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி, அனைவரும் கலங்கி நிற்கையில், கலகத்துக்குத் தளகர்த்தனாயிருந்தவனோடு இவர் சமாதான உடன்படிக்கை செய்த சாட்சியா புரத்தையும் அதிலிருந்த கிறிஸ்தவர்களையும் தற்காத்தார்.

**இறுதிக் காலம்:** தமிழ்க் கிறிஸ்தவச் சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சியைக் கருதிக் கிறிஸ்துவைப் போல் ஜீவித்தல் (Imago Christi) என்னும் ஓர் அருமையான புத்தகத்தை எழுத எண்ணங்கொண்டு ஆறுமாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, ஆழ்ந்த யோசனையுடன் அதை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று 1900 வருஷம் மார்ச் மாதம் 4ஆம் தேதி ஞாயிறு காலை ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் இருமலும் கலந்து, வைத்தியர்களின் பிரயாசத்துக்கு வியாதி அடங்காமல், மார்ச்சு மாதம் 11 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்குச் சமாதானத் தோடும் சந்தோஷத்தோடும் தம் பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரை தம் வேலையில் மிக ஊக்கமுள்ளவராயிருந்தார். வியாதிப் படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குத் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

***மரணப்படுக்கை:*** அவர் மரிப்பதற்கு முன் செய்த கடைசி ஜெபத்தில் ஆண்டவரே சிறு வயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணை கூர்ந்தீர். இப்போதும் என்னை உமது சமூகத்துக்கழைத்துக் கொள்ளச் சித்தங் கொண்டீர். ஆனால் இன்னும் சில காலமாத்திரம் ஜீவித்திருப்பேனானால் நான் இயற்றத் துவக்கின இரண்டு புத்தகங்களை (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்றார். கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனாகிய அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்துத் தம் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது! இது என் வீடல்ல. நான் போகும் மாளிகைக்கு இது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் மிக அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போக வேண்டும்; கோவில் மணியடிக்கிறது; கோவிலுக்கு நான் போகிறேன் என்று சொன்னார். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமை மனைவி அவரிடம் வந்து தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க, தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணை மூடினார். அதன்பின் அவர் மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாயப் பிரவேசமாயிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியும், சந்தோஷமும், அழகும் அனைவரையும் பிரமிக்கச் செய்தன. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டை அத்தியட்சாலயத்தில் ஒரு ஞாபகார்த்த கல்லும் பதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் எழுதிய 16 சிறந்த நூல்களில் ***"ஆத்தும நேசரின் அங்க மகத்துவ"***மும், மொழி பெயர்த்த 26 நூல்களில் ***"மோட்சப் பிரயாணம்"*** என்னும் புத்தகமும் இன்றுவரை மிக அருமையாக மதிக்கப்பட்டு வருகின்றன. பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம்.

என் உடன் பாவியே! நீ மனந்திரும்பி இரட்சிக்கப்பட விரும்பினால், அந்நிமிடமே உன் இரட்சகராகிய இயேசுவை ஆவியின் பிரகாரமாய், விசுவாசக் கண்ணினால் மாத்திரமல்ல, மாம்சப் பிரகாரமாய், சரீரக் கண்ணினாலும் பார்க்க அவா உண்டாகும். அந்த ஆசையை ஒருவாறு தீர்க்கலாமென்றே இந்தத் தியானத்தை எழுதலானேன்.

நமது இரட்சகருடைய திருச்சரீர உறுப்புகளைப்பற்றி நான்கு சுவிசேடகரும் வெளிப்படையாயும் நேராயும் எழுதிய பல குறிப்புகளை ஆராய்ந்து பாதமுதல் உச்சிவரையும் ஒரு கோவையாய் இப்புத்தகத்தில் அமைத்திருக்கிறேன். இதை நீ கவனமாயும் கிரமமாயும் வாசிப்பாயானால், உனக்காக மானிட தேகமெடுத்த இயேசுவின் உடலின் சாயலை ஒருவாறு தெளிவாய் அறிந்து கொள்வாய் என்று எனக்கு நம்பிக்கையுண்டு.

இதிலடங்கிய ஒவ்வொரு பாகமும் வேதம், போதனை, தியானம், ஜெபம், துதி ஆகிய பஞ்சாமிர்தம் உள்ளதாயிருக்கிறது. அங்கங்கே நீ உன் இருதயத்தை உயர்த்தவும், தாழ்த்தவும், உன் இருதயத்தில் உணரவும், மகிழவுமான பல பரவசங்கள், சாஷ்டாங்கம், நமஸ்காரம், மௌன தியானங்கள் ஆகிய இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் சரீர உறுப்புக்களும், அவ்வுறுப்புக்களின் மகத்துவங்களும் சுவிசேடத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி இதில் காட்டப்பட்டி ருக்கிறபடியால் இதற்கு **'ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்'** என்று பெயர் சூட்டினேன்.

இயேசுவின் சரீர உறுப்புக்களைப் பற்றிய தியான ஆராய்ச்சி சரீர ரூபத்தோடு சஞ்சரித்த தேவனை மாம்சக் கண்களுக்கும் புலன்களுக்கும் மங்கலாயாவது காட்டுமென்பது மெய். அக்காட்சி மங்கலாயிருந்தபோதிலும் ஆவிக்கு அதிகத் தெளி

வாய்த் துலங்குவதால் இரட்சகர் மேல் அதிக நேசமும், அதிகப் பற்றுதலும் ஆத்துமாவுக்குண்டாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசுவின் அங்க மகத்துவங்கள் நம்முடைய அபாத்திரத்தன்மையையும் நிர்ப்பந்தத்தையும் நன்றாய் வெளிப்படுத்துகிறதினால், நம்மில் நம்பிக்கை வைக்காமல் முற்றும் அவரைப் பற்றிக் கொள்ள ஆத்துமாவை ஏவும்.

இயேசுவின் அங்க மகத்துவப் பரீட்சையால் அந்தந்த அங்கத்தில் அவர் நமக்காக அனுபவித்த பாடுகளும் வெளியாகின்றன. அதினாலே நாம் நமது அவயவங்களால் செய்த பாவங்களையும், அதின் சாபங்களையும், தண்டனைகளையும் முன்னிலும் அதிகத் தெளிவாய்க் கண்டு கொள்ளுவோம். இயேசுவின் பாடுகளே பாவம் பார்க்கும் கண்ணாடி என்று சொல்ல வேண்டும்.

தியானத்தைத் துவக்குமுன் 'அங்க மகத்துவ தியானபீடம்' என்னும் பேரால் சிலவற்றைச் சொல்லுகிறேன். இது உன் ஆத்துமாவை சாதாரண நிலையிலிருந்து சற்றே தூக்கிவிட்டு தியான அனலை மூட்டி, அப்புறம் தியானத்தில் உட்காரச் செய்வதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அடிக்கடி, கூடுமானால் ஒவ்வொரு அவயவத்தையும் பற்றிய தியானத்தை வாசிக்கும் முன் அதை வாசித்துக் கொண்டால் நலமாயிருக்கும்.

இதைத் துன்ப காலங்களிலும், வியாதி முதலான துக்க காலத்திலும், சாவு வீடுகளிலும், உபவாச நாட்களிலும், இராப்போசனம் பெற்றுக் கொள்ள ஆயத்தப்படும் நாட்களிலும் வாசிக்கிறதற்கு ஏற்ற ஒரு புத்தகமாக்கிக் கொள்ளலாம். பொதுவாக இரட்சகர் பாடுபட்ட நாளாகிய வெள்ளிக் கிழமை தோறும் இதில் ஒவ்வொன்றும் வாசிக்கலாம்; அப்போது வருடத்துக்கு இரண்டுமுறை இரட்சகரின் அங்க மகத்துவங்களை அறிந்து கொள்ளலாம்.

இப்புத்தகத்தின் மூலமாய் ஒரு பாவியாவது இயேசுவை முன்னிலும் நன்றாய்க் கண்டு அவருடைய இரட்சண்யத்திற்குப் பங்குள்ளவனானால் அதுவே போதுமானது. தமஸ்குவின் வழியிலே பிரசன்னமாகி சவுலைக் குணப்படுத்தின இயேசு இந்தப் புத்தகத்தை வாசிக்கிற வழியிலே உனக்குத் தரிசனமாகி, தமது பரிசுத்த ஆவியைக் கொண்டு தம்மை உனக்கு வெளிப்படுத்துவாராக!

*இரட்சண்ய வருடம் 1882.* **படுபாவி.**

## பாதகர்புரி ஐந்தாம் பதிப்புக்கு முகவுரை

இந்நூல் 1882 ஆம் ஆண்டில் முதன் முதலில் வெளியிடப் பட்டது. ஆயினும் இது இன்னும் பழமையாய்ப் போகவில்லை. எண்ணிறந்த தமிழ்க் கிறிஸ்தவர்கள் இதனைப் படித்துப் பயன்படுத்துகின்றனர். இதில் அடங்கியுள்ள தியானங்கள் உள்ளத்தை உருக்குகின்றன. அவை வேதாகம அறிவையும் பக்தியுணர்ச்சியையும் ஊட்டுகின்றன. இந்நூல் பக்தி வளர்ச்சிக்குத் துணை செய்யும் சிறந்த நூல்.

இப்பதிப்பு மிகச் செம்மையாக அச்சிடப்பட்டு வெளிவருகிறது. படங்கள் சிறிது பழமையானவையாய்த் தோன்றினாலும் பக்தியூட்டக்கூடியனவாயிருத்தலால் இப்பதிப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ்க் கிறிஸ்தவர்கள் இந்நூலை விரும்பிப் படித்துப் பக்தர்களாய் விளங்குவார்களென்று நம்புகிறோம்.

## மறுபதிப்புக்கு முன்னுரை

ஆத்தும நேசரின் அங்க மகத்துவம் என்ற இந்நூல் முதலாவது வெளியிடப்பட்ட ஆண்டு 1882. இதுவரை பதிமூன்று பதிப்புகள் வெளியிடப்பட்டு விட்டன. ஆனால் இன்றும் சிறிதளவும் இந்நூலின் சிறப்பையும், இதில் பொதிந்துள்ள கருத்துக் கோவை மற்றும் மொழிநடை யாவற்றையும் உணர்ந்த வாசகர்கள் சற்றும் சளைக்காமல் இந்நூலைப் படித்துப் பயன் பெற்று வருகின்றனர். இந்நூலை மீண்டும் மீண்டும் வெளியிடுவதில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் பெருமகிழ்ச்சி கொள்கிறது.

ஆத்தும நேசர் இயேசுவின் அங்க அழகையும், அதன் பண்புகளையும் கற்பனை வளத்தோடு அதே நேரத்தில் ஆழ்ந்த திருமறைப் புலமையோடு இந்நூலின் ஆசிரியர் விவரித்திருப்பது அவர் ஆத்தும நேசர்பால் கொண்டிருந்த பாசத்தையும், அந்த நேசருக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்த சாட்சி வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.

கடந்த நூற்றி இருபத்தேழு ஆண்டுகளாக இந்நூல் கிறிஸ்தவர்களின் மனதைக் கவர்ந்த நூலாக அவர்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்குப் பெரிதும் துணைபுரிந்து வரும் இந்நூலின் மகத்துவத்தை விவரிப்பதற்குச் சொற்கள் போதாது. இன்று நம் ஆராதனை முறைகளில் இடம் பெற்றுள்ள பல சிறப்பான ஜெபங்களும் இந்நூலிலிருந்து எடுக்கப்பட்டவைகள் என்பது

சிறப்புக்குரியது. இந்நூல் இன்னும் பல ஆண்டுகள் ஆத்தும நேசரின் அழகையும், புகழையும் பறைசாற்றிக் கொண்டு, திருச்சபைகளிலும், கிறிஸ்தவ இல்லங்களிலும் வலம் வரும் என்ற வாஞ்சையோடு இந்நூலைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் 13-ஆம் பதிப்பாக மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது.

சென்னை

மார்ச் 28, 2009.

கிறிஸ்தவ இலக்கியப் பணியில்,
அருள்திரு. G.லாரன்ஸ் ஜெபதாஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

# பொருள் அட்டவணை

பக்கம்

சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம் iv

முகவுரை .. .. .. ix

தியான பீடம் .. .. .. xviii

**தியானம் 1 - ஆத்துமநேசரின் பாதம்** *(1ம் பங்கு)- (அதற்குக் கல் பஞ்சு போல்; அது பிணியாளிகளின் வைத்தியசாலை; அது பிணி நீங்கினவர்களின் பள்ளிக்கூடம்)* .. .. .. *1*

**தியானம் 2 - ஆத்தும நேசரின் பாதம்** *(2ம் பங்கு)- (அது விசுவாசியின் தெய்வீக சொரூபம்; அது பாவியின் புஷ்பக்கொத்து; அதனுள் சகலமும் அடக்கம்)* .. .. .. *6*

**தியானம் 3 - ஆத்துமநேசரின் கால்** *- (அதற்கு ஜலமும் தரை; அது நன்மை செய்யச் சுற்றினது; அதில் ஆணிகள் கடாவப்பட்டது)* .. *11*

**தியானம் 4 - ஆத்துமநேசரின் காலெலும்பு** *- (அது முறிக்கப்படவில்லை; சிலுவையில் அறைப்பட்ட உடலே உயிரடைந்தது; அது தேவனுக்கும் மனுஷருக்குமுள்ள ஐக்கியத்துக்கடையாளம்)* .. *16*

**தியானம் 5 - ஆத்துமநேசரின் முழங்கால்** *- (அது செபம் செய்யும்படி வளைந்தது)* *22*

**தியானம் 6 - ஆத்துமநேசரின் அரை** *- (ஒரு துவாலை கட்டப்பட்டது)* .. .. .. *25*

**தியானம் 7- ஆத்துமநேசரின் வயிறு** *- (பசித்தது, தண்ணீர் குடித்தது; வசைப்பேர் வாங்கினது)..* *31*

**தியானம் 8 - ஆத்துமநேசரின் மார்பு** *- (அது அன்பரின் கட்டில்)* .. .. .. *36*

பக்கம்

**தியானம் 9 - ஆத்துமநேசரின் விலா** (அது குத்தப்பட்டது; அதிலிருந்து இரட்சண்ய தைலம் புறப்பட்டது) 41

**தியானம் 10 - ஆத்துமநேசரின் முதுகு** (அடிபட்டது) 47

**தியானம் 11 - ஆத்துமநேசரின் தோள்** - (1ஆம் பங்கு)- (அதில் கர்த்தத்துவமும் திறவுகோலுமிருந்தது) .. 52

**தியானம் 12 - ஆத்துமநேசரின் தோள்** (2 ஆம் பங்கு)- (அதில் பாவிகள் இருக்கிறார்கள்; பாவம் ஏற்பட்டது; பாவ தண்டனை ஏற்பட்டது .. 56

**தியானம் 13 - ஆத்துமநேசரின் கை** - (1 ஆம் பங்கு) - (அது குஷ்டரோகத்திற்குக் குணம்; காய்ச்சலுக்கு மருந்து; குருட்டுக் கண்ணுக்குக் களிக்கம்; கோணலுக்கு நேர்).. 61

**தியானம் 14 - ஆத்துமநேசரின் கை** - (2 ஆம் பங்கு) - (அது சாவில் ஜீவன்; பயத்தில் தைரியம் .. 67

**தியானம் 15 - ஆத்துமநேசரின் கை** - (3 ஆம் பங்கு) - (அழுக்கைச் சுத்தமாக்கிற்று; கழுவினது; வெட்டை ஒட்டுகிறது; பாவிக்குக் கோட்டை).. .. .. 72

**தியானம் 16 - ஆத்துமநேசரின் கை** - (4 ஆம் பங்கு) - (சகலமும் அந்த உள்ளங்கையில்; அது அபாயத்தில் துணை; வரமளிக்கிறது) .. .. 77

**தியானம் 17 - ஆத்துமநேசரின் கை** - (5 ஆம் பங்கு) - (இதன் தடி நாணல்; ஆணியடிக்கப்பட்டது) .. 82

**தியானம் 18 - ஆத்துமநேசரின் கைவிரல்** - (செவிட்டுக் காதின் திறவுகோல்; ஊமை நாவின் கத்திரிக்கோல்; பாவம் கிறுக்கும் பேனா) .. .. .. 89

**தியானம் 19 - ஆத்துமநேசரின் காது - கன்னம்** - (காது பாலியர் துதி கேட்டது; கன்னத்தில் அடிபட்டது) 95

பக்கம்

**தியானம் 20 - ஆத்துமநேசரின் வாய்** - *(கிருபையைப் பொழிந்தது; வல்லமை பொருந்தினது; காடி குடித்தது; அது பாவம் செய்யவில்லை; பரிசுத்த ஆவியை ஊதினது)* 99

**தியானம் 21 - ஆத்துமநேசரின் உமிழ்நீர்** - *(அது நாவின் திமிரை நீக்குகிறது. அது குருட்டுக் கண்ணுக்குக் கலிக்கம்)* .. .. .. 104

**தியானம் 22 - ஆத்துமநேசரின் கண்** - *(1ஆம் பங்கு)* - *(அழுதது; தூங்கினது; பாவத்தைப் பகைத்தது)* 112

**தியானம் 23 - ஆத்துமநேசரின் கண்** - *(2 ஆம் பங்கு)* - *(உத்தம ஈவைக் கண்டது; பாவங்காட்டும் கோல்; கட்டப்பட்டது)* .. .. 115

**தியானம் 24 - ஆத்துமநேசரின் முகம்** - *(1 ஆம் பங்கு)* - *(அதுவே சூரியன்; அறிவின் ஒளி தங்கினது; பாவிகளை நோக்கினது; வயதை மறைத்தது)* .. 121

**தியானம் 25 - ஆத்துமநேசரின் முகம்** - *(2 ஆம் பங்கு)* - *(குப்புற விழுந்தது; மூடப்பட்டது; அடிபட்டது; உமிழப்பட்டது)* .. .. .. 126

**தியானம் 26 - ஆத்துமநேசரின் சிரசு** - *(1 ஆம் பங்கு)* - *(தைலாபிஷேகம் பெற்றது; தலைசாய்க்க இடமிருந்ததில்லை)* .. .. .. 133

**தியானம் 27 - ஆத்துமநேசரின் சிரசு** - *(2 ஆம் பங்கு)* - *(முள்முடி பெற்றது; அடிபட்டது; புதுப்பட்டம் பெற்றது)* .. .. .. 139

**தியானம் 28 - ஆத்துமநேசரின் சிரசு** - *(3 ஆம் பங்கு)* - *(சிலுவையில் சாய்ந்தது; மெல்லிய துணியால் கட்டப்பட்டது)* .. .. .. 147

## தியான பீடம்

ஆத்துமாவே! உன் இரட்சகராகிய இயேசு நேசரைவிட வேறே விருப்பம் உனக்கு இல்லையென்று அறிவேன். அவரைப் பார்ப்பதற்கு நீங்காத ஆசை உனக்குண்டு. அவரை நினைத்து நினைத்து வேதனைப்படுகிறாய், நீ உனக்குள் கலங்குகிறாய் - தியங்குகிறாய் - புலம்புகிறாய் - அவர்மேலுள்ள நேசபாசத்தால் வியாதியாயிருக்கிறாய். ஆ, என் ஆத்துமநேசரை இந்தக் கண்ணால் கண்டேனில்லையே என்கிற சோகத்தாலும், ஏக்கத்தாலும் உன் ஆத்துமா பெருமூச்சுவிட்டு மெலிகிறது.

நீ சில வேளைகளில் ஆ, எனக்கு புறாவைப்போல் செட்டைகளிருந்தால் நலமாயிருக்கும், அப்பொழுது நான் பறந்து பரலோகம் சேர்ந்து என் இரட்சகரைக் கண்ணாரக் கண்டு, எனக்காக மிகுந்த பாடுகளை அனுபவித்த அந்தப் பரிசுத்த பாதங்களையும், விலாவையும், முதுகையும், தோளையும், தலையையும் தழுவி அணைத்து முத்தமிட்டு அந்த மார்பிலே படுத்து நித்திரை செய்து திரும்புவேனே என்று நினைக்கிறாய். உன் ஆத்துமநேசரின் அன்பால், ஆ, நான் அவர் மானுடாவதாரமெடுத்த காலத்தில் தான் பிறந்தேனோ? அப்படிப் பிறந்திருந்தால் ஒரு பெரிய நட்சத்திரத்தைப் பார்த்துப் பிரயாணப்பட்டு, இரட்சகரை அவருடைய பாலியத்தில் சந்தித்த கீழ்த்திசை சாஸ்திரிகளுக்கு மூட்டை சுமக்கும் கூலிக் காரனாயாவது வேலையமர்ந்து கூடப்போய்ப் பார்த்திருப் பேனேயென்றும் நினைக்கிறாய். ஆ, தோமாவின் தம்பியே! [1]கண்டு விசுவாசிப்பதிலும், காணாமல் விசுவாசிப்பதே சிறந்தது என்று ஆத்துமநேசர் சொன்னதை மறந்தாயோ? [2]அநேக தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும், இராஜாக்களும் உன்னைப் போல விரும்பியும், காணாமலும், கேளாமலும் போனார்கள் என்று உனக்குத் தெரியுமே.

---

[1]*யோ.20:29.* [2]*மத். 13:17; லூ. 10:24*

சில தடவை நீ உன் ஆத்துமநேசர்மேல் நேசமான வெறி கொண்டு, ஆ, நான் ஆத்துமநேசர் பிறந்த தொழுவமாயாவது, அவரைப் போர்த்தின கந்தையாயாவது, அவர் படுத்த புல்லணையாயாவது இருந்தேனோ? அவர் தரித்திருந்த தையலில்லா அங்கியாயாவது, போட்டு மிதித்த பாதரட்சையாயாவது, பவனி போன கழுதையாயாவது இருந்தேனோ? என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுகிறாய்.

சில சமயங்களில் நீ பரிசுத்த ஆவியானவருடைய பாதத்தில் போய் விழுந்து : ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறேன்; இயேசுவை எனக்குக் காட்டும் என்று மன்றாடுகிறாய்.

நீ இயேசுவைக் காணவும், அவர் பாதத்தில் உன் பாவங்களைக் கொட்டவும், அவர் திரு இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினால் பாவமன்னிப்பையும், அவர் பாடுகளினால் உண்டான மற்றெல்லா நன்மைகளையும் பெற்றுக் கொள்ளவும் ஆசைப்படுகிறதைப்போல மேலான காரியம் வேறொன்றில்லை. ஏனெனில், [1]அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரசிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. பரம பிதாவாகிய தேவன் [2]தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். [3]மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, பிதாவானவர் அவரையே அதிபதியாகவும், இரட்சகராகவும் தமது வலது கரத்தினால் உயர்த்தியிருக்கிறார்; ஆகையால், நீ அவரைப் பார்க்கும்படி தேட வேண்டியது நியாயந்தான்.

மகா ஏரோது இரட்சகரைப் பாலியத்தில் [4]கொல்ல வேண்டும் என்று எண்ணி அவரைப் பார்க்க விரும்பினான். எருசலேமின் [5]இடையர் ஓர் அதிசயக் காட்சியால் ஏவப்பட்டு பாலிய இயேசுவைப் பார்க்கப் போனார்கள். [6]எருசலேமுக்குப்

[1]அப். 4:12, [2]யோ. 3:16, [3]அப். 5:31, [4]மத். 2:13, [5]லூ.2:8-18, [6]யோ. 12:20,21.

பண்டிகைக்கு வந்த கிரேக்கர் இயேசுவின் அற்புத வல்லமையைக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கப் போனார்கள். கலிலேயா நாட்டு அதிபதியாகிய [1]ஏரோது, இயேசுவைக் குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியினாலும், அவரால் செய்யப்படும் அற்புதங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியிருந்ததாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைப்பட்டான். [2]ஆயக்காரனாகிய சகேயு இயேசு எப்படிப்பட்டவரோ என்று மாத்திரம் அறியும்படி அவரைப் பார்க்க வகைதேடினார். [3]சமாரியர் இயேசு மேசியாவோ அல்லவோ என்று தீர்மானிக்கும்படியாகப் பார்க்க வந்தார்கள். நீயோ பாவபாரத்தால் நொந்து, பாவ மன்னிப்புப் பெறும்படியாகவே ஆத்துமநேசராகிய இயேசுவைத் தரிசிக்கும்படி ஆசை கொண்டிருக்கிறாய். உன் ஆசையைப் பரலோகத்திலுள்ள தேவதூதர் எல்லாரும் புகழ்ந்து பேசுகிறார்கள்; உன்னிமித்தம் தேவதூதருக்குள் சந்தோஷம் பெருகுகிறது.

[4]மானானது தண்ணீர் நதிகளின் மேல் வாஞ்சையாயிருப்பது போல் உன் ஆத்துமா இரட்சகரின் [5]அன்பின் சமுத்திர ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் ஆராய்ந்துணர அபேட்சிக்கிறது.

ஆத்துமநேசரைப் பார்க்கும்படி நீ சில வேளை உன் தியான ஏணியில் ஏறிக் கொண்டு வெகுதூரத்தில் தெரிகிற பழைய ஏதேனுக்குள்ளும், சீனாய் மலைக்குள்ளும், சாலொமோனின் ஆலயத்துக்குள்ளும், தாபோரின் மேட்டிலும், பிதாவின் வலது பாரிசத்திலும் பார்க்கிறாய்.

ஏதேனுக்குக் கிழக்கே வைக்கப்பட்டிருக்கும் [6]கேரூபீனும், சுடரொளிப் பட்டயத்தின் பிரகாசமும் ஆத்தும நேசரை உனக்கு மறைக்கின்றன. சீனாயின் புகைக்காடும், மின்னலும், புயலும் ஆத்தும நேசரை நீ கண்டு களிகூராதபடி உன்னைக் கலங்கச் செய்கின்றன. சாலொமோன் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தை

---

[1] லூக்.23:8, [2] லூக்.19:3, [3] யோ. 4:30, [4] லூ. 15:10. [5] சங். 42:1. [6] எபே. 3:18; ஆதி. 3:24

மூடும் பனிகளின் புகையும், தூப தீபங்களின் புகையும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும், பரிசுத்த ஸ்தலத்துக்கு மத்தியில் தொங்கும் தடிப்பான திரைச்சீலையும் ஆத்துமநேசரை நீ பகிரங்கமாய்த் தரிசித்துத் தியானிக்காதபடி தடை செய்கின்றன. தாபோரின் மேட்டில்[1] இறங்கின ஒளியுள்ள மேகம் ஆத்மநேசரை நீ காணவிடாதபடி செய்கிறதுமன்றி, உன்னைக் குப்புற விழவும் பண்ணுகிறது. பிதாவின் சிங்காசனத்தின் அக்கினிச் சக்கரங்களின் ஒளியும், சூழ நின்று துதிக்கும் தேவதூதரின் கூட்டமும் ஆத்தும நேசரை உனக்கு மறைக்கும்.

ஆத்துமாவே! உன் நேசரை நீ பூரணமாய்ப் பார்க்கும்படி கல்வாரி மலைக்குத் தியானப் பிரயாணஞ்செய். அந்த ஒரே இடத்தில் மாத்திரம் நீ உன் இரட்சகரின் மானிட தேகத்தையும், அதிலே அவர் உனக்காக அனுபவித்த குரூரமான பாடுகளையும் தெளிவாகக் கண்டுகொள்வாய். அதையே உன் தியான ஸ்தானமாக்கிக்கொள். அங்கே ஆத்துமநேசர் நீ பார்த்து ஆராய்ந்து தியானித்து, முத்தமிட்டு, வாழ்த்தி வரம் பெற்றுக் கொள்ளும்படி நீ விரும்புகிற நீசக்கோலமாய் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினார். அந்தக் கல்வாரி மலையிலிருந்து நீ தியானித்தால் ஆத்துமநேசரின் அற்புத உற்பவ முதல் அதிசய பரமேறுதல் மட்டுமுள்ள பூரண அன்பும், அவ்வன்பு வெளிப்படுத்தப்பட்ட மானிட தேக உறுப்புக்களும் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். ஆத்தும நேசரின் மானிட தேகத்தையும், அந்தத் தேகத்தில் அவர் பட்ட பாடுகளையும் தியானிக்கையில் உன் ஆத்துமாவின் கண்கள் 'பழைய ஏற்பாடு', 'புதிய ஏற்பாடு' என்று அழைக்கப்படும் இரண்டு தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியாய்ப் பார்க்கட்டும்; அவ்வழியாய் ஆத்துமநேசரைப் பற்றிய சகல விஷயமும் தெளிவாய்த் தெரியும். எல்லாவற்றுக்கும் மேலாக பரிசுத்த ஆவி உன்மேல் இறங்கும்படி ஜெபஞ்செய்ய வேண்டும். அவர் உன் தியானத்தில் இல்லாவிட்டால் நீ கண்ணாரக் கண்டும் அறியாதவனாயிருப்பாய். பாக்கியமுள்ள தேவனுடைய மகிமையான சுவிசேடத்தின் ஒளி உன்

---

[1] மத் 17:5,6.

ஆத்துமாவில் பிரகாசிக்கும்படி தேவாவியானவர் உன்னுடைய புத்தியின் கண்களுக்குக் கலிக்கமிட்டுத் திறப்பாராக.

**பரிசுத்தாவிக்காக ஜெபம்**

தேவனே! உமது பரிசுத்த ஆவியை அனுப்பி அவருடைய ஒளியினாலே விசுவாசமுள்ள உமது ஜனத்தின் இருதயங்களைப் போதித்துப் பிரகாசிப்பித்தீரே. அந்த ஆவியினாலே என் ஆத்துமநேசராகிய இயேசுவின் அன்பை விளக்கும் எல்லாக் காரியங்களையுங் குறித்து நான் சரியாய்த் தியானிக்கவும் அவருடைய பரிசுத்த தேற்றரவினாலே இடைவிடாமல் சந்தோஷிக்கவும் கட்டளையிட வேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

# ஆத்துமநேசரின்
# அங்க மகத்துவம்

## தியானம் 1

## ஆத்துமநேசரின் பாதம் (1 ஆம் பங்கு)

### வேதம்

[1]"உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்.' [2]"சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக் கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்.' [3]"பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் வஸ்திரம் தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்'. [4]"மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்'.

### போதனை

மேலே காட்டிய வேத வசனங்களைக் கொண்டு நாம் இரட்சகரின் பாதத்தை நோக்கும் போது, மூன்று விசேஷித்த குறிப்புகள் வெளியாகின்றன:

1. கிறிஸ்துவின் **பாதத்துக்குக் கல்லும் பஞ்சுபோன்றது தான்.** இது உண்மையென்று நிலை நாட்ட வேத சாட்சியாவது தூதர் சாட்சியாவது அவசரமில்லை; சாத்தானே இப்படி அறிக்கையிடுகிறான். பிசாசு கிறிஸ்துவை வனத்தில் சோதித்த போது, [5]உமது பாதம் கல்லில் இடறாது என்பதாகப் பக்தருக்குச் சொல்லப்பட்ட வாசகம் இரட்சகருக்கே செல்லும் என்று அறிக்கையிடுகிறேன். இரட்சகரின் பாதம் கல்லில் இடறாதானால், அவருடைய பாதங்களுக்குக் கல்லும் பஞ்சு போன்றது தானே.

2. இயேசுவின் பாதம் **பிணியாளிகளின் வைத்தியசாலை.** இயேசுவின் காலத்தில் ஒரே ஒரு வைத்தியசாலை மாத்திரம்

---

[1] லூ.4:11, [2] மத்.15:30, [3] லூ. 8:35, [4] லூ. 10:39, [5] சங். 91:12.

இருந்ததாக வாசிக்கிறோம். அது [1]ஐந்து மண்டபங்கள் உள்ளதாய், பெதஸ்தாக் குளத்தோரத்தில் இருந்தது. அக்குளத்தில் அற்புதங்கள் நடவாவிட்டால் அந்த மண்டபமும் இராது. இயேசுவின் பாதம் ஒரு பெரிய வைத்தியசாலையா யிருப்பதால் வேறு கட்டடம் அவசியமில்லை. இவ்வுலகத்தில் தொத்து வியாதிகளையிட்டு, பல வைத்தியசாலைகளைக் கட்டுகிறார்கள். இயேசுவின் பாத வைத்தியசாலையில் வியாதிகள் தொத்தினதில்லை. 'சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர்' முதலிய அநேக நோயாளிகள் ஒன்றாகக் கூடி அவர் பாதத்தில் கிடந்தார்கள்; அவர்களை அவர் சுகமாக்கினார். மேலும் லோக வைத்தியசாலைகளிலிருக்கும் பிண அறை இயேசுவின் பாத வைத்தியசாலையில் இல்லவே இல்லை; 'எல்லோரும்' சுகமானார்கள்.

**3. இயேசுவின் பாதம் பிணி நீங்கினவர்களின் பள்ளிக் கூடம்.** பிசாசுகள் நீங்கின மனுஷனும், மரியாளும் அவருடைய பாதத்தையே பள்ளிக்கூடமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பாவ நோயால் வருத்தப்பட்டு, பாவ பாரத்தால் நொந்து போனவர்களுக்குப் பாவமன்னிப்பாகிய இளைப்பாறுதலை இயேசு கொடுக்கிறது மாத்திரமல்ல; [2] சாந்தமாயும், மனத் தாழ்மையாயுமிருக்கிற என்னிடத்தில் வந்து ஞான மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளுங்கள் என்றும் அழைக்கிறார்.

**தியானம்**

ஆத்துமாவே! இம்மட்டும் நீ [3] அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உன் பிரயாசத்தையும் செலவழிக்கிறவனைப் போலிருந்தாய்; இப்பொழுதோ இயேசுவின் பாதத்தைக் கண்டு தியானிக்கப் போகிறாய்; இன்று முதல் உனக்கு வாழ்வும் பாக்கியமும் துவங்கிற்று என்று அறிந்துகொள்.

---

[1] யோ.5:2, [2] மத்.11:29, [3] ஏசா. 55:2,

## இயேசுவின் பாதம்

ஆத்துமாவே! [1] மேகங்களைத் தமது இரதமாக்கி, [2] காற்றின் செட்டைகளில் பறக்கிறவருக்குக் கல் பஞ்சாகிறது. அதிசயமோ? அதிசயமல்ல. என் ஆத்துமாவின் பாதங்களோ பொருளாசை என்னும் முட்களாலும், பெருமை அகங்காரம் என்னும் கற்களாலும், அடிக்கடி காயப்பட்டிருக்கின்றன; துன்பங்களும், வியாகுலங்களும் என் ஆத்துமாவின் பாதங்களைக் கொப்புளம் ஆக்கிவிடுகின்றன. இன்று நான் கல்லும் பஞ்சாக இருக்கும் கனம் பொருந்திய பாதமடைந்தேன். அவர் பொற்பாதத்தின் துணையால் என் ஆத்தும பாதங்களை இனி ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது. இரட்சண்ய பாதையில் என் பாவங்கள் சறுக்காமல்போம்; ஏனெனில் கல்லும் பஞ்சாய்ப்போகும். பரிசுத்த பாதம் எனக்கு முன்சென்று சகல இடர்களையும், ஆவிக்குரிய மோசங்களையும் ஒதுக்கிவிட்டு, என் பாதங்களைச் சமாதானத்தின் வழியிலே வைக்கும்.

ஆத்துமாவே! இதிலும் அதிகமாய் என் இரட்சகரின் பாதம் எனக்கு நல்ல வைத்தியசாலையாயிருக்கிறது. இனி நான் ஏன் என் பாவநோய் தீரும்படியாக 'எங்கே ஓடுவேன் பாதகனானேன்' என்று புலம்பித் திரிய வேண்டும்? பாவநாசராய் வந்தவர் பாதத்தில் சரீரப்பிரகாரமான சப்பாணிக்கும், குருடனுக்கும், ஊனனுக்கும், ஊமையனுக்கும் இடங்கிடைத்த போது எனக்கேன் கிடையாது? கிடைக்கும் என்பது மெய். நன்மை செய்ய இயலாத ஆத்தும சப்பாணிக்கு இதோ, நன்மை செய்ய ஆசையும் தீர்மானமும் எழும்புகின்றன. ஆத்துமநேசரைக் காணாமலிருந்த கண்ணுக்குத் தெளிவு பிறக்கிறது. ஆத்துமாவின் சத்துவங்கள் முறிந்து போய், பாவப் புழுதியில் புரண்டு உருண்டு கிடந்த ஊனனாகிய எனக்கு, அந்தப் பொற்பாதத்திலிருந்து புறப்படும் தைலம் புது அவ்யவங்களைத் தருகிறது. பாவமன்னிப்பின் சந்தோஷ கீதங்கள் ஒருநாளும் எழும்பாத என் ஊமை ஆத்துமாவின் உதடுகள் துதியின் கீதம் பாட இதோ துடிக்கிறது. இந்த அருள் பாதத்தைவிட்டால் மெத்த மோசம். என் ஆத்தும நோய்களைத் தீர்த்துவிடுகிற ஐயன் பாதத்தை

---

[1] ஏசா. 19:1, [2] சங்.18:10,

எப்படிவிட்டுப்பிரிவேன்! [1] உபத்திரவங்களே! வியாகுலங்களே! துன்பங்களே! நாச மோசங்களே! பட்டயங்களே! அதிகாரங்களே! வல்லமைகளே! ஆ, பசியே! நிர்வாணமே! மரணமே! ஜீவனே! உயர்வே! தாழ்வே! உங்களில் எவர்களானாலும் நீங்கள் எல்லோரும் ஏகமாயானாலும் என் இயேசுவின் பாதத்திலிருந்து என்னைப் பிரிக்க முடியாது.

என் ஆத்துமா இயேசுவின் பாதத்திலிருந்து பெற்றுக் கொண்ட நன்மைக்காக அதை அவர் பாதத்திலேயே வைத்து வைப்பேன். அது என் வைத்தியசாலையாய் மாத்திரமல்ல, பள்ளிக்கூடமாயுமிருக்கிறது. பரி, பவுலுக்குக் கமாலியேலின் பாதம் பள்ளிக்கூடமாயிருந்தது; நானோ இயேசுவின் பாத பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கொண்டேன். அன்பு, சந்தோஷம், சமாதானம், தாழ்மை, நீடிய சாந்தம், தயவு, உண்மை, பொறுமை, இச்சையடக்கம், லோகத்தை வெறுத்தல், பரத்தை நோக்குதல் முதலிய ஞானசாஸ்திரங்களையும், பிசாசு, பாவம், உலகம் என்னும் பலத்த சத்துருக்களை ஜெயிப்பதற்கேற்ற யுத்த சாஸ்திரத்தையும் ஆயுத பரீட்சையையும் அங்கே படிப்பேனாக.

**விசுவாச வணக்கம்**

***கல்லும் பஞ்சாகும் கனமுள்ள பாதமே! நமஸ்காரம்.***
***பிணியாளிகளின் வைத்தியசாலையே! நமஸ்காரம்***
***பிணிதீர்ந்தோர் பள்ளிக்கூடமே! நமஸ்காரம்.***

**ஜெபம்**

என் இரட்சகராகிய இயேசுநாதரே! இதோ நீர் சிலுவையில் தொங்குகிறவராய் எனக்கு விளங்குகிறீர்; உமது பரிசுத்த பாதங்களை ஆராய்ந்து தியானிக்க அருள்புரிந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். தயவுள்ள இயேசுவே என் ஆத்துமாவின் பாதங்கள் பாவ வழிகளில் செல்லாதபடி கிருபை செய்யும். என் முந்தின பாவங்களையெல்லாம் உமது பாதத்தில் படைக்கிறேன்; இதைவிட என் ஆத்தும பூமியில் விளைந்த பலன் வேறொன்றுமில்லை, இனிப் பாவஞ் செய்யாதபடி பலம் கிடைக்க உமது பாதத்தைக்கொண்டு என்னைத் தொடும். என்

[1] ரோ.8:36-39.

ஆத்தும வாழ்வுக்கேற்ற சகல அறிவையும் அடைந்து உம்மை மகிமைப்படுத்தும்படி உமது பரிசுத்த ஆவியைக் கொண்டு எனக்குப் படிப்பித்தருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

**துதி**

**பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்**
**மகிமை உண்டாவதாக;**
**ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான**
**சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக, ஆமென்.**

# தியானம் 2

## ஆத்தும நேசரின் பாதம் (2 ஆம் பங்கு)

### வேதம்

[1]'ஜெப ஆலயத் தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, அவரைக் (இயேசுவைக்) கண்டவுடனே, அவர் பாதத்திலே விழுந்து...அவரை மிகவும் வேண்டிக் கொண்டான்.' [2] 'அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண்ணின் தாயாகிய ஒரு ஸ்திரீ அவரைக் குறித்துக் கேள்விப்பட்டு, வந்து அவர் பாதத்தில் விழுந்தாள்.' [3] 'அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகம்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான்.' [4] 'மரியாள் வந்து அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்தாள்.' [5]'பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் (இயேசு) பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்.' [6]'அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும், கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி... சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.'

### போதனை

முந்தின தியானத்தில் நீ இயேசுவின் பாத மகத்துவ பரீட்சையினால் அவர் பாதத்துக்குக் கல்லும் பஞ்சாகும் என்றும், சகல நோய்களுக்கும் அதுவே வைத்தியசாலை என்றும், நோய் தீர்ந்தவர்களுக்கு அதுவே பாடசாலை என்றும் அறிந்தாய். அவற்றோடுகூட வேறு சில மகத்துவங்களையும் நீ அறிந்துகொள்.

1. இயேசுவின் பாதம் விசுவாசி கும்பிடும் தெய்வீக சொரூபமாயிருக்கிறது. யவீரு என்பவனும், பேய்பிடித்த ஒரு பெண்ணின் தாயும், நன்றியறிதலுள்ள ஒரு குஷ்டரோகியும், லாசருவின் சகோதரியாகிய மரியாளும் இயேசுவின் பாதத்தைக்

---

[1] மா. 5:22,23 [2] மா.7:25, [3] லூ. 17:15,16. [4] யோ. 11:32. [5] லூ. 7:37,38. [6] எபி. 2:7.

கும்பிடும் சொரூபமாக்கி இருக்கிறார்கள். [1]கீழ்த் திசை சாஸ்திரிகளும் அவர் பாதத்தில் விழுந்துதான் பணிந்திருக்க வேண்டும்; நாமும் பாவமன்னிப்பாகிய பாக்கியத்தையடைய அந்தப் பாதத்தில் விழவேண்டியதே.

2. இயேசுவின் பாதம் பாவி முகரும் புஷ்பக்கொத்தாயிருக்கிறது. கேடு செய்யும்படி முத்தமிட்ட [2]யோவாபுக்கும், [3] யூதாசுக்கும் கனமுள்ள கன்னம் புஷ்பம் போலிருந்தது. மட்டற்ற உலக அன்பு [4]கழுத்தைப் பிடித்துக் கொண்டு முத்தமிட ஏவுகிறது; இரட்சண்ய அன்போ இயேசுவின் பாதத்தைப் புஷ்பமாய் வைத்து முத்தமிடுகிறது.

3. சராசரம் அனைத்தும் இயேசுவின் பாதத்துக்குள் இருக்கிறது. அவரே எல்லாவற்றுக்கும் மேலான ஏக சக்கராதிபதியாய் இருக்கிறார். [5] பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமான காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் ஆத்தும நேசரின் பாதத்துக்குள் இருக்கின்றன. இந்த மகத்துவத்தை நாம் இப்போது தெளிவாய் அறியமுடியவில்லை. எல்லாம் அவருடைய பாதத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறதின் பூரணகாட்சி, இரட்சகர் [6]சீயோன் மலையில் வந்து நிற்கும் போது வெளிப்படும்.

**தியானம்**

ஆத்துமாவே! என் இரட்சகரின் பாதம் எவ்வளவோ அழகானது! கொல்கொதா மலையின் மேல் நான் பார்க்கும் பாதங்கள் பாவியாகிய எனக்குச் சமாதானத்தைக் கூறும் பொற்பாதங்களாய் விளங்குகின்றன. யவீரு தன் மகளின் மரண அவஸ்தை நீங்க வேண்டுமென்று விழுந்தான்; நானோ பாவத்தால் சாகிற நிலைமையிலிருக்கிற என் ஆத்துமாவாகிய மகனுக்கு நித்திய ஜீவன் வேண்டுமென்று விழுவேனாக. ஒரு தாய் தன் மகளைப் பிடித்த பேயைத் துரத்தும்படி விழுந்தாள்;

[1] மத். 2:11. [2] சாமு 20:9. [3] லூ. 22:47. [4] லூ. 15:20; அப்.20:38. [5] கொலோ. 1:16. [6] வெளி. 14:1.

நானோ என் ஆத்துமாவில் பலவிதமாய்க் குடி கொண்டிருக்கிற கூட்டமான லேகியோன்களை அவர் துரத்தும்படி விழுவேனாக. சமாரியக் குஷ்டரோகி தான் பெற்ற நன்மைக்காக ஸ்தோத்திரித்து இயேசுவின் பாதத்தில் விழுந்தான்; நானோ என் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து என் நோய்களையெல்லாம் குணமாக்கி என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு என்னைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடிசூட்டும்படி இதோ விழுகிறேன். இரட்சகா! உமது பாதத்தண்டை இரட்சண்யம் உண்டு; பாவியான ஸ்திரீயை நான் பின்பற்றுவேனாக. பாவத்துக்காக நான் சிந்தும் கண்ணீரே என் இரட்சகருக்கு நான் பூசப்போகும் பரிமள தைலம். ஸ்திரீகளின் கனமுள்ள தலைமயிருக்கொத்த என் உயர்ந்த கிரியைகளையும், சுயநீதி எல்லாவற்றையும் என் இரட்சகரின் பாதங்களைத் துடைக்கும் கந்தைகளாகப் பிரயோகிப்பேனாக. என் ஆத்துமாவை இனி ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது. என்னைச் சேதப்படுத்துபவையெல்லாவற்றையும் இரட்சகர் தமது பாதத்துக்குள் வைத்து மிதித்துக் கொண்டிருக்கிறார். கல்லறையைப் பார்க்கப் போன ஸ்திரீகள் இரட்சகரின் [1] பாதங்களைத் தழுவினது போல நானும் தழுவுகிறேன். பாவியான ஸ்திரீயைப் போல் சாஷ்டாங்கமாய் விழுந்து, அந்தப் பரிசுத்த பாதங்களை முத்தமிடப் போகிறேன். நான் அவர் பாதத்தை முத்தமிடாவிட்டால் [2]கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்! அப்பொழுது நான் என்ன செய்வேன்? பாவியான ஸ்திரீயைப்போல் அவருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து முத்தமிடுவேனாக.

ஆ! என் ஆத்துமாவின் மல்லிகை மலரே, முல்லைப்பூவே, கல்வாரிமலைத் தாமரையின் மலர்ந்த புஷ்பமே, உமது பாதமே கதி. இதோ, அதை முத்தமிடுகிறேன். முத்தமிடுகிறேன். ஆ, என் நேசர் பாதம் எவ்வாறு பரிமளிக்கிறது! நான் ஒரு தைலத்தையும் பூசவில்லையே! ஆ, இதென்ன பரிமளம்! இதென்ன பரிமளம்! பாவியான ஸ்திரீ அநேக ஆண்டுகளுக்கு முன் பூசின நளத

---

[1] *மத். 28:9* [2] *சங். 2:12*

தைலத்தின் பரிமளமோ? ....இல்லை, இல்லை. இரட்சண்ய பரிமளம்! இரட்சண்ய பரிமளம்!

**விசுவாச வணக்கம்**

நான் கும்பிடும் சொரூபமே நமஸ்காரம்.

நான் முகரும் புஷ்பமே நமஸ்காரம்.

நான் அடங்கும் பாதமே நமஸ்காரம்.

**ஜெபம்**

எல்லா மனிதரையும் உண்டாக்கினவரும், உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாதவரும், பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறவருமாயிருக்கிற இரக்கமுள்ள பிதாவே! யூதர், மகமதியர், அஞ்ஞானிகள், வேதப்புரட்டர் யாவருக்கும் இரங்கி, அவர்களுடைய சகல அறியாமையையும், இருதயக் கடினத்தையும், உமது வசனத்தை அசட்டை பண்ணும் துணிகரத்தையும் அவர்களை விட்டு நீக்கியருளும்: இந்த ஜாதிகளும், அவர்களுடைய அதிகாரிகளும், இராஜாக்களும் உமக்கு விரோதமாகவும் நீர் அபிஷேகம் பண்ணின இயேசுவுக்கு விரோதமாகவும் கொந்தளித்து எழும்பி நின்று, மெய்யாகவே கூட்டங்கூடி ஆலோசனை பண்ணுகிறார்கள். கர்த்தாவே அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் ஆலோசனைகளை அபத்தமாக்கி உமது குமாரனாகிய எங்கள் இரட்சகரை மகிமைப்படுத்தியருளும். அவர்களெல்லாரையும் திருப்பி, அவர்கள் இரட்சிப்படையும் படியாக, அவர்களை உமது திருக்குமாரனுடைய பாதபடியாக்க வேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.......

**துதி**

**பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்**

**மகிமை உண்டாவதாக;**

**ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான**

**சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

# தியானம் 3

## ஆத்தும நேசரின் கால்

### வேதம்

[1]'இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின் மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்'. [2] 'இயேசு கலிலேயா நாடெங்கும் சுற்றி நடந்து அவர்களுடைய ஜெபாலயங்களில் உபதேசித்து இராஜ்யத்தின் சுவிசேடத்தைப் பிரசங்கித்து,' [3]'சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து .... 'சகல நோயாளிகளையும் குணமாக்கினார்.' [4]'அவர் தேவாலயத்திலே உலாவிக் கொண்டிருக்கையில் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்தார்கள்.' [5] 'போர்ச்சேவகர் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய கால் எலும்புகளை முறிக்கவில்லை. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேத வாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.' [6] 'இயேசு அவர்களை நோக்கி : நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள் என்று சொல்லித் தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

### போதனை

மேலே எழுதிய வசனங்களால் நமது இரட்சகரின் மகத்துவங்கள் வெளியாகின்றன. அவைகளை ஒவ்வொன்றாய் ஆராய்வோமாக.

*1.* ஆத்துமநேசரின் காலுக்கு ஜலம் தலையாகிறது. ஜலத்தைக் கடந்த சில குறிப்புக்கள் வேதத்தில் உண்டு. [7]இஸ்ரவேலர் செங்கடலையும், எலிசா எலியா என்ற பக்தர், [8]யோர்தான் நதியையும் கடக்கும்படி அவசியம் நேரிட்ட போது ஜலத்தின் மேல் நடந்து அல்ல, அதைப் பிரியச் செய்து கடந்தார்கள். நமது இரட்சகரோ, ஒரு நாள் இரவின் செய்து கடந்தார்கள். நமது இரட்சகரோ, ஒரு நாள் இரவின் நாலாம் ஜாமத்தில் கலிலேயாக் கடலின்மேல் நடந்தார். [9] தண்ணீரைத் தமது கைப்பிடியால் அளந்து, [10] சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து, ஆழமான

[1] மத். 14:25. [2] மத்.4:23. [3] மத். 9:35. [4] மா. 11:27; [5] யோ. 19:33,36. [6] லூ. 24:39,40. [7] யாத். 14:21,22.; [8] 2இரா.2:8. [9] ஏசா. 40:12.; [10] சங். 33:7.

ஜலங்களைப் பொக்கிஷ வைப்பாக வைத்து, [1]மேகங்களைத் தமது இரதமாக்கி, [2]தண்ணீரை வஸ்திரத்திலேகட்டி, [3] தமது மேல் வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி, [4] தமக்குக் கடலிலே பாதையையும், திரண்ட தண்ணீரிலே வழியையும் ஏற்படுத்தி, [5]சமுத்திரத்திற்குள் தமது குதிரைகளோடு ஏறி சவாரி செய்து வருகிற மகத்துவ தேவனுடைய கால்களுக்கு ஜலம் தரையாகிறது அதிசயமோ?

2. ஆத்துமநேசருடைய கால் [6] எங்கும் நன்மை செய்கிறதாய்ச் சுற்றித்திரிந்தது. அது சகல பட்டணங்களையும், கிராமங்களையும், மேட்டையும், பள்ளத்தையும், வனாந்தரங்களையும் வழி நடைகளையும் கடந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது. பரலோகத்தின் பொற்றள வீதிகளைப் பரிசுத்தப்படுத்தின கால் யூதருடைய கானானையும், புறஜாதிகளுடைய கலிலேயாவையும், எகிப்தையும் முப்பத்து மூன்று வருஷம் பரிசுத்தப் படுத்திற்று. அது சென்ற ஊர்களெல்லாம் சுவிசேஷ வாழ்வால் செழித்தன; அது கடந்த வீதிகளெல்லாம் இரட்சண்ய மகிழ்ச்சியால் மகிழ்ந்தன; அது மிதித்த வீடெல்லாம் வியாதிகள் நீங்கின.

3. ஆத்துமநேசருடைய கால்கள் இவ்வளவு மகத்துவங்கள் பொருந்தியிருந்தும் ஒருநாள் அதில் ஆணிகள் கடாவப்பட்டு மரத்தோடு இறுக்கப்பட்டன.

## தியானம்

ஆத்துமாவே! களிகூரு; உன் ஆத்துமநேசரின் காலுக்குத் தண்ணீரும் தரைதான். உனக்கும் ஒருநாள் மரணம் என்னும் யோர்தான் மணல் வனம்போல் ஆகிவிடும். அவர் தமது தாசருக்குக் கடலைத் தரையாக்குவார். [7]பேதுரு கொஞ்சத்தூரம் கடலில் நடந்தான். அவிசுவாசத்தால் மேற்கொள்ளப்பட்டும் அவனுக்குத் தண்ணீர் தரையாயிற்று. நீ மரணபரியந்தம் உன்

---

[1] ஏசா. 19:1. [2] நீதி. 30:4. [3] சங். 104:3 [4] சங். 77:19; [5] ஆப. 3:15; யோபு 9:8 [6] அப் 10:38.
[7] மத். 14;29.

விசுவாசத்தின் உண்மையில் நிலைத்திருந்தால், அந்தப் பாக்கியம் [1] மரண யோர்தானைக் கடக்கையில் உனக்கும் அருளப்படும்.

சாவின் யோர்தான் பொங்கிவந்து
அலைமுடும் நேரத்தில்
அதின்மேலும் வெற்றிதந்து
என்னைச் சேர்ப்பார் மோட்சத்தில்
நிதவாழ்த்தல்
அவர்க்கென்றும் பாடுவேன்

ஆத்துமநேசரின் கால்கள் தன் மகத்துவங்களை எண்ணிப் பெருமை கொண்டதுமில்லை, சுகத்தைத் தேடினதுமில்லை. அது பிரசங்கஞ் செய்ய ஊரெங்கும் சென்றது, குணமளிக்க குடிசை எங்கும் நடந்தது; அது தேவாலயப் பிரகாரங்களைச் சுற்றியும் வந்தது. எருசலேமே உன் வாசல்களில் என் கால்கள் நிற்பதாக.

மேலே சொல்லிய மகத்துவங்களை நான் தியானித்து மகிழ்ந்தாலும், இதோ நான் விசுவாசத்தால் நோக்கும் இரும் பாணியின் நீளமும், பருமனும், கூர்மையும், அதினால் ஆத்துமநேசருடைய காலில் உண்டாயிருக்கும் காயங்களும் என் மகிழ்ச்சியை மாற்றி, என் ஆத்துமாவை முக்காடிட்டு அழப்பண்ணுகிறதே; ஐயோ, நான் என்ன செய்வேன்! இம்மட்டும் ஆத்துமநேசரின் பாதமும் [2]காலும் பசும்பொன் ஆதாரங்களின் மேல் நிற்கிற வெள்ளைக்கல் தூணைப்போல் என் ஆத்துமாவுக்கு விளங்கின. இப்பொழுதோ அது பாடுகளுக்குட்பட்டிருக்கிறதைக் காண்கிறேன்.

ஆ, மகத்துவக் காலே! இதென்ன அதிசயம்! உனக்குக் கல்லும் பஞ்சானது, கடலும் தரையானதே; இந்த இரும்பாணி உன்னை ஊடுருவிப் பாயாமல், உன் கணுக்காலில் தங்கக் கொலுசாய் அல்லது இரத்தினச் சலங்கையாய் மாறாத முகாந்தரமென்ன?

ஆதாமின் மகனே! உன் பாவத்தால்
ஏவாளின் மகளே! உன் தோஷத்தால்.

ஆத்துமாவே! உன் பாவத்தால் ஆத்துமநேசரின் காலில் இந்த

---

[1] சங். 48:14, [2] உன். 5:15.

இரும்பாணி கடாவப்பட்டதென்று சொல்லும் துயரச் சொற்கள் உன் ஆத்துமாவின் காதில் விழவில்லையா? விழுந்தும், ஏன் கவனியாமலிருக்கிறாய்? குப்புற விழு, உன்னிமித்தம் பாடுகளுக்குட்பட்ட அந்தப் பரிசுத்தக் காலைப் பிடித்து மன்னிப்புக் கேள்.

### விசுவாச வணக்கம்

விழுந்தேன், விழுந்தேன் ஐயா அந்தப் பொற்பாதத்தில்

விழுந்தேன், விழுந்தேன் ஐயா அந்தச் சீர்பாதத்தில்.

அதிலிருந்து ஒழுகும் இரத்தம் என் பாவ ஆத்துமாவில் விழும்படி இதோ ஏந்துகிறேன். ஆவியே துணை, தேவாவியே துணை.

### பரவசம்

என் இரட்சகரின் கால்கள் பெரிய ஆணிகளால் கடாவப் பட்டு இரத்தம் பிரளயமாய்ப் பாய்ந்தும், முகமலர்ச்சி உடையவராய்க் காணப்படுகிறாரே; அது ஏன்? என் பாவ விஷம் அவர் சிரசிலேறி நோவைத் தணித்துவிடுகிறதோ அல்லது சேவகர் கொடுத்த கசப்புக்காடியின் வெறிதான் அவர் நோவைத் தணிக்கிறதோ? இல்லை. இல்லை, அப்பா. உன் மேலுள்ள அன்பின் விஷமும் வெறியும், அவர் சிரசிலேறி நோவைக் குறைக்கின்றனவேயன்றி வேறல்ல.

### விசுவாச வணக்கம்

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்,

குருவேசுநாதர் பாதம் கும்பிடுகிறேன்.

### ஜெபம்

எங்கள் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவே! நான் அடிக்கடி நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியை யினாலும், உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அகங்கரித்துப் பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் செய்தேன். இந்தக் குற்றங்களைக் குறித்து நான் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு முழுமனதோடே துக்கப்படுகிறேன்.

அவைகள் என்னாலே சுமக்கக்கூடாத பாரம், நான் செய்த யாவையும் உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் மன்னித்து, இனி எப்பொழுதும் உமக்கு ஊழியஞ் செய்து உமக்குப் பிரியமாய் நடந்துவரும் படி கிருபை செய்தருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.....

**துதி**

**சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமென்.**

# தியானம் 4

## ஆத்தும நேசரின் காலெலும்பு

### வேதம்

[1]''அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது,' [2]''நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி' தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.' [3]''நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.'

### போதனை

ஆத்துமநேசரின் எலும்புகளைக் குறித்து மூன்று குறிப்புக் களைப் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம்:

1. இரட்சகரின் எலும்புகள் முறிக்கப்படவில்லை. இதில் ஒரு பெரிய விசேஷமிருக்கிறதென்பதைச் சமஸ்த உலகமும் அறியும்படி பரி. யோவான் அதை ஒரு தீர்க்கதரிசன வாசகத்தால் உறுதிப்படுத்துகிறார். [4]''அவருடைய எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படவில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது' என்று சொல்லுகிறார். இதனாலே தற்செயலாக இயேசுவின் கால் விட்டுவிடப்படாமல் தேவ தீர்மானமாய் விட்டுவிடப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். பூர்வ பஸ்கா ஆட்டின் சட்டம் கிறிஸ்துவாகிய நம்முடைய பஸ்காவில் முடிவுபெறும்படி தேவன் திருவுளமானார். சாதாரண உலகத்துக்கு இது விளங்காது. உலகத்தின் தற்செயல் தேவனின் தீர்மானம் என்று இந்த விஷயத்தில் சொல்ல வேண்டும்.

---

[1] யோ.19:33,36. [2] லூ. 24:39,40. [3] எபே.5:30. [4] யாத். 12:46; எண். 9:12, சங். 35:20.

2. இயேசு பாடுபட்ட திருமேனியோடுதான் மூன்றாம் நாளில் எழுந்திருந்தார். சிலர் சொல்லிக்கொண்டபடி அவர் மாயத் தோற்றமான உடலைத் தமது அவதார காலத்தில் தரித்திருக்கவுமில்லை, உயிர்த்தெழுந்த பின்பு ஆவேசமாய் மாத்திரம் இருக்கவுமில்லை.

3. இயேசுவின் எலும்புகள் தேவனுக்கும் மனுஷருக்கு முள்ள நீங்காத ஐக்கியத்துக் கடையாளமாக இருந்ததால், சிமியோன் இரட்சகரை ஓர் அடையாள புருஷன் என்று சொல்லுகிறார்.[1] ஒரு காலத்தில் யாக்கோபின் ஏணி வானத்தையும் பூமியையும் ஒன்றுபடுத்திற்று. இயேசுவின் திருமேனி தேவனையும் மனுஷனையும் அவருடைய மனுஷீக சரீரத்தால் ஒன்றுபடுத்திற்று.

## தியானம்

ஆத்துமாவே! உன் இரட்சகரின் எலும்புகள் சிலுவையில் முறிக்கப்படாததினாலே அவர் உனக்குப் பஸ்கா ஆடாக விளங்குகிறார். 'உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி அவரே' யூதருக்கு வருடத்துக்கொருமுறை பஸ்கா வரும், உனக்கோ எந்நேரமும் பஸ்கா பண்டிகைதான். உன் இரட்சகருடைய பாடுகளை, உன்னுடைய பாவங்களைப் பற்றிய உத்தம மனஸ்தாபத்தோடு நினைவுகூரும் போதெல்லாம் நீ பஸ்காவை ஆசரித்து வருகிறாய்; உனக்கு இரட்சகர் முழு பஸ்காவாக விளங்குகிறார்.

ஆ! என் இரட்சகருடைய கால்கள் சத்துருக்கள் நினைத்தபடி முறிக்கப்பட்டது மெய்யானால், கிறிஸ்தவ மார்க்கத்துக்கு எவ்வளவு நிந்தையாகும். அவர் ஆகாயத்தில் தொங்கிமாண்டதே அவதூறுக்கு ஏதுவாயிருந்தால், இது அதிலும் அதிகமாய் இருக்குமல்லவா? உலகத்தின் மக்கள் அங்கவீனமுள்ள தேவர்களைக் கும்பிடுகிறார்கள்; உம்முடைய பிள்ளைகளாகிய நாங்களும் அப்படிப்பட்ட ஒரு தேவனை வணங்குகிறோம் என்று எங்களைப் பழிக்காதபடி நீர் உமது திருக்குமாரனின் கால்களை முறிக்கவில்லையாக்கும்!

[1] லூா. 2:34

அருமை இரட்சகா! இதோ சிலுவையண்டை வருகிறேன். உமது பக்கத்தில் தொங்கும் இருவரும் முடமானார்கள்; நீர் பூரண புருஷனாய் விளங்குகிறீர். சத்துருக்கள் குற்றவாளிகளில் உம்மைப் பிரதானமானவராக்கும்படி நடுவில் அறைந்தார்கள்; இப்பொழுது அவர்களே மற்றிருவருடைய கால்களை முறித்து உம்மை முறியாமல் விட்டு, நீர் அவர்களோடு சேர்ந்தவரல்ல வென்பதை நிலைநாட்டுகிறார்கள். கால் முறிக்கப்பட்ட இருவரில் ஒருவன் உம்மண்டைக்கு மனந்திரும்பின உத்தமனாயிருந்த போதிலும், நீர் அவனுக்குச் சமானமானவரல்ல என்று உலகத்துக்கு விளங்கும்படி உமது கால்கள் முறிக்கப்படவில்லை போலும்! உம்முடைய திருக்காலைத் தறிக்கும்படி சத்துருக்கள் ஆசைப்பட்டார்கள். ஆனால் அவர்கள் ஆயுதங்கள் தங்கள் தலைகளை உம்முடைய பாதங்களுக்கு விரோதமாய் எழுப்ப தேவன் இடங்கொடுக்கவில்லை. ஆபிரகாம் ஈசாக்கின் தலையை வெட்டப்போகும் போது தேவதூதன் வந்து தடுத்தான். கிறிஸ்துவின் மரணமோ சத்துருக்களுடைய ஆயுதங்களைக் கீழே போடவும், 'அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை' என்ற தீர்க்கதரிசனத்தைக் கூறவும் ஒரு தூதனைப் போல விளங்கிற்று என்று சொல்லலாம்.

சிலுவையில் தொங்குகிறவர்களின் காலெலும்புகளை முறிக்க வந்த ஆட்கள் முதலாவது, கிறிஸ்துவைத் தொடாமல் மற்றிருவருடைய கால்களையும் முறித்துப்போட்டுக் கடைசியாக வந்த காரணமென்ன என்று என் ஆத்துமா கேட்கிறது. அதற்கு என் ஆவி சொல்லுகிற உத்தரவு என்னவென்றால்: கால் முறிக்கப்பட்டால் விலா குத்தப்படாது. அப்பொழுது இரண்டு தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாமல்போம்; கால் முறிக்கப்படாவிட்டால் விலா குத்தப்படும். அப்பொழுது இரண்டு தீர்க்க தரிசனங்களும் நிறைவேறுகின்றன என்கிறது.

ஆ, பிதாவே! பக்தரின் தலைமயிர் முதலாய் உமது சித்தமில்லாமல் தரையிலே விழக்கூடாதே, உமது திருக்குமாரனின் கால் கீழேவிழுமா? பரலோகத்தின் வீதிகளில் நடந்து திரிந்து,

தூதர் சேனையின் சிரசுகள் எல்லாம் வணங்கும் கால்களை நீர் இகழ்ச்சிக்கு ஒப்புக் கொடுக்கமாட்டீர்.

என் அருமை இரட்சகரே! நீர் பாடுபட்ட திருமேனியோடே எழுந்திருந்தீர். உம்முடைய உயிர்த்தெழுதலை மறுக்கிறவர்களெல்லாருக்கும் நீர் இன்றைக்கும் உமது மாம்சமும் எலும்புகளுமுள்ள உயிர்த்தெழுந்த உடலைக் காட்டுகிறது போலிருக்கிறது. ஆண்டவரே! உமது மார்க்க விரோதிகள் எல்லோரும் உமது உயிர்த்தெழுதலையே ஆட்சேபிக்கப் பார்க்கிறார்கள்; அவர்கள் அனைவரும் அதை விசுவாசிக்கும்படி உம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அவர்கள் இருதயத்தில் உணர்த்தியருளும்.

ஆத்தும நேசரே! இன்னும் உமது எலும்பில் ஓர் இரகசியத்தைக் காண்கிறேன். உமக்கும் எங்களுக்கும் ஒரு நீங்காத ஐக்கியத்திற்கும் அது அடையாளமாய் இருக்கிறது. நீர் எங்களுக்கு அடையாள கர்த்தருமாய் இருக்கிறீர். எங்களையும் உம்மையும் உமது மனுஷீக சரீரத்தால் ஒன்றாக்கிவிட்டீர். நீர் தலையும் நாங்கள் அவயவமுமாயிருக்கிறோம் என்கிற இரகசியத்தை தேவனாகிய நீர் அவதாரமெடுத்த சரீரத்தால் வெளிப்படுத்துகிறீர். இந்த ஐக்கியத்தை அறிந்தவன் ஞானி; இதை அனுஷ்டிக்கிறவனே சரியான யோகி; இந்த ஐக்கியத்தை அனுபவிக்கிறவனே பக்தன்.

ஆ, நீசப் பாவியே! உனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைக் கண்டாயா? நீ தேவகுமாரனுடைய சரீரத்தின் அவயவமாயும் அவருடைய மாம்சத்துக்கும் எலும்புகளுக்கும் உரியவனாயும் இருக்கிறாய். இதைவிட உனக்கென்ன மேலான அந்தஸ்து வேண்டும் அப்பா சொல்லு? எள்ளுக்குள் எண்ணெய் போலும், மலருக்குள் மணம் போலும், உப்புக்குள் சாரம் போலும் நீ தேவனோடு அந்நியோந்நியமாகிறதிலும் மேலான பாக்கியம் ஒன்று உண்டானால் சொல்லு.

### பரவசம்

இயேசுவே! தேவதூதருக்குள்ளே அடிக்கடி ஒரு பேச்சு நடக்கிறதை என் காது கேட்கிறது; அதோடு பாதாளலோகத்துப்

பூதகணங்களுக்குள்ளும் விசேஷமாய் ஒரு பேச்சு நடக்கிறதை என் காது கேட்கிறது.

**இயேசு** : அதென்ன பேச்சப்பா?

**பாவி** : தேவதூதர் கூடி ஆதாமின் மக்களுக்குக் கிடைத்திருக்கிற வாழ்வைக் கண்டாயா? அவர்கள் தங்கள் சிருஷ்டிகரோடு எவ்வளவு பலமாய் ஒட்டப்பட்டுப் போனார்கள் பாருங்கள். நாம் தேவதூதராய் இராமல் மனுஷராய் இருந்தோமானால் நன்றாய் இருக்குமே என்று ஏங்கித் தங்கள் ஏக்கத்தின் முடிவிலே இந்தச் சிலாக்கியங்களை எந்தச் சிருஷ்டிக்கும் செய்ததில்லை என்று சொல்லுகிறார்கள். பூதகணங்களோ தங்கள் பற்களைக் கடித்துக் கொண்டு, இவ்வளவு பெரிய தயவு மனுமக்களுக்குக் கிடைக்குமென்று நாங்கள் அறிந்திருந்தால், அவர்களைப் பாவிகளாக்கியிருக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள்.

ஆ, தூதர்களே! மனுமக்களை இவ்வளவாய் நேசித்த ஆத்துமநேசரைக் கீர்த்தனைகளோடே புகழ்ந்து போற்றுங்கள்.

ஆ, பூதகணங்களே! உங்கள் பற்கடிப்புகளை உங்கள் மட்டுக்கும், உங்கள் முறுமுறுப்புகளை உங்கள் பாதாள மட்டுக்கும் வைத்துக் கொள்ளுங்கள்; விசுவாசத்தாலும் அன்பாலும் தேவனோடு ஒட்டப்பட்ட என்னை வெட்டிப்போட உன்னாலும் ஆகாது, உன் தலைவனாகிய பெயெல்செபூவாலும் ஆகாது.

**ஜெபம்**

என் நித்திய நேசத்துக்குப் பாத்திரமான இயேசு சுவாமி! அடியான் உமது காலை விசுவாசத்தால் முத்தமிடும்படி உத்தரவு தாரும். ஆ! நான் தழுவி என் இருதயத்தின் மடியின்மேல் வைத்துக் கொள்ளும். உமது காலெலும்புகள் பகைவரின் பட்டயத்துக்குத் தப்பினதில் நீர் என் பங்கானீர். உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட பஸ்காவே! உமது பலியில் எனக்குப் பங்கு தாரும்; என் ஆத்துமா பலி பதார்த்தங்களைத் தின்று கொழுக்கும் தயவை அருளும்.

உமது பரிசுத்த எலும்புகளோடும் மாம்சத்தோடும் எழுந்தருளின இயேசுவே! இந்து தேசத்தார் அனைவரும் உமது உயிர்த்தெழுதலின் புத்திரராய் இருக்கும்படி கிருபை செய்யும். ஆ! அவர்கள் எலும்பு காணுமட்டும் பரிசோதிக்கிறது போல, உம்மைப்பற்றிப் பூரண ஆராய்ச்சி செய்யும்படி கிருபை செய்யும். ஆ, இயேசு சுவாமி! எங்கள் தேசத்தார் இன்னமும் கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போவானேன். இந்தியாவின் மக்கள் பரலோகத்தின் படிகளில் கும்பல் கும்பலாய் மிதித்தேறும்படி உமது உயிர்த்தெழுதலின் பலனை வருஷித்தருளும்; உமது மேலுள்ள எங்கள் அந்நியோந்நியத்தை அதிகப்படுத்தி, இப்பூலோக முழுவதையும் பரலோகம் போல் ஆக்கியருளும் சுவாமி. ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

**துதி**

**தெய்வீக இரட்சகரும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவருமான இயேசு சுவாமிக்குப் பரலோகத்திலும், பூலோகத்திலும், அனுதினமும் துதியுண்டாவதாக. ஆமென், ஆமென்.**

# தியானம் 5

## ஆத்தும நேசரின் முழங்கால்

### வேதம்

[1]"அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவரோடேகூடப் போனார்கள். அவ்விடத்தில் சேர்ந்த பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறம் போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆகிலும், என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்".

### போதனை

இரட்சகருடைய முழங்காலைப்பற்றி ஒரே ஒரு குறிப்பு மாத்திரம் சுவிசேடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். கிறிஸ்து [2] கெத்செமனேயில் பட்ட பாடுகளைக் குறித்து முதல் மூன்று சுவிசேடகரும் விவரமாய் எழுதினாலும், பரி. லூக்கா மாத்திரம் அவர் முழங்கால் படியிட்டதாகச் சொல்லியிருக்கிறார்.

இப்படி அவர் முழங்கால் படியிடுவானேன்? அப்படி என்ன ஆபத்து அவருக்கு வந்துவிட்டது? தமது பாவத்தாலோ? பசியினாலோ? வீடுவாசல் இல்லாமலோ? எடுத்த காரியம் சித்தியாகாததினாலோ? அல்ல, அல்ல. பின்னை ஏன் முழங்கால் படியிட்டார்? நமது பாவத்தைத் தொலைக்க, நம்மைப் பசியாற்ற நமக்கு வீடுகட்ட, நமது இரட்சிப்புக்கென்று அவர் எடுத்த காரியத்தைச் சித்திக்கச் செய்யவே இப்படி முழங்கால்படியிட்டார் என்று நினைக்க வேண்டியது.

---

[1] லூ. 22:39-42.

[2] மத். 26:36-46; மா. 14:32-42

## தியானம்

ஆ, என் பாவமே! என் குடும்பத்தின் பாவமே! என் ஊரின் பாவமே! என் தேசத்தின் பாவமே! சர்வலோகத்தின் பாவமே நீ அல்லோ என் ஆத்துமநேசரின் முழங்காலை முடக்கப்பண்ணி விட்டாய்.

[1] கர்த்தரோ நம்மெல்லோருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். ஏவாளின் முதலாம் பாவம் முதல் உலகத்தின் கடைசிப் பாவம் மட்டும் ஒவ்வொன்றாய் அவர் மேல் விழுந்தன. அவை அனைத்தையும் முப்பத்து மூன்று வருஷமாய் நடந்து சுமந்தவர் இப்பொழுது முழங்காலில் நின்று சுமக்கிறாராக்கும்! கெத்செமனேயிலே கொண்டுபோய் அவ்வளவையும் ஒரே நேரத்தில் மொத்தமாய்த் தொலைத்துவிட
[2] குப்புற விழுந்து இறக்கப் பார்த்தார், அது விழவில்லை;
[3] தரையிலே விழுந்து இறக்கப் பார்த்தார், அது இறங்கவில்லை. ஏவாள் முதல் மானிடருக்குள் மெதுவாய் ஏறின பாவத்தை ஒரே நேரத்தில் அல்ல, மெதுவாய் இறக்கி வைக்க முழங்கால் படியிட்டாராக்கும்! பிதா பரலோகத்திலிருந்து கலக்கிக் கொண்டு வந்த தேவகோபம் என்னும் பாவ ஆக்கினையின் பானத்தை மரியாதையோடு வாங்கிக் குடிக்கும்படி முழங்கால் படியிட்டாராக்கும்! பிதாவாகிய தேவன் சர்வலோகத்தின் பாவங்களுக்காக அவரைத் தண்டிக்கும்படி தமது சகல பரிசுத்த தூதரோடும் கெத்செமனேயில் சிம்மாசனபதியாய் வீற்றிருக்கிறார்; ஆகையால் என் ஆத்துமநேசர் அவருடைய ஆசனத்துக்கு முன்பாக முழங்காலில் நிற்கிறாராக்கும்! என் ஆத்துமா மோட்சத்தில் குடியிருக்கும்படி நித்தியமான ஒரு வாசஸ்தலத்தை எடுப்பிக்க ஒலிவமலையில் உளிபடாத கல்லும், கெத்செமனேயில் உத்திரமும் வெட்டி உருவேற்படுத்தும்படி முழங்கால்படியிட்டாராக்கும்! என் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்து அக்கினி அம்புகளை எ யும் சத்துருக்களை மடக்கும்படி முழங்காலில் நின்று ஞான பானங்களை எய்கிறாராக்கும்! எலியாவைப் பிடிக்கும்படி அகசியாவால் அனுப்பப்பட்ட மூன்றாவது சேனைத்தலைவன்,

[1] ஏசா. 53:6. [2] மத். 26:39. [3] மா. 14:35

எலியாவுக்கு முன்பாக முழங்கால்படியிட்டுத் தன் பிராணனும் தன் ஜனத்தின் பிராணனும் தப்பும்படி மன்றாடினான். என் ஆத்துமநேசர், பிதாவின் கோபமும் என்னையும் சர்வலோகத்தையும் பட்சிக்க எழும்பி வந்த அக்கினியும் தம்மை மாத்திரம் தொடரவும் நம்மைத் தொடராதிருக்கவும் முழங்கால்படியிட்டு வேண்டிக் கொள்ளுகிறாராக்கும். ஆத்து மாவே, களிகூரு. உன் ஆபத்துகளையெல்லாம் மாற்றி ஆசீர்வாதங்களை அருளும்படி உன் இரட்சகர் முழங்கால் படியிட்டார்.

### ஜெபம்

எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும். தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும். மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக் கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள் மேல் என்றைக்கும் கோபமாயிராமல் இரங்கிப் பொறுத்தருளும். தயவுள்ள கர்த்தாவே, இரங்கிப் பொறுத்தருளும்.

எங்கள் நிமித்தம் முழங்காலில் நின்ற இரட்சகரே! மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி, விழுந்தவர்களைக் கை தூக்கி, கடைசியில் சாத்தானை எங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போட வேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

### விசுவாச வணக்கம்

இயேசுவே! கிருபையாயிரும்.

கிறிஸ்துவே! கிருபையாயிரும்.

இயேசுவே! கிருபையாயிரும். ஆமென்.

### துதி

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. ஆமென்.

# தியானம் 6

## ஆத்தும நேசரின் அரை

### வேதம்

[1]"அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில், தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து: போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீடருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு, திரும்ப உட்கார்ந்தார்.'

### போதனை

இரட்சகரின் அரையைப்பற்றி ஒரே ஒரு நேரான குறிப்பு மாத்திரம் புதிய ஏற்பாட்டில் வருகிறது. ஆத்துமநேசர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி, பஸ்கா போஜனத்தைப் புசிக்கையில் தமது சீஷருடைய கால்களைக் கழுவி, தாம் அரையில் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் ஒவ்வொரு சீஷனுடைய கால்களையும் துடைத்தார். யோவான் அப்போஸ்தலன் இந்தச் செய்கையைப்பற்றி நுட்பமாய்ச் சொல்லும் சில வார்த்தைகள் அதின் விசேஷத்தை நன்றாய் உணர்த்துகின்றன. இரட்சகர் தாம் பந்தியில் அணிந்து கொண்டிருந்த

*வஸ்திரத்தைக் கழற்றினார்.*
*அதைத் தூரத்தில் சுருட்டிவைத்தார்*
*ஒரு சீலையைப்போய் எடுத்தார்.*
*அதை அரையிலே கட்டிக்கொண்டார்.*
*ஒரு பாத்திரத்தைத் தேடி எடுத்தார்.*
*தண்ணீர் குடத்தண்டை போனார்.*
*தண்ணீர் வார்த்தார்.*
*அப்புறம் ஒரு சீடன் கால்களைக் கழுவ இழுத்தார்.*

---

[1] யோ. 13:2-5, 12.

**அவன் கால்களைக் கழுவினார்.**
**கழுவினபின் துடைத்தார்.**
**பின்பு இரண்டாம் சீடன் கால்களைக் கழுவினார்.**
**கழுவினபின் துடைத்தார்.**
**இப்படியே பன்னிருவரையும் கழுவினார்.**
**பன்னிருவரையும் துடைத்தார்.**
**எல்லோரையும் கழுவினபின்பு பாத்திரத்தையும்**
**சீலையையும் அப்பாலே வைத்துவிட்டார்.**
**பின்பு தமது வஸ்திரங்களைப் போட்டார்.**
**திரும்பப் பழையபடி உட்கார்ந்தார்.**

என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லும் குறிப்புகள் ஒவ்வொன்றும் மனதில் தைக்கப்பாயும் ஞான பாணம்போல் இருக்கிறது. [1] இரட்சகர் அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ ரூபமாய்க் காணப்பட்டுத் தாழ்ந்ததும் போதாதென்று அடிமையின் நீச ஊழியம் மட்டும் தம்மைத் தாழ்த்தினார். [2] பாவந் தவிர மற்றெல்லாவற்றிலும் அவர் நம்மைப் போலானார். [3] பூர்வ ஆசாரியர் விசித்திரமான கச்சையைக் கட்டிக் கொண்டு பணிவிடை செய்தார்கள். [4] சாமுவேலும் தாவீதும் சணல் நூல் சால்வையைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். தேவதூதர் பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு தங்கள் ஊழியங்களுக்குப் புறப்பட்டார்கள். [5] தாவீதை வல்லமையினாலும் மகிழ்ச்சியினாலும் இடைகட்டினவரும், [6] பராக்கிரமத்தையும் நீதியையும் சத்தியத்தையும் கச்சையாகவும், மகிமையையும் மகத்துவத்தையும் பட்டயமாகவும் அரையிலே கட்டிக்கொண்டு, ஜெயமாய் எழுந்தருளுகிறவருமான சர்வலோக இராசா திடீரென்று போஜனத்தை விட்டெழுந்து, தமது வஸ்திரத்தைக் கழற்றி வைத்துவிட்டு இழிவான ஒரு துவாலையை அரையிலே கட்டிக்கொண்டு ஊழியஞ்செய்யப் புறப்பட்டு, ஒவ்வொரு சீஷனுடைய கால்களையும் கழுவித் துடைக்கிறார். [7] நான் உழியங்கொள்ளும் படிக்கல்ல, ஊழியஞ் செய்யும்படிக்கு வந்தேன் என்று தாம் சொன்ன வாசகத்தை இங்கே மெய்ப்பிக்கிறார்.

---

[1] பிலி. 2:8. [2] எபி. 4:15. [3] யாத். 29:5 [4] 1 சாமு. 2:18: 2 சாமு. 6:14; வெளி. 15:6.
[5] சங் 18:39; 30:11. [6] சங். 45:3; ஏசா. 11:5, [7] மத். 20:28.

**தியானம்**

ஆத்துமாவே! இந்த உன்னதத் தாழ்மையை உணர்ந்து கொள். இரட்சகர் ஒன்றும் பேசாமல் திடீரென்று பந்தியிலிருந்து எழும்புகிறார். ஏன் எழும்புகிறார்? தமது சொந்த மகத்துவத்தை வெளிப்படுத்தவா? தமது தேவமகிமையின் பிரகாசத்தைத் திறக்கவா? சீஷர் தமது பாதத்தில் விழுந்து வணங்கவா எழும்புகிறார்? இல்லை, சீஷரின் கால்களைக் கழுவித் தமது அரையிலிருக்கும் துணியால் துடைக்க எழும்புகிறார்.

அவர் தமது வஸ்திரங்களைக் கழற்றி வைக்கிறார். அது அழுக்காகிப் போகுமென்றோ? ஆ இயேசுவே! அது அழுக்கானால் தான் என்ன? அது அழுக்குப்படாமல் ரோமைச் சேவகருக்குக் கிடைக்கவா கழற்றிவைத்தீர்? நீர் செய்யப் போகும் தாழ்ந்த ஊழியத்துக்கு உமது அங்கியின் அகன்ற தொங்கல்கள் தடையாயிராதபடியாகவா கழற்றினீர்? ஆ, நீர் கழுவும் தண்ணீரினால் அது நனையாமல் உமது இரத்த வேர்வையினால் நனையும்படியாகவா கழற்றினீர்? நீர் உமது தெய்வீகமாகிய அங்கியைக் கழற்றி வைத்துவிட்டு வந்தீர், இப்போது உமது குருமுறைக்குரிய அங்கியையும் கழற்றிப்போட்டு வேலைக்காரன் வேஷமானீரே!

ஆத்துமாவே! இரட்சகர் ஒவ்வொரு சீஷனுடைய கால்களைக் கழுவுவதையும், நன்றாய்த் துடைப்பதையும் நீ நுட்பமாய்க் கவனித்துக்கொள். இயேசு குனிகிறார். ஒரு சீஷன் பாதத்தைப் பிடித்திழுத்து பாத்திரத்துக்குள் வைக்கிறார், கழுவுகிறார். அவன் விரல் இடைகளையும் கழுவுகிறார்; அப்புறம் துடைக்கிறார். அது முடிந்தபின்பு அடுத்த காலைப் பிடித்திழுக்கிறார். அதையும் கழுவித் துடைக்கிறார்; அப்படியே அவர் வரிசையாய்க் கழுவித் துடைத்துக் கொண்டு தம்மைக் காட்டிக் கொடுக்கப்போகிற யூதாசின் கால்களையும் கழுவித் துடைக்கிறார். இதென்ன தாழ்மை! இதென்ன அன்பு? இது மனுஷ தாழ்மைக்குத் தாழ்ந்து காணுகிறது; மனுஷ அன்புக்கு மாறுபட்டுத் தோன்றுகிறது. யூதாசும் அவனைப் போலொத்தவர்களும் மனந்திரும்பினால், அவர்கள் பாவங்களையும் மன்னித்துக்

கழுவிவிட சித்தமாயிருக்கிறேன் என்று அச்செய்கை உணர்த்துகிறது போல இருக்கிறது. இப்படியாக ஆத்துமநேசர் பன்னிரெண்டு பேருடைய இருபத்து நான்கு கால்களையும் ஒவ்வொன்றாய்க் கழுவி, ஒவ்வொன்றாய்த் துடைத்து முடிக்க எவ்வளவோ நேரம் சென்றிருக்கும்! அவ்வளவு நேரமும் அவருடைய இடுப்பு நிமிரவில்லை! இவையெல்லாவற்றையும் ஆத்துமாவே! தியானித்துப் பரவசப்படு.

## விசுவாசப் பரவசம்

ஆ! மரித்துப்போன பக்தரின் ஆவிகளே! அரசரின் ஆத்துமாக்களே! மந்திரி பிரதானிகளின் ஜீவன்களே! நீங்கள் உங்கள் ஊழியக்காரனின் பாதங்களைப் பிடித்துக் கழுவித் துடைத்ததுண்டோ சொல்லுங்கள்.

மறுமொழி: இல்லை, இல்லை, இல்லை.

ஆ, காபிரியேலே! மிகாவேலே! கேருபீன்களே! சேராபீன்களே! தேவ தூதர்களின் சர்வசேனையே! நீங்கள் அடிக்கடி ஆண்டவரின் கட்டளைப்படி [1] இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர் களினிமித்தமாக ஊழியம் செய்யும்படி எங்கள் பூலோகத்துக்கு வந்ததுண்டே. உங்கள் பூலோக ஊழியங்களில் யாருடைய பாதங்களையாவது கழுவித் துடைத்த துண்டோ? சொல்லுங்கள்.

மறுமொழி : இல்லை, இல்லை, இல்லை.

தேவகுமாரன் இவ்வளவாய் உங்களை நேசிக்கிறார், உங்கள் நிமித்தம் இவ்வளவாய்த் தம்மைத் தாழ்த்திக் கொள்ளுவார் என்று நாங்கள் அறியாமல் போனோம். இப்பொழுதோ அவருடைய தாழ்மையை அறிந்துகொண்டு.

வெட்கமடைகிறோம்
வெட்கமடைகிறோம்

என்று அவர்கள் அனைவரும் ஏகமாய் அறிக்கையிடுகிற சத்தம் என் ஆத்துமாவின் காதில் தொனிக்கிறது.

வாசிக்கிறவனே! நீ எப்போதாவது உன் ஊழியக்காரனுடைய கால்களைக் கழுவி, உன்னுடைய அன்பையும் தாழ்மையையும் காட்டினதுண்டா? சொல்லு.

---

[1] எபி. 1:14.

மறுமொழி : இல்லை, இல்லை, இல்லை.
'தாழ்ந்தார் அவர்; உயர்ந்தோம் நாம்.
இதென்ன மாறுதல்?
இதுஉன்னத சிநேகம்தான்
இதன்பின் ஆழங்கள்

ஆகையால் என் உன்னதப் பெருமையை ஆத்துமநேசரின் உன்னதத் தாழ்மையின் கீழ் வைப்பேனாக. அவருடைய தாழ்மை என்னுடைய பெருமையை மிதிக்கட்டும், தாழ்த்தட்டும், நசுக்கட்டும்.

## விசுவாச வணக்கம்

உன்னத தாழ்மையே நமஸ்காரம்
அனாதி அன்பே நமஸ்காரம். ஆமென்

## விசுவாசக் கழுவுதல்

நீதியைக் கட்டாகவும், சத்தியத்தைக் கச்சையாகவும் அணிந்துகொள்ளும் பரிசுத்த அரையே! உன்னைத் தழுவி முத்தமிடுகிறேன். உமது அரையிலே தொங்கும் மகிமையும் மகத்துவமுமாகிய பட்டயங்கள் பாவியாகிய என்னைச் சங்காரஞ்செய்யாதபடி கிருபைசெய்யும். தாவீதை வல்லமையாலும் மகிழ்ச்சியாலும் இடைக்கட்டினவரே! பாவத்தை மேற்கொள்ளும் வல்லமையையும், பாவமன்னிப்பின் மகிழ்ச்சியையும் உமது பரிசுத்த அரையிலிருந்து அடியேன் பெற்றுக் கொள்ளுவேனாக. ஆமென்.

## ஜெபம்

தேவனே, எப்பொழுதும் இரக்கஞ்செய்கிறதும் மன்னிக்கிறதும் உமக்குச் சுபாவமும் லட்சணமுமாயிருக்கிறது. பாவ பாரத்தால் இளைத்து பாவச்சங்கிலிகளால் கட்டுண்டு கிடக்கும் அடியாளைக் கண்ணோக்கிப் பார்த்து, என் பாரத்தை இறக்கி, கட்டுகளை அவிழ்த்து இளைப்பாறுதலையும் விடுதலையையும் அருளிச் செய்ய வேண்டுமென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.........

**துதி**

**தேவனே உம்மைத் துதிக்கிறோம், உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.**

**கிறிஸ்துவே! தேவரீர் மகிமையின் இராசா.**

# தியானம் 7

## ஆத்தும நேசரின் வயிறு

### வேதம்

[1]"இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்துக்குக் கொண்டு போகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. [2]"காலையிலே அவர் நகரத்திற்குத் திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று'. [3]"மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள்: இதோ, போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்றார்கள்'. [4]"இயேசு பிரயாணத்தினால் இளைப் படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்... அப்பொழுது சமாரிய நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார்.' [5]"அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன்' என்றார்.

### போதனை

பிதாவின் வார்த்தையாகிய குமாரனானவர், பாக்கியவதியான கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்திலே உற்பவித்த போது அவளுடைய தன்மையில் மனுஷ தன்மையைப் பூரணமாய்த் தரித்துக் கொண்டார். ஆகையால், நமது இரட்சகர் தமது சரீர அவயவங்களிலும், அவற்றின் தத்துவங்களிலுமெல்லாம் பாவந்தவிர எல்லா விஷயத்திலும் நம்மைப் போலவே இருந்தார். நம்மைப்போல் அவருடைய சரீரத்தில் குடல்களும், அதன் உறுப்புக்களும் இருந்தன. முன்னே காட்டிய வேத வாக்கியங்களால் இரட்சகருடைய வயிற்றைக் குறித்து அடுத்த மூன்று குறிப்புக்களை அறிந்து கொள்ளுகிறோம்.

1. **அவருக்குப் பசியிருந்தது:** நமது இரட்சகர் இரண்டு தரம் பசியுடையவராய் இருந்தாரென்று நேராய் அறிகிறோம். ஒரு தரம் வனாந்தரத்திலும், வேறொருதரம் பாடுபட்ட வாரத்திலும் பசியடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

---

[1] மத். 4:1,2. [2] மத். 21:18. [3] மத். 11:19 [4] யோ. 4:6-8 [5] யோ. 19:28.

(a) **வனாந்தரப் பசி** : நமது இரட்சகர் தீட்சைபெற்ற வுடனே மனுஷ சஞ்சாரமில்லாத ஒரு வனத்தில் நாற்பதுநாள் உபவாசமிருந்தார், அந்த உபவாச நாட்கள் முடிந்த பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று.

(b) **பாடுபட்டவராய்ப் பசி:** இரட்சகர் பாடுபட்ட வாரத்தில் அவர் பகலெல்லாம் எருசலேமிலும், இரவெல்லாம் ஒலிவமலையிலும் தங்கினார். அவர் தமது சரீர போஜனத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தமது சரீரத்தைப் பாவிகளுக்கு நித்திய போஜனமாக்கும் பெருங் காரியத்தைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

*2.* **இரட்சகருக்குத் தாகமிருந்தது** : ஆத்துமநேசர் பசியடைந்ததாக இரண்டுதரம் சொல்லப்பட்டிருக்கிறது போலவே, அவர் தாகமடைந்ததாகவும் இரண்டு தரம் நேராய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

(a) சமாரிய நாட்டிலுள்ள சீகார் என்னப்பட்ட கிணற்றருகே வந்தபோது அவருக்குத் தாகம் உண்டாயிற்று.

(b) இயேசு சிலுவையில் தொங்குகிற போதும் அவருக்குத் தாகம் உண்டாயிற்று. இரட்சகர் தமது தெய்வீகத்தோடு மனுஷ சாயலையும், மனுஷீகத்தையும் சேர்த்துக் கொள்ளாவிட்டால், அவர் பசியடையவும் தாகமடையவும் அவசரமில்லை.

*3.* ஆத்துமநேசர் மாம்சக் குடல்கள் உள்ளவராய் வெளிப்பட்டதினால் அவருக்கு இரண்டு வகையான பட்டப் பேர்கள் உண்டாயின. அந்த பட்டப் பேர்களைச் சொல்ல என் வாய் கூசுகிறது, என் நாவு தடுமாறுகிறது, அப்பேர்களின் அட்சரங்களைப் பார்க்க என் கண் மயங்குகிறது; அப்பேர்களை மற்றவர்கள் சொல்லும்போது கேட்க என் காதுக்குப் பிரியமில்லை. அந்த பட்டப் பேர்களை மெதுவான சத்தத்தால் உனக்குச் சொல்லுகிறேன், கேள்:

**போஜனப் பிரியன்,**

**மதுபானப் பிரியன்**

என்ற பேர்கள் தான். [1]'சமாதானக் கர்த்தர்,' [2] அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா,' [3] 'இஸ்ரவேலின் இராஜா' முதலிய பேர்களுக்கும்,

போஜனப் பிரியன்,
மதுபானப் பிரியன்

என்ற இழிவான பேர்களுக்கும் எவ்வளவோ பேதமிருக்கிறது.

## தியானம்

ஆத்துமாவே! இம்மட்டும் நீ இரட்சகரின் பாதங்களையும், கால்களையும், முழங்கால்களையும், அரையையும் தியானித்தாயே; இப்போது தாயின் மடியில் பால் குடிக்கப் படுத்திருக்கிற குழந்தையைப் போல விசுவாசத்தால் இயேசுவின் மடியிலிருந்து கொண்டு அவருடைய வயிற்றை நோக்கி ஆராய்ந்து தியானம் செய்.

இரட்சகரே! நீர் பசியாயிருந்த நாற்பது நாட்களிலும் நீர் சிருஷ்டித்த குடலுள்ள சிருஷ்டி யாவும் பசியற்று இருந்தன. சிங்கம் தன் இரையைத் தின்று அந்தக் காட்டில் கெர்ச்சிக்கிறது; யானை தன் பெரும் வயிற்றை நிரப்பிக் கொண்டு சுகமாய்ப் படுத்திருக்கிறது; எருது புல்லை மேய்ந்து முக்காரம் போடுகிறது; ஆடு தழைகளைத் தின்று தண்ணீர் குடித்துத் தலைதெறிக்கக் குதித்துத் துள்ளுகிறது; நாட்டுக் குருவிகள் திருப்தியினால் கூவிப் பாடுகின்றன; வனத்து வண்டுகள் கீச்சிடுகின்றன, நீர் ஒருவரே பசியாயிருக்கிறீர், உமது குடலே இரைகிறது, இது ஏன்? இரட்சகா! இது ஏன்?

உன் பசியை ஆற்ற
உன் பசியை மாற்ற

நீர் பசியடைந்ததோடு தாகமும் அடைகிறீர். உமது தாகம் உம்முடைய யூத அந்தஸ்தையும் மறந்து போகச் செய்கிறது. ஒரு சமாரிய ஸ்திரீயினிடத்தில் ஒரு மிடறு தண்ணீருக்குக் கெஞ்சுகிறீர். அவள் உடனே ஜலம் மொண்டு கொடாமல் வாதாடிக் காலம் போக்கினாள். நீரோ அவளுக்கு ஜீவத் தண்ணீரின் ஊற்றை அவ்வளவு நேரத்துக்குள்ளாக அவர் இருதயத்தில் வெட்டி, அவள் ஆத்தும தாகத்தைத் தீர்த்துவிட்டீர். சிலுவையில் தொங்கின

[1] ஆதி. 49:10 [2] ஏசா. 9:6 [3] யோ. 12:13

போதும் நீர் தாகத்துக்குக் கேட்டீர். சிசெராவைக் கொல்ல நினைத்த ஸ்திரீ தண்ணீரைக் கேட்ட வாய்க்குப் பாலைக் கொடுத்தாளே; சத்துருக்கள் உமக்குக் காடியை அல்லவோ கொடுத்தார்கள்! இது ஏன்? இரட்சகா! இது ஏன்?

உன் தாகத்தை ஆற்ற,
உன் தாகத்தை மாற்ற.

இரட்சகர் என்னிமித்தம் பசியடைந்ததும் தாக மடைந்ததும் போதாதா? இழிவான பட்டப் பேர்களையும் கேட்க வேண்டுமா? நான் பிறந்து ... இத்தனை வருடங்களா கிறது; ஒரு காலத்திலும் இந்தப் பேர் சொல்லி ஒருவரும் என்னைத் திட்டினதுமில்லை, கூப்பிட்டதுமில்லை. நான் நாடோறும் திருப்தியாய்ச் சாப்பிடுகிறேன்; அப்படியிருந்தும் நான் கொஞ்சம் சாப்பிடுகிறதாய்ச் சொல்லுகிறார்கள். ஐயோ உமக்கு இந்த அவலட்சணமான பேர்களும் வரவேண்டுமா? நான் உமக்கு இரண்டு பட்டப்பேர்களை இடும்படி தயவாய் உத்தரவு தாரும். உமக்குத் தகுதியான பேர்,

உபவாசப் பிரியன்
வியாகுலப் பாளன்

என்பது தான். உம்முடைய இழிவான பேர்கள் இரண்டையும் இன்று முதல் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

### பரவசம்

எலியாவைக் காகத்தால் போஷித்த இரட்சகா! உம்மைப் போஷிக்க ஒரு காகத்துக்கு உத்தரவு செய்யலாகாதா? ஆறு லட்சம் பேருக்கு வனாந்தரத்தில் மன்னாவைக் கொடுத்த அப்பனே! உம்முடைய ஒரு குடலுக்கு நாற்பது நாளுக்கு அன்னமில்லாமலா போயிற்று? ஜெயங்கொள்ளுகிறவனுக்கு மன்னாவை மறைத்து வைத்துக் கொடுக்கும் தேவா! நீர் உமக்கென்று கொஞ்சம் மன்னாவை மறைத்து வைத்துக் கொள்ளலாகாதா?

### விசுவாச முத்தம்

பசியாலும் தாகத்தாலும் வருந்தி என் பசியையும் தாகத்தையும் மாற்றின பரிசுத்த வயிறே உன்னை முத்தமிடு கிறேன். இழிவான பேர் வாங்கி என் இழிவை மாற்றின பரிசுத்த

வயிறே, உன்னை முத்தமிடுகிறேன்.

**விசுவாச வணக்கம்**

**என்னிமித்தம் பசித்த இயேசுவே, நமஸ்காரம்**
**என்னிமித்தம் தவித்த இயேசுவே, நமஸ்காரம்**
**இயேசுவே நமஸ்காரம், கிறிஸ்துவே நமஸ்காரம்.**

**ஜெபம்**

எங்கள் நிமித்தம் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசஞ் செய்த இயேசு இரட்சகா! உமது திவ்ய ஏவுதலுக்கு நாங்கள் கீழ்ப்படிந்து, மெய்யான நீதியும் பரிசுத்தமும் உள்ளவர்களாய் நடக்கும்படி எங்கள் சரீரம் ஆவிக்கு அடங்கத்தக்கதாய் உபவாசம் செய்வதற்கு எங்களுக்குக் கிருபை செய்தருளும். எங்களிலுள்ள மாம்ச இச்சைகளெல்லாம் அழியவும், ஆவிக்குரியவை களெல்லாம் பிழைத்து வளர்ந்தேறவும் கிருபை செய்தருளும். உம்முடைய உபவாசத்தினிமித்தமும், சோதனையினிமித்தமும் நாங்கள் பிசாசையும் உலகத்தையும் மாம்சத்தையும் ஜெயித்து, வெற்றி சிறக்கும்படி எங்களுக்கு வல்லமையையும் பெலனையும் அனுக்கிரகித்தருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

**துதி**

**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திர முண்டாவதாக. அவர் தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களின் கையினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கையினின்றும் நம்மை இரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சண்யக் கொம்பை ஏற்படுத்தினார்.**

# தியானம் 8

## ஆத்தும நேசரின் மார்பு

### வேதம்

[1]'அவருடைய சீடரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான். யாரைக் குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகை காட்டினான். அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டு ஆண்டவரே, அவன் யார் என்றான்.'

### போதனை

இரட்சகரின் மார்பைப்பற்றிய ஒரே ஒரு குறிப்பை மாத்திரம் யோவான் சுவிசேடத்தில் பார்க்கிறோம். அதாவது, இயேசுவுக்கு அன்பாயிருந்த சீடன் ஒருவன் அவருடைய மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான். பன்னிரு சீடரிலும் இயேசுவை [2]அதிகமாய் நேசித்தது பரி. பேதுரு என்று விளங்குகிறது; ஆனால் இயேசு அதிகமாய் நேசித்தது பரி. யோவான் என்று விளங்குகிறது. இயேசுவில் அன்பு கூருவதிலும் இயேசுவால் அன்பு கூரப்படுவதே மேன்மை. இயேசுவில் அன்பு கூருவது பக்தரின் கடமை; இயேசுவால் அன்பு கூரப்படுவதோ கர்த்தரின் கிருபை அல்லது பாக்கியம். நமது இரட்சகரின் மார்பு அவருடைய அன்பர் தூங்கும் கட்டிலாய் அல்லது சாயும் திண்டுத் தலையணையாய் இருக்கிறது.

'சாய்ந்து கொண்டிருந்தான்' என்ற வார்த்தை சாய்மானத்தின் உறுதியையும், சாய்ந்திருந்தவனுடைய தாராளத்தையும் காட்டுகிறது. யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த நேரத்திலேயே பன்னிரு சீடரில் ஒருவனாகிய யூதாஸ் தன் பணப்பையிலும், பண ஆசையிலும் சாய்ந்து கொண்டிருந்தான் என்னலாம். இயேசுவின் மார்பில் சாய்ந்தவன் இன்னானென்று அறிகிறோமேயன்றி, இயேசு

---

[1] யோ. 13:23-25 [2] யோ. 21:17

சாய்ந்த மார்பு இன்னதென்று அறிய ஏதுமில்லை; இது சற்று விசனந்தான். அவர் சாய இடமில்லாதவராயிருந்தார்.

### தியானம்

ஆத்துமாவே! இம்மட்டும் நீ இயேசுவின் பாதத்தையும், காலையும், முழங்காலையும், வயிற்றையும் நோக்கித் தியானித்தாய்; இப்போது உன் கண்களைச் சற்றே நிமிர்த்தி, அவருடைய திருமார்பை நோக்கித் தியானம் பண்ணு. பரி. யோவான் வெகு நேரமாய் இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டிருக்கிறார். மார்பு நோகிறது, எழுந்திரு என்று அவர் சொல்லவில்லை; நீ சற்றே விலகி வேறொருவனுக்கு இடங்கொடு என்று அவர் சொல்லவுமில்லை. அந்தப் பன்னிரெண்டு பேர் சாய்ந்தாலும், உலக முழுவதும் சாய்ந்தாலும் அவர் மார்பில் இன்னும் இடமுண்டே. மற்ற சீடர் பரி. யோவானைப் போல் சாய்ந்து கொள்ளாதது தப்பிதமேயன்றி யோவான் அப்போஸ்தலன் சாய்ந்து கொண்டிருந்தது தப்பிதமல்ல.

யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்த முகாந்திரமென்ன? அவர்கள் தேசத்துக்கும் ஜாதிக்கும் அது வழக்கமென்று சொல்லி அற்பமாய்த் தள்ளிவிடாதே; சாய்ந்திருந்தவனைக் கேட்டால் சாய்ந்த முகாந்தரத்தின் ஞானத்தை அறியலாம். நல்லது ; கேட்போம்.

யோவானே! செபதேயுவின் மகனே! இடிமுழக்கத்தின் புத்திரனே! நீ ஏன் ஆத்துமநேசரின் மார்பில் சாய்ந்தாய்? உன் பெருமையா, ஆணவமா? ஏன் சாய்ந்தாய்? தலை நோவா, காய்ச்சலா? சற்றே சொல்லு. பன்னிருவரில் இளையவனாகிய நீ உன் வாலிப சேஷ்டையைக் காட்டினாயோ அல்லது நீ தாபோரில் கிறிஸ்துவின் மகிமையைக் கண்டுகொண்டதால், அப்புறம் அவரை அலட்சியமாய் எண்ணிவிட்டாயோ? ஏன் சாய்ந்தாய்? இயேசு தம்மைக் காட்டிக் கொடுப்பவனைக் குறித்து ஜாடையாய்ப் பேசினபோது, பேதுரு உனக்கு சைகை காட்டி

யாரைக் குறித்துச் சொல்லுகிறார், விசாரி என்று சொன்னானோ அந்த ஆத்திரமும் துக்கமுமான சமயத்திலுங்கூட நீ சாய்ந்திருந்த மார்பில் சாய்ந்தபடியே இருந்து கொண்டு, [1]ஆண்டவரே, அவன் யார் என்று கேட்கிறாயே? இவ்வளவு தாராளத்துக்கு முகாந்தர மென்ன? இதன் அந்தரங்கமென்ன?

யோவானுடைய உத்தரவு: அது என் ஆணவமுமல்ல, அலட்சியமுமல்ல, நான் சாய்ந்ததற்கு இரண்டு முகாந்தரங்களுண்டு:

(1) என் ஆத்துமநேசர் என் பேரில் வைத்த அன்பும், (2) நான் என் ஆத்துமநேசர் பேரில் வைத்த அன்பும் தான் முகாந்தரம் என்று போவனர்கேஸின் மகன் இடிமுழக்கமாய்ச் சொல்லும் உத்தரவு இதோ என் மனதில் தொனிக்கிறது.

யூத பிரதான ஆசாரியனுடைய மார்பு [2]பன்னிரெண்டு கோத்திரங்களையும் குறிக்கும் பன்னிரெண்டு இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டது. ஆத்துமநேசரின் மார்போ சீனாயின் பத்துக் கட்டளைகளும் இயேசுவின் இரண்டு கட்டளைகளும் ஆக, பன்னிரெண்டையும் மீறின எல்லாப் பாவிகளையும் இரட்சிப்போம் என்று வெளிப்படுத்தும்படி அன்பு என்னும் ஒரே வைரமுள்ள பதக்கமாய்த் துலங்குகிறது. முன்னொரு காலத்தில் இந்த மார்பில் [3]நீதி என்னும் ஒரே கல் வைக்கப்பட்ட பதக்கம் தொங்கினது; இப்பொழுதோ அது எடுக்கப்பட்டு அன்பு என்னும் வைரம் பதிக்கப்பட்ட பதக்கமுடையதாய் விளங்குகிறது . சகல பாவிகளுக்கும் அங்கே இடமுண்டு. அதில் சாய்ந்து கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் [4]நீதி, [5]விசுவாசம், அன்பு ஆகிய மூன்று மார்க்கவசங்கள் அகப்படும். நானும் அதில் சாய்வேனாக.

## விசுவாசத்தால் சாய்தல்

ஆ, என் ஆத்துமநேசரே! உமது மகத்துவ மார்பை அடியேனுக்குச் சற்றே தாரும், நானொரு பாவி, என்னில் தயவாய் அன்புகூரும், நானும் உம்மில் அன்புகூருகிறேன். ஆ, என் ஆண்டவர், தமது மார்பில் நான் சாயும்படி சம்மதிக்கிறார். ஐயா, யோவான் அப்போஸ்தலனே, நீர் சற்றே ஒதுங்கி, எனக்கு

[1]யோ. 13:25. [2]யாத். 28:21. [3]ஏசா.59:17. [4]எபே.6:14. [5]1தெச.5:8

நடுமார்பில் சாய இடங்கொடும்; நான் உம்மிலும் நோயாளி, உம்மிலும் பெலவீனன், உம்மிலும் களைத்துப் போனவன்; என் நோவு குணமாகவும், பெலவீனம் தீரவும், களைப்பு ஆறவும் என் ஆத்துமநேசரின் மார்பில் இதோ சாய்கிறேன்.

அன்பர் அவர் மார்பில் சாயாதிரார்

அன்பருக்கு அவர் மார்பைச் சாய்க்காதிரார்.

## ஆனந்தப் பரவசம்

அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! ஆமென். ஆ, என் ஆத்துமநேசரின் மார்பு இலவம் பஞ்சிலும் மெதுவாயிருக்கிறது. என் பாவநோய் தீருகிறது, பாவ ஆயாசமும் மயக்கமும் தெளிகின்றன; பெலவீனம் தொலைகிறது; நான் இங்கேயே இருப்பேன், இவ்விடத்திலிருப்பது என் ஆத்துமாவுக்கு நலமென்று கண்டுபிடித்திருக்கிறேன்; இங்கே பரமானந்தம் பெருகுகிறது; பரம எண்ணங்கள் எழும்புகின்றன; நான் இந்த இடத்தை விடேன்; ஆயிரம்பேர் வந்து என்னைத் துரத்தினாலும் இந்தக் கன்மலை ஒதுக்கத்தைவிட்டுப் போகேன்; நெருக்கினாலும் விலகேன்; நசுக்கினாலும் இந்த மார்பிலிருந்து கொண்டே சாவேன்.

## ஆனந்த மௌனம்

வாசிக்கிறவனே! நீ சற்றுநேரம் முழங்காலில் நின்று கொண்டு ஒன்றும் பேசாதபடி உன் உதடுகளைக் காத்து, இரட்சகருடைய மார்பு பாவிகளுக்கு ஒரு சாய்மானம் போல் இருக்கிறதென்பதை மாத்திரம் மனதில் உணர்ந்து, அதன் ஆனந்தத்தால் ஆவியில் மகிழ்ச்சியை அனுபவித்துக்கொள்.

## ஜெபம்

என் இன்பப் படுக்கையாகிய இயேசுவே! என் பேரின்ப மெத்தையே! என் புஷ்ப மஞ்சமே! செபதேயுவின் மகனாகிய யோவானுக்கு உமது மார்பில் இடம் கொடுத்தீர். உம்முடைய மகனாகிய எனக்கு இடம் தாரும். என் ஆத்துமா சுகமாய்த் தூங்கும் ஊஞ்சலே! உமது மார்பில் சாயக் கிருபை செய்யும். நான் பிறந்து

..... வருடமாகிறது. இவ்வளவு காலமும் நான் என் ஆத்துமாவை அதே விதமான கட்டிலில் கிடத்தி, அது சுகமாய்த் தூங்கும்படி தாலாட்டினேன். அது நித்திரையைக் கண்டதில்லை. நான் நித்திரைபோக வேறு யாதொரு இடமுமில்லை - உமது திருமார்பே என் ஆத்துமா சுகமாய்த் தங்கும் இடமென்று கண்டேன். அதில் தலை சாய்த்து இளைப்பாறி அதிலிருந்து சுரந்துவரும் பாவ மன்னிப்பு, இருதய சமாதானம், சந்தோஷம் என்னும் அமிர்தத்தை உண்ண அடியானுக்கு அருள்புரியும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.....

**துதி**

**என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது, ஏனெனில் அவர் தமது அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்.**

# தியானம் 9

## ஆத்தும நேசரின் விலா

### வேதம்

[1]'போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறார்.' [2]'வாரத்தின் முதல் நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே, சீடர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய.... விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்.' [3]'இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே கூட இருக்கவில்லை மற்ற சீடர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்... என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். மறுபடியும் எட்டு நாளைக்கு பின்பு... இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி... உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.'

### போதனை

இரட்சகரின் விலாவைப் பற்றிய ஒரே குறிப்பு மாத்திரம சுவிசேடத்தில் வருகிறது. போர்ச் சேவகரிலொருவன் ஈட்டியினால் அவருடைய விலாவைக் குத்தினான். அங்கிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது என்று பரி. யோவான் அறிவிக்கிறார். கிறிஸ்துவின் விலா குத்தப்பட்டபோது இயேசுவின் பட்சத்தைச் சேர்ந்தவர்களில் இவர் ஒருவர்தான் கிட்ட நின்றதாகத் தோன்றுகிறது. இரட்சகர் சிலுவையில் தொங்குகையில் ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி வரையும் உண்டாயிருந்த அந்தகாரமும், பூமி அதிர்ச்சியும் எல்லோரையும் அவரவர் பாட்டுக்குப் பயந்தோடச் செய்ததாக்கும். சீடரும் மற்ற

[1] யோ. 19:34,35 [2] யோ. 20:19,20 [3] யோ. 20:24-27

பக்தரும், தாங்கள் முன்னுக்கு நின்றால் மோசமென்று மெதுவாய்ப் போயிருக்கலாம். அதுவுமன்றி அது ஒய்வுநாளுக்கு ஆயத்தநாளாயும் இருந்தது. யோவான் அப்போஸ்தலன் இயேசுவின் தாயை மெதுவாய் நடத்தித் தன் வீட்டில் இருத்திவிட்டு, மறுபடியும் திரும்பி சிலுவையண்டை தனியாய் வந்திருக்கிறார். இரட்சகரின் பாடுகளை விவரமாய் எழுதும் பரி. யோவான் இந்த ஒரு விஷயத்தைப் பற்றி ஆணையிடுகிறது போலிருக்கிறது. எல்லாப் பாடுகளைப் போல இது திரண்ட கூட்டத்தில் நடந்திருக்குமானால் [1]"அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது' என்பதாக பரி. யோவான் சொல்லவேண்டியதில்லை. கிறிஸ்துவின் பரிசுத்த விலா குத்தப்பட்ட நேரத்தில் அவருடைய தாயாகிய மரியம்மாள் கிட்ட நின்றிருந்தால் அவளுக்குண்டாகும் வியாகுலத்தை யாரால் சொல்லிமுடியும்! இரட்சகருடைய கால்கள் முறிக்கப்படாததற்குப் பதிலாக அவருடைய திருவிலா குத்தப்பட்டது. சேவகர் இயேசுவின் பக்கத்திலிருந்த [2]இருவருடைய கால்களையும் முறித்துவிட்டு, கிறிஸ்து மரித்துப்போனாரென்று கண்டு அவருடைய கால்களை முறிக்கவில்லை. தற்செயலாய் நடந்த இந்தக் காரியம், ஒரு [3]தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருந்தது.

கிறிஸ்துவின் கால்கள் மற்றவர்களுடையதைப் போல முறிக்கப்படாதது கிட்ட நின்ற யோவான் அப்போஸ்தலனுக்கு மட்டற்ற மனமகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். அப்புறம் போர்ச்சேவகரில் ஒருவன் நீண்ட ஈட்டியோடும், துடித்த மீசையோடும், சிவந்த கண்களோடும் இரட்சகரைக் குத்தும்படி ஓங்கினதைக் கண்ட அன்பான சீடன், அவரைக் குத்தாதபடிக்கு எவ்வளவோ மன்றாடியிருப்பான். மரித்துப் போனதால் கால் முறிக்கப்படாவிட்டால் விலாவையும் குத்தக்கூடாதே! [4]பாவத்தையும் அழுக்கையும் சுத்திகரிக்க ஓர் ஊற்றும், பாவிகள் பார்த்து மனந்திரும்ப [5] ஒரு படுகாயமும் இருக்குமென்ற தீர்க்க தரிசனம் நிறைவேறும்படி இரட்சகரைப் போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினால் குத்தினான்; உடனே இரத்தமும்

[1]யோ. 19:35. [2]யோ. 19:32,33. [3]யாத். 12:46. [4]சக. 13:1. [5]சக. 12:10

தண்ணீரும் புறப்பட்டது. இதினாலே பரி. யோவான் அவர் [1] ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர் என்று அறிவிக்கிறார்.

## விசுவாசக் காட்சி

ஆத்துமாவே! நீ உன் அன்பின் செட்டைகளை விரித்தெழும்பி கொல்கொதாவுக்குப் பறந்து போ. நீ இம்மட்டும் பாவப் பஞ்சுமெத்தையில் படுத்திருந்தது போதாதா? உன் இரட்சகர் சாவையும், அவர் விலாவின் குத்தையும், அதிலிருந்து ஓடும் இரத்த ஊற்றையும் போய்ப் பார்க்க எழும்பு, பாவியே எழும்பு.

இதோ, பறந்து கொல்கொதா மேட்டிலே நிற்கிறேன். ஆத்துமநேசரே! ஆத்துமநேசரே! ஆத்துமநேசரே! இந்தத் துயரக் காட்சியை என் ஆத்துமா தன் ஜீவகாலத்தில் கண்டதேயில்லை. ஆ, என் இரட்கருடைய விலா எவ்வளவு ஆழமாய்க் குத்தப்பட்டிருக்கிறது!

நீர் பட்ட ஈட்டிக் குத்தும்
நீர் விட்ட இரத்தச் சொட்டும்
என் நெஞ்சைப் பிளக்குதே!

## தியானம்

ஆத்துமாவே! என் இரட்சகருடைய விலா குத்தப்பட்டதைத் தியானி. இரட்சகருடைய தேகத்தில் இம்மட்டும் வடுபடாதிருந்த பாகம் அவர் விலாதான். அது யூதருடைய மிலாரடிக்குத் தப்பினாலும், ரோமைச் சேவகரின் ஈட்டிக்குத் தப்பவில்லை. மோசேயின் கோலடியால் மேரிபாவில் தண்ணீர் புறப்பட்டது. இயேசுவாகிய ஞானக் கன்மலையினின்று போர்ச்சேவகனுடைய ஈட்டியின் குத்து, ஜலத்தையும் இரத்தத்தையும் புறப்படச் செய்தது. இரட்சகா! என்னிமித்தம் பாடுகளைச் சகிக்க நீர் உமது அவயவங்களில் ஒன்றையும் மறைத்துக் கொள்ளவில்லை. முதலாம் ஆதாமின் விலாவின் எலும்பினால் ஒரு மணவாட்டி அவனுக்கு உருவாக்கப்பட்டாள். நீர் உமது விலாவின் ஜலத்தாலும் [1]இரத்தத்தாலும் திருச்சபையாகிய மணவாட்டியை உருவாக்கினீர்.

---

[1] யோ. 5:6

உமது விலாவை ஒரு போர்ச்சேவகனுடைய ஈட்டி பிளந்துவிட்டது. தேவநீதி என்னும் ஆலை உம்மைக் கெத்செமனேயில் அரைத்து இரத்தமெடுத்தது; ரோமைச் சேவகனின் ஈட்டி உம்மைக் குத்தி இரத்தமும் ஜலமும் எடுத்தது. நான் ரோமைச் சேவகனை ஏன் குற்றப்படுத்த வேண்டும்?

## குத்தினவன் நான் தான்

ரோமைச் சேவகன் குத்தினபோது நான் அவன் இடுப்பில் இருந்தேன். என் ஈட்டிதான் என் இரட்சகரைக் குத்தினது. ரோமைச் சேவகனுடைய ஈட்டியல்ல,

**என் பாவமாகிய ஈட்டியப்பா!!**

**என் பாவமாகிய ஈட்டியப்பா!!**

**இனி நான் என்னையே நொந்து கொள்ளுவேனாக!**

என் இரட்சகருடைய திருவிலாவிலிருந்து இரத்தமும் ஜலமும் புறப்படுகிறது. கொல்கொதா மலையில் தேவகோப மாகிய அக்கினியை அவிக்கும் நதி புறப்படுகிறது; ஆகையால் பாவியாகிய நான் தேவகோபத்துக்கு அஞ்சவேண்டியதில்லை. என் இயேசுவிலிருந்து ஒழுகும் இரத்தம் என்மேல் சுமரும் தேவகோபாக்கினையைத் தணித்துவிடுகிறது. இரட்சகருடைய விலாவிலிருந்து பாவத்தையும் அழுக்கையும் தீர்க்கிறதற்கு ஊற்று வருகிறது. நான் அங்கே போய் முழுகி ஸ்நானஞ் செய்வேனாக. நாகமான் தன் குஷ்டரோகந் தீர ஏழுதரம் யோர்தானில் முழுகினான். நான் ஒரே தரம் முழுகுவேனாக. ஆ, இரட்சகரின் விலாவின் காயம் எவ்வளவு அகலமும் ஆழமுமாயிருக்கிறது! என் உள்ளங்கையை வைத்தாலும் அது மறையவில்லை. என் பாவம் எவ்வளவு ஆழமும் அகலமுமாய் இரட்சகரை வேதனைப்படுத்தி விட்டது! பாவியாகிய நான் எந்நாளும் தங்குமிடமாயிருக்கும்படி அது அவ்வளவு அகன்று இருக்கிறதாக்கும். என் அவிசுவாசம் நீங்கவும் அது அவ்வளவு பெரும் காயமாயிற்று என்று உணருகிறேன்! இரட்சகா! உமது விலாவில் இடந்தாரும். உமது விலாவே நான் ஒதுங்கும் குகை.

## பரவசம்

அதோ, கூட்டமாய் ஜனங்கள் நெருங்கி விழுகிறார்களே, அதென்ன விசேஷம்?

உத்தரவு: பூலோக பாவிகள் தங்கள் பாவதோஷங்களி லிருந்து சுத்தமாகும்படி இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தண்டை ஓடி, சிலுவையில் தொங்கும் விலாவிலிருந்து பாயும் இரட்சண்ய அருவியில் தங்கள் ஆத்துமாக்களை ஏந்துகிறார்கள்.

நானும் போய் ஏந்துவேனாக!

அதோ, அநேகர் தங்கள் அங்கிகளைக் கழற்றுகிறார்களே, இது ஏன்?

உத்தரவு: அவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியான வருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுக்கப் போகிறார்கள்.

நானும் வெளுப்பேனாக.

## ஆனந்த மௌனம்

வாசிக்கிறவனே! இப்பொழுது நீ சற்றுநேரம் முழங்காலில் நின்று தலைகுனிந்து அல்லது குப்புற விழுந்து அல்லது சாஷ்டாங்கமாய் விழுந்து உன் உதடுகள் அசையாதபடி காபந்துபண்ணி, பாவமன்னிப்புக்காகத் திறக்கப்பட்ட இரட்சகரின் விலாவை விசுவாசத்தால் கண்ணுற்று ஆவியில் ஆனந்தங் கொள்வாயாக.

## விசுவாச வணக்கம்

'பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமே
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷங்கள் யாவும்
நீங்கும்படி அருளும்'

## ஜெபம்

என்னை உயர்த்தும்படியாக ஈனக் குருசில் உயர்த்தப்பட்ட இயேசுவே! உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவலோக ஆடே! பழைய பாம்பின் விஷம்தீரச் சிலுவையிலே தொங்கும் தேவலோக வெண்கலச் சர்ப்பமே! அடியேன் உமது பாதபடியில் விழுகிறேன்; நீர் குருசில் தொங்குகிறவராய் நான் உம்மை நோக்கும்போது உமது திருவிலாவின் காயங்கள் எவ்வளவு அகலமும் ஆழமுமாய்த் தெரிகின்றன. அந்தக் காயத்தைப் பார்த்து என் பாவங்களை நான் முழுப்பகையாய்ப் பகைத்து உமது காயத்துக்குள் அடைக்கலம் புகுந்து கொள்ளக் கிருபை செய்யும். அங்கிருந்து பிரளயமாய் ஓடும் இரத்தத்தில் அடியான் முழுகிச் சுத்தமாக இடந்தாரும். அந்தக் காயத்துக்குள் நான் குடியிருக்கும்படி அதை எனக்குக் குடிக்கூலிக்குத் தாரும். அன்றாடம் நான் அறிக்கையிடும் பாவங்களையே நான் செலுத்தும் குடிக்கூலியாக ஏற்றுக் கொள்ளும். கிருபை நிறைந்த இரட்சகரே! என் குற்றங்களையும் என்னுடைய முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும்; என் பாவங்களுக்குத் தக்க தண்டனை செய்யாதேயும்; தயவுள்ள கர்த்தாவே, இரங்கிப் பொறுத்தருளும். மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக் கொண்ட உமது அடியானாகிய என் மேல் என்றென்றைக்கும் கோபமாயிராமல் இரங்கிப் பொறுத்தருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

## துதி

**கர்த்தராகிய பராபரனே, பரம இராசாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம், உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர். கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர். ஆமென்.**

# தியானம் 10

## ஆத்தும நேசரின் முதுகு

### வேதம்

[1]''உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்.' [2]''அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும்... ஒப்புக் கொடுத்தேன்.' [3]''இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப் படுவார்; அவர்கள்...அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்.' [4]''பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.

### போதனை

இரட்சகருடைய முதுகைப்பற்றி நேராய்ப் பேசும் யாதொரு குறிப்பும் சுவிசேடத்தில் இல்லை. ஆனால் அவருடைய முதுகு பாடுகளுக்குட்படும் என்று சங்கீதக்காரனும் ஏசாயாவும் சொல்லும் தீர்க்க தரிசனங்களும், [5]பரி. மத்தேயு, மாற்கு, யோவான் என்னும் மூன்று சுவிசேடகரும் வாரால் அடிக்கப்பட்டார் என்று சொல்லும் வாசகங்களும் ஆத்துமநேசரின் முதுகைத் தெளிவாய் நமது கண்ணுக்குக் கொண்டு வருகின்றன என்பது மெய். இயேசுவின் அவயவங்களில் மிகுதியான பாடுகளை அனுபவித்தது, அவர் முதுகுதான் என்று சொல்ல வேண்டும். இரட்சகர் தம்மை அடிக்கிற ஆளையும், முறையையும், ஆயுதத்தையும், அடிக்கிற நேரத்தையும் அறியாதிருக்கும்படி துஷ்டர் முதுகைத் தங்கள் வர்மத்தைத் தீர்க்கும் ஸ்தானமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதோடுகூட பிலாத்து அவரைக் கற்றூணில் கட்டிவைத்து மூன்று கவருள்ளதும், இருப்புக் குண்டுகள் கட்டினதுமான மிலாறால் அடித்தான்.

---

[1]சங். 129:3. [2]ஏசா. 50:6. [3]மத். 20:18,19 [4]யோ. 19:1. [5]மத். 27:26; மா. 15:15

## தியானம்

என் இரட்சகர் இராப்போஜனத்துக்குப்பின் பன்னிரு சீடருடைய கால்களையும் கழுவித் துடைத்தாரே, அப்போது அவர் முதுகு மிகவும் நோவாய் இருந்திருக்குமே! கெத்செமனேயில் முகங்குப்புறக் கிடக்கையில் சர்வலோகத்தின் பாவமும் தேவனுடைய நீதியுள்ள தண்டாயுதமும் அவர் முதுகில் ஏறி நசுக்கினதே, அப்போது அவர் முதுகு வேதனைப் பட்டிருக்குமே! கெத்செமனேயிலிருந்து அவரை அன்னா காய்பாவின் வீட்டுக்கும், அப்புறம் பிலாத்துவினுடைய அரண்மனைக்கும், அப்பால் ஏரோதுவின் வீட்டுக்கும், மறுபடியும், பிலாத்துவினிடத்துக்கும் நடத்திக் கொண்டு போனபோது அவர் முதுகைச் சத்துருக்கள் சும்மா விட்டிருப்பார்களா? எத்தனை பேர் தங்கள் கைகளை மடக்கிக் குத்தினார்களோ! எத்தனை பேர் தங்கள் தடிகளால் அல்லது ஈட்டி, பட்டயம் இவைகளின் பிடியால் குத்தினார்களோ! அப்போது அவர் முதுகு எவ்வளவோ வேதனையை அனுபவித்திருக்கும். அதுவுமல்லாமல் பிலாத்து அவரைத் தூணில் கட்டி வாரினால் அடிக்கிறான். இம்மட்டும் ஆத்துமநேசரின் முதுகு உள்காயப்பட்டிருந்தது. பிலாத்து அதை வெளிக்காயப் படுத்திவிட்டான். இம்மட்டும் அது கன்னிப்பழுத்த பழம் போலிருந்தது. இப்போது பிலாத்து அதை வெள்ளரிப் பழத்தைப்போல் பிளந்து விட்டான்.

பிலாத்துவே! உனக்குப் பைத்தியமா? இந்த அநீதி செய்யவா நியாயாதிபதி உத்தியோகம் பெற்றாய்? உன் மனச்சாட்சி என் ஆத்துமநேசரைக் குற்றமற்றவரென்று அறிக்கையிட்டதே. நீ தண்ணீரையெடுத்துக் கையையும் கழுவி உன் சுத்தாங்க மனத்தைக் காட்டினாயே; அப்படியிருக்க உன் அறிவுக் கண் குருடாய்ப்போன முகாந்தரமென்ன? பரிதானமோ! பயமோ! நீ உன் சுய புத்தியில் தப்பிப்போனாலும் உன் மனைவியின் சொல் புத்தியைக் கேட்டாயில்லையே!

தந்திரமுள்ள யூதர் தாங்கள் அடித்தால் நாற்பது அடிக்கு மேலே அடிக்கக்கூடாதென்றல்லவா ரோமருடைய மிலாறினால் அடிபடச் செய்திருக்கிறார்கள்; அந்தச் சூதை நீ அறியாமல் என் இரட்சகரைத் தூணில் கட்டி வைத்துக் கொண்டு மனங்கொண்டபடி அடித்தாயே! ஆ, பிலாத்துவே! ஒரு விரல் வைக்க இடம் வேண்டாம், ஒரு ஊசிகுத்த என் இரட்சகர் முதுகில் இடம் காட்டினால் போதுமப்பா! - ஐயோ இரட்சகா!

**வியாகுல ஒப்பாரி**

பொந்திய பிலாத்துவெனும் அந்தகனே என்னுடைய
புண்ணியனைப் பிடித்துக் கட்டினாயே! - ரோமர்,
வாரினால் அடித்து வதைத்தாயே!!
பிலாத்துவே எழும்பி நீ கிட்டவா என்னுடைய
பிரதானியின் முதுகைப் பாரேன்! - இரத்தம்
பீறிட்டுப் பாய்கிறதைப் பாரேன்!!
இரட்சகா, உன் முதுகில் இப்படியும் அடிபட
இடங்கொடுத்த அந்தரங்கமேது! - ஐயையோ
இப்படியும் அடிப்பாரு முண்டோ!!
இவ்வடிகள் உன் முதுகில் பட்டிருக்குமேயானால்,
உடம்பெடுத்து நடமாடுவாயோ!! - உனக்கு
உடலேது உயிரேது பிலாத்தே!!

வைராக்கிய தர்க்கம்

***பிலாத்து:*** என் பேரில் பழிபோட்டு ஒப்பாரியிடுகிறாய்? நான் அவர் பேரில் குற்றமே இல்லையென்று கையையும் கழுவினேனே!

***பாவி:*** கையைக் கழுவினவன் வாயையும் கழுவினால் அல்லவோ சரி. ஆ, பாதகா! உன் வாயால் மரணாக்கினையைக் கூறினாயல்லவா? கழுவின கையிலேயே வாரை எடுத்து அடித்தாயே!

***பிலாத்து:*** உன் இரட்சகரைத் தப்புவிக்க வேண்டுமென்று தானே அடித்தேன். அவர் தப்புவிக்கப்பட அதிர்ஷ்டமில்லையானால் நான் என்ன செய்ய?

***பாவி:*** தப்புவிக்கவா அடித்தாய்? நல்ல வழி! நன்மை வரும்படிக்குத் தீமை செய்யலாமோ? இந்தப் போக்கை மறவாமல் எழுதிவைத்துக் கொண்டு நானும் நீயும் நடுத்தீர்க்கப்படும் போது சொல்லு.

### மெய் உணர்ச்சி

நான் பிலாத்துவை நொந்து கொள்ளுவானேன்? அடித்த பாதகன் நான் தான்; அடித்த மிலாறு என் பாவங்கள் தான்; என் பாவங்களால் ஆத்துமநேசரை அடித்துக் காயப்படுத்தி விட்டேன் என்று உணருகிறேன்.

### பரவசம்

என்னிமித்தம் பட்ட அடிகளால் உமது முதுகு கொதிக்கிற இரணமாயும், உழுத நிலம் போலும் இருக்கிறதே! என்னமாய்த்தான் சகித்தீரோ? ஆ இரட்சகா!

அன்பினால் சகித்தோம் பாவி!
அன்பினால் சகித்தோம் பாவி!

### விசுவாச வணக்கம்

உன்னத அன்பே நமஸ்காரம்
அடிபட்ட அன்பே நமஸ்காரம்
உன்னத அன்பே நமஸ்காரம்
அடிபட்ட அன்பே நமஸ்காரம்.

### விசுவாச முத்தம்

குரூரமான நிந்தையைச் சகித்த பரிசுத்த முதுகே! உன்னை முத்தமிடுகிறேன். உமது முதுகிலுள்ள ஒவ்வொரு காயத்திலுமிருந்து சுரக்கும் இரத்தச் சொட்டுகள் என் ஆத்துமா முகரும் ரோஜாப் புஷ்பமாயிருக்கின்றன; ஆகையால் ஒவ்வொரு காயத்தையும் ஒவ்வொரு பூவாக முத்தமிடுகிறேன்.

### மௌனம்

வாசிக்கிறவனே, இப்பொழுது நீ குப்புற அல்லது சாஷ்டாங்கமாய் விழுந்து கொண்டு உன் உதடுகளை அசைக்காமல், ஆத்துமாவில் இரட்சகர் உனக்குமுன் அடிகளால் காயப்பட்டு, இரத்தம் ஒழுகும் முதுகுடையவராய் நிற்கிறதாக உணர்ந்து கொண்டு, அடிபட்ட அன்பையும் அடிக்குட்படுத்தின உன் பாவங்களையும் தியானித்து சிறிது நேரம் மௌனமாயிருந்து, பெருமூச்சுவிடு.

### ஜெபம்

என் முன் இரத்தமயமான முதுகைக் காட்டிக் கொண்டிருக்கும் என் தெய்வீக இரட்சகா! அடியேன் உமது முதுகின் பின்

முழங்காலில் நின்று செய்யும் விண்ணப்பத்துக்குத் தயவாய்ச் செவி கொடுத்தருளும். இதோ நான் விசுவாசத்தின் விரலால் தொடும் இந்த அடியும், இதோ இந்தப் படுகாயமும், இதோ எலும்பு தெரிகிற இந்தப் பள்ளமும், இதோ இரத்தம் பொங்கிவரும் வடுவும், இதோ சதை நைந்து கிடக்கும் அடியும், உமது முதுகில் பட்டிருக்கும் எல்லா அடிகளும், என் பொய், வஞ்சனை, பொறாமை, அவிசுவாசம், சூது கீழ்ப்படியாமை, அவபக்தி முதலான வாரடிகளின் காயமே அன்றி வேறல்ல என்று உணருகிறேன்.

**உம்மை அடித்தவன் நானே!**

**உம்மை அடித்தவன் நானே!**

**உம்மை அடித்தவன் நானே!**

என்னிமித்தமே நீர் அடிக்கப்பட்டீர், என்னிமித்தம் உண்டான காயங்களெல்லாவற்றையும் நான் ஆற்றிப்போடுவது என் கடமை; ஆனால் எனக்கு மருந்தில்லையே, நான் என்ன செய்வேன்? [1]என் பாவங்களை உமது முதுகுக்குப் பின்னாக நீர் எறிந்தபொழுதெல்லாம் அது உமது முதுகைக் காயப்படுத்திக் கொண்டே கடந்து போகிறது. என் பாவத்துக்காக இதோ நான் சிந்தும் கண்ணீரையும், இதோ நான் விடும் பெருமூச்சையும், உம்முடைய உன்னத அன்பையும் ஒன்றாகக் கலந்து அதில் பூசும், அது ஆறிப்போம். உமது ஆத்தும வருத்தத்தின் பலனே உமது ஆத்தும வருத்தத்தை நீக்கும் மருந்து. உமது திரு முதுகிலிருந்து ஒழுகும் இரத்தம் எனக்கு ஆரோக்கியத்தை அளிப்பதாக. உம்முடைய ஆழமான காயங்களுக்குள் என் பாவங்கள் புதைக்கப்பட்டு, காணப்படாமலே போவதாக. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.....

## துதி

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து. உன் நோய்களை யெல்லாம் குணமாக்கி, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களாலும் முடிசூட்டினார். அல்லேலூயா. ஆமென்.**

# தியானம் II

## ஆத்தும நேசரின் தோள் (1 ஆம் பாங்கு)

### வேதம்

[1]"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்.... அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதன் சமாதானத்துக்கும் முடிவில்லை. [2]"தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின் மேல் வைப்பேன்; ஒருவரும் பூட்டக் கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு, அவன் பூட்டுவான்".

### போதனை

இரட்சகரின் தோளைப்பற்றிய ஐந்து குறிப்புகளை வேதத்தில் பார்க்கிறோம். அவைகளில் இரண்டை மாத்திரம் இப்பொழுது ஆராய்ந்து தியானிப்போம்:

**1. கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருந்தது.** இயேசுவின் மனுடாவதாரத்துக்கு முன்னிருந்த எசாயா இப்படித் தீர்க்க தரிசனமுரைத்தார் என்று மேலே காட்டிய வேத வாக்கியத்தால் விளங்கும். கர்த்தத்துவம் என்பது ஆளுகை அல்லது அரசாட்சியைக் குறிக்கும். இரட்சகருடைய மனுடாவதார காலத்திலும் அவர் தோளின் மேல் கர்த்தத்துவம் இருந்ததென்றே சொல்ல வேண்டும். இஸ்ரவேலருடைய முதலாம் இராஜாவாகிய சவுல் மாம்சத்தின்படி [3]எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந் தான். இயேசு கிறிஸ்து மனுஷீகத்தின்படி எப்படியோ தோளில் கர்த்தத்துவமுடையவராய் விளங்கியிருக்கிறார். [4]கீழ்த்திசை சாஸ்திரிகள் இரட்சகரின் பாலிய தோளிலிருந்த கர்த்தத்துவத்தால் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்து அவர்முன் தங்கள் காணிக்கைகளைப் படைத்தார்கள் என்னலாம். [5]செபதேயுவின்

---

[1] ஏசா. 9:6,7. [2] ஏசா. 22:22. [3] 1சாமு. 10:23 [4] மத்.2:2,11. [5] மத்.20:21

மனைவி அவருடைய தோளின் கர்த்தத்துவத்தை எப்படியோ கண்டு, ஒருநாள் இரட்சகரண்டை போய் உம்முடைய இராஜ்ஜியத்திலே என் குமாரரில் ஒருவனுக்கு உமது வலது பாரிசத்தையும், மற்றவனுக்கு உமது இடது பாரிசத்தையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டாள். [1]நாத்தான்வேலும், [2]பல வழிப்போக்கரும், இயேசுவுடைய தோளின் கர்த்தத்துவத்தைக் கண்டு அவரை 'இஸ்ரவேலின் இராஜா' என்று அழைத்திருக்கிறார்கள். [3]ஐயாயிரம் பேர் ஒரு நாள் கூடி இயேசுவை இராஜாவாகும்படி பிரயத்தனப்பட்டது அவருடைய தோளின் கர்த்தத்துவத்தினாலே தான். இயேசு சிலுவையில் தொங்கின போதும் அவர் கர்த்தத்துவம் மாறவில்லை. அதைக் கண்ட கள்ளன், [4] ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்ஜியத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்று கேட்டான். இரட்சகர் உயிர்த்தெழுந்த பின்பு அவர் தோளின் மேல் மகத்துவமாய் விளங்கின கர்த்தத்துவ மாட்சிமையைக் கண்ட எண்ணிறந்த பக்தர் அவரைப் பார்த்து, [5]ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்ஜியத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். [6]நசரேயனாகிய இயேசு 'யூதருடைய இராஜா' என்றெழுதி சிலுவையின் மேல் வைக்கப்பட்ட வாசகம் பரியாசத்துக்காக இருந்தாலும், தேவன் அதின் மூலமாய் அவருடைய தோளின் கர்த்தத்துவத்தை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டாரென்றும் சொல்லலாம்.

**2. ஒரு திறவுகோலும் அவர் தோளின் மேலிருந்தது.** பூர்வீகத்தில் ஆளுகையின் அடையாளமாகத் திறவுகோல் வழங்கப்பட்டது. இதை மேலே சொல்லிய கர்த்தத்துவத்தோடு சேர்ந்ததென்று சொல்லிவிட்டாலும் குற்றமில்லை அல்லது திறவுகோல் ஆளுகையின் பலாபலன்களை அளிக்கும் பாகமென்று பிரித்துச் சொன்னாலும் குற்றமில்லை. ஆண்டவருடைய தெய்வீக இராஜ்ஜியத்தின் பலாபலன்கள் குணப்படுகிற பாவிகளுக்குப் பாவங்களை மன்னிப்பதும் குணப்படாதவர்களை நரகத்தில் தண்டிப்பதுமே. இவை

---

[1]யோ. 1:46. [2]யோ. 12:13. [3]யோ.6:15 [4]லூ.23:42. [5]அப்.1:6 [6]யோ.19:19

இரண்டு அதிகாரங்களும் நமது இரட்சகருக்கு உண்டு. ஆனால் பலன் அளிக்கும் பாகத்தையே இரட்சகர் தமது மனுடாவதார காலத்தில் காட்டினார். பாவமன்னிப்பே இயேசுவின் மனுடாவதார காலத்தில் அவர் தோளின் மேலிருந்த திறவு கோல். இந்தத் திறவுகோலை இயேசுவின் பாலிய தோளில் கண்ட சிமியோன்[1] சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின.. இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றான். இந்தத் திறவுகோலை ஆத்துமநேசர் தமது தோளில் வைத்துக் கொண்டே தமக்குப் [2] பாவங்களை மன்னிக்க அதிகாரமுண்டென்றும், [3]உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன என்றும் சொன்னார். [4]இந்தத் திறவுகோலை உடையவராக இயேசு இன்றைக்கும் பரலோகத்தில் நிற்கிறார். ஒரு காலம் வரும், அப்பொழுது பாவிகளைத் தண்டிக்கும் அதிகாரம் அவருடைய கிருபையுள்ள தோளின் மேல் தங்கும்.

## தியானம்

ஆத்துமாவே! இம்மட்டும் நீ இயேசுவின் பாதத்தையும், காலையும், முழங்காலையும், வயிற்றையும், மார்பையும், விலாவையும் ஆராய்ந்து தியானித்தாய். இப்பொழுது உன் கண்களை ஏறெடுத்து அவருடைய தோளைப் பார். ஆ, இரட்சகரின் தோளில் கர்த்தத்துவம் எவ்வளவாய்ப் பிரகாசிக்கிறது! அவர் தோளுக்கு அது ஏற்றது, அதற்கு அவர் தோள் ஏற்றதுதான்.

அந்தத் தோளின் மேல் ஒரு திறவுகோலைக் காண்கிறேன். அதில் 'பாவ மன்னிப்பு' என்னும் வாசகம் பொன் எழுத்தால் எழுதப்பட்டிருக்கிறதை என் ஆத்துமா காண்கிறது; அது எனக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கிறது. என் ஆத்துமாவைத் துரத்தி வேட்டையாடும் துஷ்ட சிங்கமாகிய பிசாசானாலும், லோகமானாலும், மாம்ச இச்சைகளானாலும், மற்றெந்தப் பாவங்களானாலும் வந்தால் என் இரட்சகர் அந்தத் திறவுகோலால் தமது கிருபையின் கோட்டையைத் திறந்து,

---

[1]லூக். 2:31, 32 [2]மத். 9:6. [3]மத். 9:2 [4]வெளி. 3:7

என்னை உள்ளே தள்ளி கதவைப் பூட்டிவிடுவார். பிசாசே நீ அப்போது என்ன செய்வாய்? அங்கேயும் வருவாயோ? ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டிவிடும் திறவுகோல் என் இரட்சகர் தோளிலிருக்கையில் உன்னால் என்ன ஆகும்? போ, சாத்தானே!! போ.

**விசுவாசத்தால் தொங்குதல்**
**தொங்கினேன் தோளின் மேல்**
**தழுவினேன் பலமாய்**
**ஆளுமேன் அன்பினால்**
**பூட்டுமேன் தயவாய்.**

## ஜெபம்

கர்த்தத்துவத்தைத் தோளின் மேல் ஏந்திக் கொண்டு மகத்துவமாய் விளங்குகிற இயேசு மகா இராஜனே! பாவியாகிய அடியேனை உமது கர்த்தத்துவம் காத்து ஆளுவதாக. உமது அரசாட்சியின் பலனாகிய பாவமன்னிப்பாலும் இருதய சமாதானத்தாலும் என் ஆத்தும நகரம் சுகமாய்த் தங்கும்படி கிருபை செய்யும். நித்திய ஜீவவாசலின் திறவுகோலையுடைய இரட்சகா! கிருபையாய் எனக்கு மோட்ச வாசலைத் திறந்தருளும். இரட்சகா! நீரே அடைக்கலம், இரட்சகா! நீரே தஞ்சம், இரட்சகா! நீரே புகலிடம். திறவுகோல் உமது தோளிலிருக்கையில் நான் எவ்விதமாய் உட்பிரவேசிப்பேன்? ஆ, கிருபையுள்ள இரட்சகரே! பாவியாகிய என்னைத் தள்ளிவிடாமல் ஏற்றுக் கொள்ளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.....

## துதி

**தேவாதி தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது. பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.**

# தியானம் 12

## ஆத்தும நேசரின் தோள் (2 ஆம் பங்கு)

### வேதம்

[1]'மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.' [2]'நாமெல்லோரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லோருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.' 'ஒரு மனுஷன் [3]'காணாமற்போன தன் ஆட்டைக் கண்டுபிடித்தபின்பு... அதைத் தன் தோள்களின் மேல் போட்டுக் கொண்டு .... காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடு கூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா?' [4]'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்.' [5]'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி.' [6]'அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார்.... அவரிடத்தில் பாவமில்லை.' [7]'நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்.'

### போதனை

முந்தின தியானத்தில் இயேசுவின் தோளில் கர்த்தத்துவமும், பாவமன்னிப்பின் திறவுகோலும் இருக்கிறதாக அறிந்தோம். அவற்றோடு வேறு மூன்று காரியங்கள் இருப்பதாய் மேலே காட்டிய வேதவாக்கியங்கள் காட்டுகின்றன:

1. மனந்திரும்பும் எல்லாப் பாவிகளும் அவர் தோளின் மேல் இருக்கிறார்கள். லூக்கா பதினைந்தாம் அதிகாரத்தின் துவக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் காணாமற்போன ஆட்டின் உவமையை இரட்சகர் பேசினது, மனந்திரும்பும் எல்லாப் பாவிகளையும் நான் என் தோளின் மேல் சுமக்கிறேன் என்ற உண்மையை விளக்கத்தான் என்று தெளிவாய் அறியலாம். இரட்சகர் எப்போதும் பாவிகளைத் தமது தோளின் மேல் சுமந்து வந்தார். அவர் [8] ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்று பலர் வசைமொழி கூறினார்கள்.

---

[1] ஏசா. 53:4. [2] ஏசா. 53:6. [3] லூா 15:5,6 [4] லூ. 19:10. [5] யோ 1:29; 30:11.

[6] 1 யோ. 3:5. [7] 1 பே. 2:24. [8] மத். 11:19.

2. சர்வலோகத்தின் பாவங்களும் அவர் தோளில் இருந்தன. இந்தப் பாவமூட்டையைப் பரிசுத்த ஆவியினாலே கண்ட யோவான்ஸ்நானன், தன் காலத்திலிருந்த எல்லோரும் தங்கள் பாவங்களைக் கொண்டு போய் அவர் தோளின் மேல் ஏற்றிவிட்டு இளைப்பாறும்படி, இயேசுவைக் கண்டவுடனே 'இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி' என்று விளம்பரமடித்தான்.

இரட்சகரின் தோள் பாவியையும், பாவத்தையும் சுமந்ததோடு பாவத்தின் தண்டனையையும் சுமந்தது. [1] 'நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது' என்று ஏசாயா சொல்லுகிறார். நமது பாவத்தினிமித்தம் வர வேண்டிய தேவ தண்டனைகள் அனைத்தையும் அவர் தோள் தாங்கினது. நம்முடைய பாவத்தின் தண்டனையனைத்தும் அவர் தோளின் மேலிருந்ததற்குச் சிலுவையே அத்தாட்சி.

## தியானம்

ஆத்துமாவே! கர்த்தத்துவ மகத்துவத்தாலும் பாவ மன்னிப்பின் திறவுகோலாலும் அலங்கரிக்கப்பட்ட இரட்சகரின் தோள் அதனோடு கூட பாவிகளாலும், பாவங்களாலும், பாவத்தின் தண்டனைகளாலும் நிறைந்திருக்கிறது. இவை மூன்றும் ஒன்றின் மேல் ஒன்றாய் ஆத்துமநேசரின் தோளிலிருக்கும் மகத்துவங்கள் மேல் இருப்பதால், அவருடைய கர்த்தத்துவத்தின் மாட்சிமை உலகத்தின் கண்ணுக்குத் தெரியவில்லை. இந்த மூன்று கார்மேகங்களும் அவருடைய தெய்வீக கர்த்தத்துவத்தின் ஜோதியை மூடுகின்றன. இரட்சகா! என்ன தான் மூடினாலும் என்ன? நான் உமது கர்த்தத்துவத்தைக் காண்கிறேன். நீர் என் இராஜா, நான் உமது குடியானவன்; நீர் என் எஜமான், நான் உமது ஊழியன்; நீர் என் மேய்ப்பன், நான் உமது மந்தையின் ஆடு. இப்படி என் ஆத்துமா உணருகிறது.

---

[1] ஏசா. 53:5.

பாவியாகிய நானும், என் பாவங்களும், அதின் தண்டனைகளுமெல்லாம் இரட்சகரின் தோளின் மேலிருப்பதால் நான் ஆக்கினைக்குத் தப்பினேன். நான் என் இரட்சகரின் தோளில் இராவிட்டால் என் தண்டனை என்னுடைய பாவத்தின்மேல் மோதும், பாவம் என்மேல் மோதும்; நான் அழிந்து போவேன். என் பாவம் தன் ஆக்கினைகளைச் சுமத்தும்படி என்னை பின் தொடர்ந்தது; நான் பயந்து, அவ்வாக்கினைக்குத் தப்பும்படி இரட்சகரண்டை ஓடிவந்தேன். ஓடிவந்த என்னோடு என் பாவமும் தண்டனைகளும் தொடர்ந்தன. நான் விரைவாய் ஓடி அவர் தோளின்மேல் அடைக்கலம் புகுந்தேன். என்னோடு என் பாவமும், தண்டனையும் ஏறிக் கொண்டன. அவர் என்னையும் சுமந்தார், என் பாவத்தையும் சுமந்தார், என் தண்டனையையும் சகித்தார். நான் பிழைத்துக் கொண்டேன்.

ஆ! என் பாவம் மகா பளுவுள்ளது. அது மூன்று எழுத்துக்களைத்தான் உடையது. பளுவிலே கனத்தது. பொருளாசைக்காரன் விரும்பும் எல்லாப் பணத்தையும், மதுபானக்காரன் விரும்பும் சாராயப் பீப்பாய்களையும், கொலைகாரன் விரும்பும் பிணங்களையும், விக்கிரகாராதனைக்காரன் விரும்பும் எல்லா விக்கிரகங்களையும், விபசாரக்காரன் விரும்பும் வேசிகளையும், காணி பூமியை விரும்புகிறவனுக்கு அவ்வளவு பூமியிலுள்ள மண்ணையும் கல்லையும் தோள்மேல் ஏற்றிப் பார்ப்போம். அவை எவ்வளவு பளுவோ, அதுவே அந்தந்தப் பாவங்களின் சரியான பாரம் என்று சொல்ல வேண்டும். இவ்விதமாய்ப் பாவத்தை நிறைபோட்டால் நாம் மனதினாலும், வார்த்தையினாலும், செய்கையினாலும் செய்த பாவங்கள் எவ்வளவோ பளுவாகும்! ஆத்துமநேசரின் தோள் சர்வலோகத்தின் பாவ பளுவையும் தாங்கிற்று.

இரட்சகர் தமது தோளின் மேல் ஏறும் பாவி, பாவம், தண்டனை என்னும் மூன்றில் ஒன்றை நேசித்து அணைக்கிறார். ஒன்றைப் பகைத்து எறிந்துவிடுகிறார்; ஒன்றைச் சகித்து முடிக்கிறார். பாவியாகிய என்னை நேசித்து அணைக்கிறார்; என் பாவத்தைப் பகைத்துத் தமது முதுகுக்குப் பின்னாலே எறிந்து

விடுகிறார்; என் தண்டனையைச் சகித்து நிறைவேற்றுகிறார். ஆகையால், ஆத்துமாவே! இரட்சகருடைய தோளைவிடாதே, அவர் உன்னைத் துரத்தமாட்டார். பிடித்த பிடியை விட்டால் அது உன் தப்பிதந்தான்.

**பரவசம்**

நான் தொங்கும் இயேசுவின் தோளின் பக்கத்தில் ஒரு சிங்கம் உட்கார்ந்திருக்கிறதே; அது ஏன்?

**உத்தரவு:** அவன் தான் கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசு. உன் கை எப்போ வழுவும், நீ யூத கோத்திர சிங்கத்தின் தோளிலிருந்து எப்போ விலகுவாய், விழுங்கலாமென்று இருக்கிறானாக்கும்! ஆத்துமாவே! பிடித்த பிடியை விடாதே; விட்டால் தொலைந்தாய் என்று ஒரு தேவதூதன் என்னை எச்சரிக்கும் சத்தத்தை என் ஆத்துமா கேட்கிறது.

**ஜெபம்**

பாவிகளைச் சுமக்கும் அன்புள்ள இயேசுவே! அடியேனையும் சுமந்தருளும். உமது தோளில் எனக்கு இடமில்லையானால் பிசாசாகிய துஷ்ட சிங்கத்தின் பல்லுக்கு இரையாவேன். யோவாபும், அதோனியாவும் தங்கள் ஜீவன் தப்பும்படி பலிபீடத்தின் கொம்பைப் பிடித்தார்கள். நான் என் ஜீவன் தப்ப உமது தோளைப் பிடித்துத் தொங்குகிறேன். அடியேனைப் புறக்கணியாதேயும்.

பாவங்களைச் சுமக்கும் தேவாட்டுக்குட்டியே! என் பாவத்தையும் சுமந்தருளும். என் ஒருவனுடைய பாவம் மற்ற எல்லோருடைய பாவங்களின் மொத்தப் பளுவிலும் அதிகப் பளுவுள்ளது. பாவிகளுடைய பாவங்களின் தொகைப்படி ஓர் அட்டவணை உண்டாக்கினால் அதில் முதலாவது என் பேர் தான் இருக்க வேண்டியது.

மகா பிரதான பாவிகளிலும்
நான் மகா பிரதானமான பாவி.

பாவங்களை முழுப் பகையாய்ப் பகைக்கிற இயேசுவே! அதோடு என்னையும் பகையாதபடி வேண்டுகிறேன். உமது தோளிலிருக்கும் என் பாவங்களை நீர் மறக்கும்படி உமது திருமுதுகுக்குப் பின்னாலே எரியும் போது என்னையும் எறிந்து விடாதபடி பிரார்த்திக்கிறேன். என் தண்டனையின் கோலாகிய சிலுவையைச் சுமந்த தோளே, உன்னை விசுவாசத்தால் முத்தமிடுகிறேன். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.....

**துதி**

**நித்திய பிதாவாகிய தேவனே! உம்மைப் பூமண்டலமெல்லாம் வணங்கும். தேவதூதர் அனைவோரும், பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும், கேருபின்களும், சேராபின்களும் தேவரீரை ஓயாமல் புகழ்ந்து போற்றி, சேனைகளின் தேவனாகிய கர்த்தரே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால் நிறைந்தன என்று முழங்குகிறார்கள். ஆமென்.**

# தியானம் 13

## ஆத்தும நேசரின் கை (1 ஆம் பங்கு)

### வேதம்

[1]''இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு; எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.' [2]''இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.' [3]''இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப் பின் சென்றார்கள்.' [4]''ஓர் ஓய்வுநாளில் ஜெபாலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது பதினெட்டு வருடமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கே இருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து...அவள் மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்'.

### போதனை

இயேசுவின் திருக்கரத்தின் மகத்துவங்களைக் காட்டும் பல குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் அடங்கியிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் ஒரே மொத்தமாய் ஆராயாமல், ஐந்து பாகமாக்கி ஆராய்வோமாக.

பாலிய இயேசுவின் கையைப்பற்றி யாதொரு குறிப்பும் சுவிசேடத்தில் இல்லை; அதற்காக விசனப்படவேண்டியது தான். என்றாலும், இயேசு தமது பெற்றோருக்குக் [5]கீழ்ப்படிந் திருந்தார் என்றும், இயேசுவை [6]இவன் தச்சனல்லவா என்றும் பலர் சொல்லியிருப்பதாலும், அவர் சிறு பிராய முதல் தச்சுவேலைக் குரிய பலவகைகளிலும் தமது திருக்கரங்களைப் பிரயோகித்தார் என்று சொல்லத் தடையில்லை. அவர் லோக குருவாய் வெளிப்பட வேண்டிய காலம் வந்தது முதல் அவர் கரம் வேறு வேலைக்குத் திரும்பிவிட்டது. மேலே காட்டிய

---

[1] மத். 8:3. [2] மத். 8:14,15 [3] மத். 20:34 [4] லூ. 13:10-13 [5] லூ. 2:51

[6] மா. 6:3

வசனங்கள் இயேசுவின் கையைப்பற்றிய நாலு குறிப்புகளை வெளிப்படுத்துகின்றன:

1. ஆத்துமநேசரின் கை குஷ்டரோகி குணமாகும் தைலமாய் இருந்தது. இயேசு குஷ்டரோகியைத் தொட்டவுடனே அந்த ரோகம் குணமாயிற்று என்று அறிகிறோம்.

2. ஆத்துமநேசரின் கை காய்ச்சலைத் தீர்க்கும் மருந்தாயும் இருந்தது. இதைப் பேதுருவின் மாமியின் விஷயத்தில் அறிந்து கொள்கிறோம்.

3. அவருடைய கரம் குருட்டுக் கண்களைத் திறக்கும் கருவியாயும் இருந்தது. கிறிஸ்துவின் ஜீவிய காலத்தில் [1] நாலு குருடர் அவருடைய திருக்கரம் பட்டதால் குணமடைந்ததைக் காண்கிறோம்.

4. அவருடைய கரம் கோணலை நேராக்குகிறதாயும் இருந்தது. பிசாசின் ஏவுதலினால் பதினெட்டு வருடமாய் எவ்வளவும் நிமிரக்கூடாத முதுகின் வளைவு கிறிஸ்துவின் கை பட்டவுடன் நிமிர்ந்து விட்டது என்று அறிகிறோம். இன்னும் கிறிஸ்துவின் கை மகத்துவங்களைப் பின்னாலே காட்டுவோம்.

## தியானம்

ஆத்துமாவே! நீ உன் கண்களை ஏறெடுத்து கிறிஸ்து இயேசுவின் திருக்கரங்களை நோக்கித் தியானி. இரட்சகர் தோமாவைப் பார்த்து, 'என் கைகளைப் பார்' என்று நீட்டிக் காட்டினது போல, இந் நிமிஷத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் நின்று கொண்டு என் ஆத்துமாவின் தியானத்துக்குத் தமது கைகளை நீட்டித் தருகிறார். அவர் சுகமுள்ளவர்களுக்கல்ல, பிணியாளிகளுக்கு உதவியாகத் தமது கையை நீட்டுகிறார். பாவ குஷ்டத்தால் நிறைந்த என் ஆத்துமா இன்னும் எத்தனை வருடம் தான் அவதிப்பட வேண்டும்? அநேக வருடமாய் நடைபிணம் போலிருந்த சரீர குஷ்டரோகியையும் அவர் கரம் தொட்டது. இரட்சகர் தொட்டது முதல் வியாதியுமில்லை; அதுவுமின்றி

எவ்வளவோ பாக்கியமும் தொடர்ந்து வந்தது. என் குஷ்டரோகம் அவராலே நீங்கும், ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்; நீர் என் ஆத்துமாவைத் தொடவும் வேண்டியதில்லை. 2 எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்று உமது திரு உள்ளத்தில் நினைத்தால் போதும்; அது என்னைத் தொட்டது போலே தான். இப்பொழுது நான் குஷ்டரோகியாயிருப்பதினாலே உம்மைச் சேராதவனும், உமது மோட்சலோகக் காணியாட்சிக்குப் புறம்பானவனும், பாவ மன்னிப்பின் சந்தோஷங்களை இழந்தவனும், பரிசுத்தவான் களின் ஐக்கியத்தைவிட்டுப் பிரிந்தவனுமாயிருக்கிறேன். பழைய குஷ்டரோகியைப் போல் நானும் வந்து உமது பாதத்தில் விழுகிறேன். அடியானுக்கு இரங்கும், இரங்கும்.

## விசுவாச உணர்ச்சி

ஆ! என் இரட்சகர் இம்மட்டும் எனக்கு மடக்கிக் கொண்டிருந்த கைகளை என் ஆத்துமாவுக்கு நேராக நீட்டுகிறார். இதோ என்னைத் தொடுகிறார். அதை உணருகிறேன். இனி எனக்கென்ன குறைச்சல்? இனி நான் பரிசுத்த நகரத்துக்குள் போவேன்; அங்குள்ளவர்களோடு சகவாசஞ் செய்வேன். இனி நான் என் உதடுகளை மூடிக்கொண்டு அசுத்தன், அசுத்தன் என்று கத்தமாட்டேன். மகா பிரதான ஆசாரியனாகிய இயேசு என்னைத் தமது ஜனக்கூட்டத்துக்குத் தகுதியுடையவனென்று தீர்ப்புச் சொல்லிவிட்டார்.

## தியானம்

ஆத்துமாவே! பாவ குஷ்டரோகத்திற்கு மாத்திரமல்ல, ஆத்துமாவின் காய்ச்சலாகிய சிற்றின்பங்களுக்கும் இயேசுவின் கரத்தில் மருந்துண்டு; இருதயக் குருட்டாட்டத்துக்கும் மருந்துண்டு; இருதயக் கோணலுக்கும் மருந்துண்டு. ஆகையால், நீ ஏன் உன் வாலிபப் பிராயமுதல்... வருடங்களாய் விடாச் சுரமுடையவனாய் மெலிந்து போக வேண்டும்? இயேசு

வண்டை வா! நீ பிறந்த நாள் முதல் ஏன் குருடனாய்த் திரிய வேண்டும்? இதோ நசரேயனாகிய இயேசு கடந்து போகிறார். உன் குருட்டாட்டம் அவருக்குத் தெரிந்திருந்தும், நீ கூப்பிடட்டும் என்று அவர் பாராதவர்போல் போகிறார். இது நல்ல சமயம், கூப்பிடு அவர் திரும்புமட்டும் கூப்பிடு; தூரப் போய்விட்டாரென்று எண்ணாதே, உன் குருட்டுக் கண்ணுக்கு அப்படி தோன்றுகிறது போலிருக்கிறது. அவர் கிட்ட நிற்கிறார், கூப்பிடு. அவர் ஒரு நோயாளியையும் ஏமாந்து போகச் செய்ததில்லை.

### ஆத்துமாவின் கூப்பாடு

நசரேயனாகிய இயேசுவே! எனக்கு இரங்கும்
நசரேயனாகிய இயேசுவே! எனக்கு இரங்கும்
என் இருதயக் குருட்டாட்டத்தை நீக்கியருளும்.

ஆத்துமாவே! உனக்கு எத்தனை வியாதியப்பா, குஷ்டரோகம், சிற்றின்பக் காய்ச்சல், குருட்டுத்தனம் இவற்றோடு போயிற்றா? கூனனாயுமிருக்கிறாயே. உன்னைப் போல நிர்ப்பந்த ஸ்திதியுடைய ஒரு ஜந்துவைக் காட்டுவாயா? காட்டமாட்டாய். கோணாத ஆத்துமாவைக் கண்டதேயில்லை. [1]இருதயமானது திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. [2] அதின் நினைவெல்லாம் நித்தம் பொல்லாதது என்று சத்திய வேதம் சொல்வது சத்தியமே சத்தியம். ஆத்துமாவே! உன் இருதயக்கூன் நிமிர்ந்து நீதியின் சூரியனைக் கண்ணோக்கி அதின் மாட்சிமைகளை அனுபவிக்க வேண்டுமானாலும், மண்ணை நோக்காமல் விண்ணை நோக்க விரும்பினாலும் இயேசுவின் திருக்கரத்தைத் தேடவேண்டியது. உன் ஜெபதபங்களினாலும், நற்கிரியைகளினாலும் ஆத்துமாவின் கோணலைத் திருத்திக் கூனை நிமிர்த்திக் கொள்ளலாமென்று எண்ணினால் அதைப்போல் பைத்தியம் வேறொன்றில்லை. அது நிமிரவே மாட்டாது. இயேசுவின் கையால் அது கூடுமேயன்றி உன் கையால் கூடாது. கடைசியாக ஆத்துமாவே! நீ குஷ்டரோகி, நீ காய்ச்சல்காரன், நீ குருடன். இப்படிப்பட்ட நீ, உன் இருதயக் கூனை எப்படித் திருத்துவாய்? நீயே சொல்லு.

[1] எரே. 17:9. [2] ஆதி. 6:5

## விசுவாசப் பரவசம்

வானமே கேள், பூமியே செவிகொடு, பாவி பேசுகிறேன். குஷ்டரோகம், காய்ச்சல், குருட்டுக்கண், கூன் என்னும் நான்கு நோயோடு பிறந்தேன். இந்த நோய்கள் என்னைப் பிடித்து... வருடங்களாகின்றன. பண்ணாத ஜெபமெல்லாம் பண்ணினேன், குடியாத மருந்தெல்லாம் குடித்தேன்; பலிக்கவில்லை. கடைசியாக, தெய்வீக வைத்தியனாகிய இயேசுவின் பாத வைத்தியசாலையில் வந்து சேர்ந்தேன். அவர் என்னைத் தமது கிருபாகரத்தால் தொட்டார். அந்நிமிட முதல் நான்கு நோயும் தீர்ந்து இதோ, நிற்கிறேன். ஆகையால், வானமே மகிழ்ச்சிகொள். பூமியே கெம்பீரமாய் முழங்கு.

## விசுவாச வணக்கம்

குஷ்டரோகம் தீர்த்த இயேசுவே நமஸ்காரம்

குணமளித்த இரட்சகா நமஸ்காரம்

கண் கொடுத்த ஐயனே நமஸ்காரம்

கூன் நிமிர்த்த அப்பனே நமஸ்காரம்

## ஜெபம்

நொருங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப்படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே, துன்பங்களும். இடுக்கண்களும் எங்களை வருந்தும் போதெல்லாம், நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும்; உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல், உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாய தந்திரங்கள் யாவும் தேவரீருடைய தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற......

## துதி

**பூமியின் குடிகளே, எல்லோரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்; கர்த்தரைத் துதியுடன் பாடிக்கொண்டாடுங்கள். நமது தேவனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள். அவர் நல்லவர்., அவர் கிருபை என்றுமுள்ளது. அல்லேலூயா.**

# தியானம் 14

## ஆத்தும நேசரின் கை (2 ஆம் பங்கு)

### வேதம்

[1]'இயேசு நாயீன் என்னும் ஊருக்குப் போனார்...அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்த போது, மரித்துப் போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான்... கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்ட வந்து, பாடையைத் தொட்டார்,...' ' மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான்.' [2]'இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும் படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்... சீடர்கள் முகம்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இயேசு வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள்' என்றார். அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தார்கள்.

### போதனை

இயேசுவின் திருக்கரத்தைப் பற்றிய நான்கு குறிப்புகளை முந்தின தியானத்தில் ஆராய்ந்தோம்; இப்போது வேறு இரண்டு குறிப்புகளை ஆராய்ந்து தியானிப்போமாக:

*1. இரட்சகரின் கரம் சாவில் ஜீவன் கொடுததது.* நம்முடைய இரட்சகர் மூன்று தரம் செத்தவர்களுக்கு உயிர் கொடுத்திருக்கிறார். ஒரு சிறு பெண்ணை செத்த வீட்டுக்குள்ளும், ஒரு வாலிபனைப் புதைக்கப் போகிற பாதையிலும், [3]ஒரு புருஷனை அடக்கஞ் செய்த நாலாம் நாளிலும் உயிரோடெழுப்பினார். முந்தின இருவருடைய உயிர்த்தெழுதலும் ஆத்துமநேசரின் திருக்கரம் பிணத்தை அல்லது பாடையைத் தொட்டிருக்கிறது. இம்மூவர் மாத்திரம் இயேசுவால் உயிரோடெழுப்பப்பட்டார்கள் என்று சொல்லி முடித்து விடலாகாது. அவர் இன்றைக்கும் இது ஏன்? இது ஏன்? [4]அக்கிரமங்களாலும் பாவங்களாலும் மரித்தவர்கள்

---

[1] லூ. 7:11 15. [2] மத். 17:1-8 [3] யோ. 11:43 [4] எபே. 2:1.

அனைவரையும் உயிரோடெழுப்புகிறார். கடைசிநாள் என்னப்படுகிற இன்னுமொரு காலத்தில் அவர் சர்வ ஜனங்களையும் அவரவர் சரீரங்களோடே உயிரோடெழுப்புவார்.

2. இரட்சகரின் கரம் பயந்தீர்க்கும் மருந்து என்றும் அறிகிறோம். பேதுரு, யோவான், யாக்கோபு என்ற மூன்று சீடருடன் இயேசு மலையிலேறி மறுரூபப்பட்டபோது, நடந்த அதிசயங்களைக் கண்டு பயந்து முகம் குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களண்டை போய் அவர்களைத் தமது திருக்கரத்தால் தொட்டவுடனே பயம் மாறித் தைரியம் பிறந்தது.

**தியானம்**

ஆத்துமாவே! இயேசு நேசரின் கை மகத்துவம் கண்டாயா? அருளின் மேல் அருள் அவர் உள்ளங்கையிலிருந்து பொங்கி வடிகிறதே! எத்தனை வியாதிகளுக்குத்தான் அங்கே மருந்திருக்கிறது! குஷ்டரோகத்துக்கும், கூனுக்கும், குருட்டுக் கண்ணுக்கும், விடாச் சுரத்துக்கும் மாத்திரமா அங்கே மருந்துண்டென்று நினைத்தாய்? சாவுக்கும் பயத்துக்கும் அங்கேயே மருந்து; ஆகையால் சந்தோஷப்படு. நீ பல வியாதி கொண்டவனென்று நான் அறிவேன். உன் பல வியாதி தீரும்படி பல வைத்தியரைத் தேடி, பல ஊருக்கும் போய் பலவிதமான துன்பங்களை அடையவேண்டுமென்று பலதரம் நினைத்திருப் பாய். நீ இயேசுவின் கரத்தை நோக்கி அதின் நிழலை அடைந்தால் உன் பல வியாதிகளையும் அவரே தீர்த்துப் போடுவார். அவர் கை வல்லமை உனக்குத் தெரியாது. ஆத்துமாவே! நீ இன்றே பாவத்தில் செத்தாயானாலும் அல்லது வெகு காலத்திற்கு முன் செத்தாயானாலும், உன் ஆத்துமாவுக்கு ஜீவனைக் கொடுத்த உன்னை உயிர்ப்பித்து, தம்மோடு கூட பரதீசில் சேர்த்துக் கொள்ள அவருக்கு வல்லமையுண்டு. ஐயோ! நான் பாவத்தில் செத்து இத்தனை வருடங்களாயிற்றே, இனி எனக்கேது ஜீவன்; பிசாசோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு இத்தனை வருடகாலமாயிற்றே, அழுகி நாறி, என் ஆத்துமா

நன்மையானதைச் செய்யும்படி ஒருமித்துச் சேர முதலாய்க் கூடாதவிதமாய் உருவழிந்து போயிற்றே. இனியேது எனக்கு ஜீவன் என்று நீ கலங்கலாம். ஆ, பைத்தியங்கொண்ட ஆத்துமாவே! இயேசுவின் திருக்கரத்தின் வல்லமையை நீ பார்க்க வேண்டியதேயன்றி, உன் அழிவின் நாச நிலைமையை ஏன் பார்க்கிறாய்? நீ துர்க்குணத்தில் உருவானாய் என்றும், உன் தாய் உன்னைப் பாவத்திலே கர்ப்பம் தரித்தாள் என்றும் அவர் அறிவார். உன் ஆத்தும சாவின் வருடங்கள் உன் கணக்கைவிட அவர் கணக்கில் அதிகமாய்த்தான் இருக்கிறது; அப்படியிருந்தும் உனக்கு நித்திய ஜீவனைத் தருகிறேன் என்று அழைக்கிறாரே. பின்னை ஏன் நீ கலங்க வேண்டும்? அநேக வருடங்களாய்ச் செத்துப் போன ஆத்துமாவானாலும் போ. பிசாசு உன் ஆத்துமாவுக்குப் பாடை கட்டி அதில் கிடத்திவிட்டாலும் உனக்கு நம்பிக்கையுண்டு. நீ நரக வேதனையை இப்போதே அனுபவித்துக் கொண்டிருக்கிறது போலிருந்தாலும், பிசாசு உன்னைப் பாவ பாதாளத்தில் தள்ளி உன் மேல் அவிசுவாசம், நன்மையை எதிர்த்தல், சந்தேகம் முதலிய பெரிய கற்களைத் தைத்து முடிப்போட்டது போலிருந்தாலும், உனக்கு நம்பிக்கையுண்டு. அவர் கையால் ஆத்தும அவிழ்தம் பெற்று உட்கொள்ள மாத்திரம் தீர்மானம் பண்ணு. அவர் தமது திருக்கரத்தால் தொடும்படி மாத்திரம் வகை பண்ணிக்கொள். நீ பிழைத்தாய். நீ உயிர் அடைந்தவுடனே உன்னைப் பாடையில் கிடத்தின பகைஞனை அவர் எளிதில் விடமாட்டார். இரண்டாம் ஆதாமும் நாசரேத்தூர் தச்சனுமாகிய அவர், உன் பகைவனுக்கு ஒரு சவப்பெட்டி செய்து, அவனைப் பாதாளத்தில் அடக்கி ஒருநாளும் தலையெடாதபடி செய்து போடுவார்.

ஆத்துமாவே, நீ பல தரம் பேதுருவையும் மற்ற இரண்டு சீடரையும் போல, தேவ மகிமையைத் தாங்க இயலாமல் பயந்து குப்புறக் கிடக்கிறாய். அப்படிக் கிடப்பது இயல்பு தான். சூரியனைப் போல பிரகாசிக்கும் முகத்தையும், வெளிச்சம் போல் துலங்கும் வஸ்திரத்தையும், அநேக ஆண்டுகளுக்கு முன் பிரிந்து வேறு லோகத்திற்குச் சென்ற ஆவிகளையும், ஒளியுள்ள

ஒரு மேகம் வெப்பத்தைத் தராமல் நிழலிடுவதையும் ஆகாயத்திலிருந்து தேவ சத்தம் விளம்புவதையும் கண்டு கேட்கிற எந்த ஆத்துமாவும் கலங்குமென்பது மெய். உன் பாவ மயக்கமே இதற்கெல்லாம் முகாந்தரம். அந்த மயக்கம் தீரவேண்டுமானால் இயேசுவின் கரத்தை நாடு; அது பட்ட உடனே சுகம் பிறக்கும். அப்புறம் தேவ மகிமையானாலும் சத்தத்தாலும் நீ மயங்கமாட்டாய். பழைய மோசேயைச் சற்றே கவனித்துக் கொள். சீனாயின் அடிவாரத்தில் நின்ற ஆறு லட்சம் புருஷரும், மற்றவர்களும் தேவ மகிமையைக் கண்டு கலங்கினார்களே; மோசே கலங்கினாரோ? மலையை மூடின மேகங்களையாவது, கடந்த பிரகாசத்தையாவது, பேசின சத்தத்தையாவது கண்டு அவர் கலங்கவில்லை, அது ஏன்? கர்த்தருடைய கிருபாகரம் அவரைத் தொட்டது என்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது. என் இயேசுவினுடைய கரம் என்னைத் தொடுமானால் தேவ மகிமைகளைக் காட்டும் எந்தப் பிரகாசத்தையும், பாவ நாசத்தைக் காட்டும் எந்தக் கார் மேகங்களையும், துன்பம் துக்கம் சாவு என்னும் இடி முழக்கங்களையும், என் ஆத்துமா காண்கையில் கலங்கிச் சாகவுமாட்டாது; மயங்கி மரிக்கவு மாட்டாது.

## விசுவாச வணக்கம்

**ஜீவன் தரும் கரமே நமஸ்காரம்**

**பயம் அகற்றும் கரமே நமஸ்காரம்**

## ஜெபம்

மகா இரக்கமுள்ள இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே! தேவரீருடைய கிருபாகரத்தின் மகத்துவங்களை உணருகிற ஏழைப் பாவியாகிய என் ஆத்துமா சாகிற நிலைமை யிலிருக்கிறது. நீர் தயவாய் இரங்கி உமது கையை என் ஆத்துமாவின் மேல் வையும். அப்போது அது பிழைக்கும். உமது கரத்தின் அடிகளால் என் ஆத்துமா தொய்ந்து மயங்கி எழுந்திருக்கிறதற்குச் சக்தியற்றுக் கிடக்கிறதைத் தயவாய்க் கண்ணோக்கியருளும். என்னைத் தொடும், இயேசுவே! தொடும். சாவின் அந்தகாரம் என் முதுகின்மேலும், உமது நியாயத் தீர்ப்பின் தண்டாயுதம் என் கழுத்தின் மேலுமிருப்பதால்

நான் குப்புறக் கிடக்கிறேன். தேவரீர் வந்து என்னைத் தொட்டால் எனக்கு ஜீவனும் தைரியமும் கிடைக்கும். மற்றப்படி என் நிர்ப்பாக்கியம் தீரமாட்டாதே! சாகிறவனுடைய சாவை விரும்பாத இரட்சகரே! எனக்கிரங்கி உமது கரத்தைக் கொண்டு தொட்டு, ஜீவனையும் தைரியத்தையும் அனுக்கிரகித்தருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற.....

**துதி**

**இயேசு மகாராஜனுக்கு ஓசன்னா!**
**எங்கள் குல தேவனுக்கு ஓசன்னா!**
**வல்ல கரமுள்ளோருக்கு ஓசன்னா!**
**வானாதி வானமட்டும் ஓசன்னா!**

# தியானம் 15

## ஆத்தும நேசரின் கை (3 ஆம் பங்கு)

### வேதம்

[1]'இயேசு எருசலேமுக்குப் போய், தேவாலயத்திலே ஆடுகள், மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, அவர்கள் யாவரையும் ஆடு, மாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு... என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்' என்றார். [2]'இயேசு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீடருடைய கால்களைக் கழுவவும்... தொடங்கினார்.' [3] ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான். அப்பொழுது இயேசு....அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்.' [4] என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது... நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை'

### போதனை

முந்தின இரண்டு தியானங்களிலேயும் நமது இரட்சகர்ன கரம் குஷ்டரோகிக்குச் சுகத்தையும், காய்ச்சலுக்குக் குணமாக்குதலையும், குருடருக்குக் கண்களையும், சாவுக்கு ஜீவனையும், கூனுக்கு நிமிர்த்தலையும், பயத்துக்குத் தைரியத் தையும் தருகிற மகத்துவமுள்ளதென்று பார்த்தோம். மேலே சொல்லிய வசனங்கள் வேறு சில மகத்துவங்களையும் வெளிப் படுத்துகின்றனவென்று அறிகிறோம்.

1. இயேசுவின் கரம் தேவாலயத்தைச் சுத்திகரிக்கிறது. இரட்சகர் இரண்டு தரம் தேவாலயத்தைச் சுத்திகரித்தார். இயேசு லோக குருவாய் வெளிப்பட்டு எருசலேமுக்குப் போன

---

[1] யோ. 2: 13-16. [2] யோ. 13:5 [3] லூ. 22:50, 51 [4] யோ. 10:27,28

[1]முதலாம் பஸ்காவிலும், [2]கடைசி பஸ்காவிலும் தேவாலயத்தைச் சுத்திகரித்தார். அவர் முதலாந்தரம் ஆலயத்தைச் சுத்திகரித்ததை, பரி. யோவான் மாத்திரம் சொல்லியிருக்கிறார். கடைசி முறையாய்ச் சுத்திகரித்ததை [3]மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டுதரமும் அவர் திருக்கரம் காசுக்காரருடைய காசுகளைக் கொட்டினது; பலகைகளைக் கவிழ்த்தது; ஆசனங்களைத் தள்ளினது, கொறடாவைப் பிடித்துக் கொண்டு வியாபாரிகளையும் ஆடு மாடுகளையும் அடித்துத் துரத்தினது. தேவன் தமது பிரகாரங்களில் பரிசுத்தத்தை விரும்புகிறாரென்று இது திட்டமாய்க் காட்டுகிறது. யூதர் தேவாலயத்தை வியாபார வீடாக்கின குற்றத்தை, அநேக கிறிஸ்து சபையையும் குறித்துச் சொல்லத்தக்கதாயிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக பரிசுத்த ஆவியின் ஆலயமாகிய நம்முடைய சரீரத்தையும், ஆத்துமாவையும் கள்ளர் குகையாக்கும் பெரிய குற்றமும் இதினால கண்டிக்கப்படுகிறதென்று உணர்ந்து கொள்ள வேண்டியது.

2. இயேசுவின் கரம் அசுத்தத்தை நீக்கிவிடுகிறது. இரட்சகர் தமது பன்னிரெண்டு சீடருடைய கால்களையும் தமது திருக்கரத்தால் கழுவி, திருக்கரத்தால் துடைத்தார். இயேசு பாவங்களை அருவறுத்து விலக்குகிறது மாத்திரமல்ல, பாவிகளைக் கழுவவும் தாழ்ந்து கொள்ளுகிறார் என்று போதிக்கிறது.

3. இயேசுவின் கரம் வெட்டி ஒட்டச் செய்து, அற்றதைப் பற்றப் பண்ணுகிறது. கெத்செமனேயில் பேதுருவின் கத்தியால் வெட்டப்பட்ட மல்குஸின் காது கிறிஸ்துவின் கை பட்டவுடனே ஒட்டி ஆறிப்போயிற்று.

4. இயேசுவின் கரம் பாவியின் கோட்டையாயுமிருக்கிறது. அவருடைய கரத்தின் வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் அடைகிற பாவிகளுக்கு அவருடைய திருக்கரமே அடைக்கலம் போலிருக்கிறது. என் கையிலிருந்து ஒருவனும் அவர்களைப் பறித்துக் கொள்வதில்லை என்று இரட்சகர் தீர்மானமாய்ச் சொல்லுகிறார்.

---

[1] யோ. 2: 13. [2] மா. 11:15 [3] மத். 21:12,13; லூ. 19:45,46

## தியானம்

ஆத்துமாவே! உன்னைப் பாவப் படுகுழியிலிருந்து கரையேற்றும்படி வந்த இயேசுவின் திருக்கரத்தைப் பார்க்கப் பார்க்க மகத்துவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் விளங்கு கின்றனவே! மெய்தான்; என் இரட்சகரின் கரம் நன்மையின் மேல் நன்மையுள்ளதாயிருக்கிறது.

அது நான் போய் பணிந்து குனிந்து முழங்கால்படியிடும் தேவாலயத்தைச் சுத்திகரிக்கப் படிப்பிக்கிறது. இனி நான் என் ஊர் ஆலயத்தை அசட்டையாய் எண்ணமாட்டேன். அதனுள் என் வியாபாரக் கவலையையும், பொருளாசையையும் மற்றும் பாவங்களையும் கொண்டுபோய் மனோராஜ்யம் செய்து அதை என் பாவ நினைவுகளின் வியாபார வீடாக்க மாட்டேன்; மற்றவர்கள் அதைக் கனவீனப்படுத்தாத படிக்கும் பிரயாசப் படுவேன். என் தேவனுடைய ஆலயத்தைப் பற்றிய பக்தி வைராக்கியம் என்னைப் பட்சிப்பதால் இப்படித் தீர்மானஞ் செய்கிறேன்.

இரட்சகர் கையில் நான் ஒரு சவுக்கைக் காண்கிறேன். அவர் என்னையே அடிக்கும்படி வருகிறார் என்றாலும் நான் ஓடிப்போகமாட்டேன். ஏன் அடிக்க வருகிறார்? ஏன் அவர் கையில் கொறடாவைப் பிடித்தார்? என் ஆத்துமாவாகிய ஆலயத்துக்குள் நடக்கிற அநியாயங்களைத் தொலைத்துப் போடச் சவுக்கோடு வருகிறார். இயேசுவே! வாரும், உமது கரத்தின் சவுக்கால் வீசி ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதபடி அடித்துத் துரத்தும். இதோ நீர் கையில் சவுக்கெடுத்தவுடனே என் பாவ வியாபாரிகளின் கண்விழி பிதுங்குகிறது; அவர்கள் ஒட்டம் பிடிக்கிறார்கள்.

இயேசுவே! அதோ அந்த மூலையில் பொறாமையின் வியாபாரி ஒளிகிறான்; இதோ பாரும், சிற்றின்ப வியாபாரி மறைகிறான்; பொருளாசை என்பவன் தன் பொருளுக்குள் பதுங்குகிறான்; சிற்றின்பம், பெருமை, உதாசீனம், கீழ்ப்படியாமை, அவிசுவாசம் முதலிய சகல வியாபாரமும் என்னுடைய ஆத்தும ஆலயத்தில் உயர்ந்த விலைக்கு விற்கப்படும்படி அலங்கரிக்கப்பட்டு, பரப்பப்பட்டிருக்கிறது.

அதோ அந்த வியாபாரி, நான் நொண்டி ஐயா, என்னை அடிக்காதேயும், மெதுவாய்ப் போய்விடுகிறேன் என்கிறான். வேறு சில பாவ வியாபாரிகள், முன்னிலும் உயர்ந்த குடிக்கூலி தருகிறோம், உன் ஆத்தும ஆலயத்தில் வியாபாரஞ் செய்ய இடங்கொடு என்று நயவசனம் பேசுகிறார்கள். இனிமேல் இந்த நீச வியாபாரம் என் ஆலயத்துக்குள் வேண்டாம். இயேசுவே! உமது சவுக்கோடு வந்து துரத்தும். அவர்கள் ஆசனங்களைக் கவிழ்த்துப் போடும்; அவர்கள் பீடங்களை இடித்தருளும்.

ஆ, என் ஆத்தும நேசர் எவ்வளவு அன்புள்ளவர்! ஆ, அவர் கரம் எவ்வளவு வல்லமையுள்ளது! எல்லாப் பாவங்களையும் கொட்டுகிறார், எல்லாப் பிசாசுகளையும் துரத்தி விரட்டுகிறார், மூலை முடங்குகளில் பதுங்கின பயல்களையும் அவர் தேடித் துரத்திவிட்டார். ஆனந்தமே பரமானந்தமே இன்று முதல் எனக்கு.

### பரவசம்

அடா என் பாவங்களே! பாவ வியாபாரிகளே! என் பெலவீனம் உங்கள் ஆளுகைக்கும் பலமாயிருந்ததே. இனி உங்கள் சாமர்த்தியங்களை என் இயேசுவின் வல்ல கையின் முன் காட்டுங்கள், பார்ப்போம், தவிடுபொடி, தவிடுபொடியாக்கிப் போடுவார்; பத்திரம் இனிக் கிட்ட வராதேயுங்கள்.

### விண்ணப்பம்

இயேசுவே! உமது கரம் துன்மார்க்கத்தைத் துரத்திவிடுகிறது. உமது கையை எப்போதும் என் ஆத்துமாவின் பக்கமாய் நீட்டியருளும். உமது கரம் என்னை விட்டு விலகினால் என் பாவங்கள் ஆத்துமாவை மறுபடியும் பின் தொடரும்.

### தியானம்

என் இரட்சகர் என் பாவங்களை என்னிலிருந்து துரத்துகிறதுமல்லாமல், என் ஆத்துமாவின் அழுக்குகளைக் கழுவவும் சித்தமாய் இருக்கிறார். ஆகையால் அதை அவர் கரத்துக்கு நீட்டுகிறேன். அவர் கழுவாவிட்டால் என்னிடத்திலுள்ள அழுக்கு நீங்காததுமல்லாமல் அவரிடத்தில் ஒரு பங்கும் எனக்குக் கிடையாது.

நான் என் ஆத்துமாவின் காதறுபட்ட மல்குஸாயிருக்கிறேன். என் ஆத்துமக் காது அற வெட்டப்பட்டுப் போனதால் தேவாவியின் எச்சரிப்பும் ஏவுதலும், தேவனுடைய கட்டளைகளின் தொனியும் எனக்குள் தொனிக்கிறதில்லை. அதினால் நான் அவருடைய இரக்கங்களுக்கு அந்நியனாகயிருக்கிறேன். என் இரட்சகரின் கிருபையுள்ள கரம் அதையும் குணமாக்கி ஒட்டப்பண்ண வல்லமையுள்ளதென்று அறிகிறேன்.

அவருடைய கரமே என் ஆத்துமாவின் கோட்டை. என்னை விழுங்கும்படி வருகிற பிசாசும், என்னை விழத்தள்ளும்படி வருகிற சாத்தானும் நான் என் இயேசுவின் கரத்திலிருக்கிறதைக் கண்டு ஏமாந்து போய்விடுகிறார்கள். ஆத்துமாவே! நீ அவருடைய கரத்தில் உட்கார்ந்து கொள்.

**விசுவாச வணக்கம்**

பேயை ஓட்டும் கரமே நமஸ்காரம்
பாவம் கழுவும் கரமே நமஸ்காரம்
வெட்டை ஓட்டும் கரமே நமஸ்காரம்
பறி கொடாக் கரமே நமஸ்காரம்
சர்வ வல்ல கரமே நமஸ்காரம்.

**ஜெபம்**

தேவனே, பிசாசினுடைய கிரியைகளை அழிக்கவும் எங்களைத் தேவ புத்திரரும் நித்திய ஜீவ சுதந்தரருமாக்கவும் உமது திருக்குமாரனை மனுஷாவதாரம் எடுக்கச் செய்தீரே! நாங்கள் அவருடைய மகிமையுள்ள நித்திய ராஜ்யத்தில் அவருக்கு ஒப்பானவர்கள் ஆகும் பொருட்டு, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவை எங்கள் ஆத்துமாவை விட்டுக் கழித்துப் போடவும், உம்முடைய வழிகளின்படியே நடந்துவரவும் உமது நல்ல ஆவியைக்கொண்டு எங்களைத் தேற்றிப் பலப்படுத்த வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற........

**துதி**

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், அவர் அதிசயங்களைச் செய்கிறார். அவருடைய வலதுகரமும் அவருடைய பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்கினது. அல்லேலூயா, அல்லேலூயா! ஆமென்.

# தியானம் 16

## ஆத்தும நேசரின் கை (4 ஆம் பங்கு)

### வேதம்

[1]'அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில், தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தார் என்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிவித்தார்.' [2]'பேதுரு படகை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்...இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.' [3]'இயேசு சிறு பிள்ளைகளை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்தார்.' [4]'அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.' [5]'பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்.'

### போதனை

மேலே காட்டிய வாக்கியங்களில் இயேசுவினுடைய கையின் மகத்துவங்கள் சிலவற்றைக் காண்கிறோம்.

1. இயேசுவின் கையில் பிதாவானவர் சகலத்தையும் ஒப்புவித்திருந்தார். நம்முடைய இரட்சண்யத்திற்கு வேண்டியனவெல்லாம் அவர் கையில் அளிக்கப்பட்டன. ஆகையால் ஒரு பாவி நான் பிதாவாகிய தேவனிடத்தில் நேரே போவேன் என்று நினைத்தால் அது துணிகரம். இரட்சண்யம் பெற தேவன் ஏற்படுத்திய முறையை அல்லாமல் தன்னிஷ்ட முறையை ஒருவன் கையாடினால் ஒன்றும் பெற்றுக் கொள்ள மாட்டான். நமக்கு வேண்டியதெல்லாம் இரட்சகருடைய கையிலிருக்கிறது.

---

[1] யோ. 13:3. [2] மத். 14:29-31. [3] மா. 10:16. [4] லூ. 22:19. [5] லூ.24:50.

2. இயேசுவின் கை **அபாயத்தில் துணை செய்கிறது.** பரி. பேதுரு இயேசுவைப் போல ஜலத்தில் நடந்து பார்த்தார்; சில அடிகள் போனபின் அவிசுவாசம் மேலிட்டது. உடனே ஜலத்தில் அமிழ்ந்தார்; அப்போது இயேசு தூக்கி இரட்சித்து படகில் ஏற்றினார்.

3. **வரமளிக்கும் கையாயிருந்தது.** இயேசுவின் கரத்தின் ஆசீர்வாதங்களைப் பெறும்படி அநேக தாய்மார் தங்கள் குழந்தைகளைக் கொண்டு வந்தார்கள். அவர் பரமேறுகிற சமயத்தில் தமது சீடரை ஆசீர்வதித்துவிட்டு ஏறினார். இப்படி அவர் புத்தியுள்ள மனுஷரைத் தமது திருக்கரத்தைக் கொண்டு ஆசீர்வதித்தது மாத்திரமல்ல, 'அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, சீடருக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருந்தது' என்றும், 'பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என் இரத்தமாய் இருக்கிறது' என்றும் சொன்னார். [1]இதையே பரி. இராப்போசனம் என்று அழைக்கிறோம். அப்பத்தாலும் திராட்ச இரசத்தாலும் குறிக்கப்படுகிற உள்ளான பாங்காகிய இயேசுவின் திருச்சரீரமும் இரத்தமும் நமக்கு என்றும் ஆத்தும போஜனமாயும் பானமாயுமிருக்கும்படி, இரட்சகர் தமது திருக்கரப் பிரதிஷ்டையால் உறுதிப்படுத்தினார்.

### தியானம்

ஆத்துமாவே! களிகூரு, உன் இரட்சகருடைய கரம் உன் தியானத்துக்கு இன்னும் நீட்டப்பட்டிருக்கிறது. நான் என் இரட்சகரின் கை மகத்துவங்கள் அனைத்தையும் காணும்படி தயை செய்கிறார். இம்மட்டும் நான் பாராத சில மகத்துவங்களை இப்போது காண்கிறேன். தேவனுக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக; திரியேக தேவனுக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்.

---

[1] *மத். 26:26-29; மா. 14:22-25; லூ.22:19,20; 1கொ. 11:23-26*

பரம பிதாவாகிய தேவன் சகலத்தையும் அவருடைய குமாரனாகிய என் இரட்சகரின் கரத்தில் ஒப்புவித்திருக்கிறார். பிதாவாகிய தேவன் தமது சத்துருக்களை இயேசுவின் பாதத்தின் கீழ் வைத்தார்; மனந்திரும்புகிற தம்முடைய பிள்ளைகளை அவருடைய கையில் ஒப்புக் கொடுத்தார். தம்முடைய பிள்ளைகளுக்கு வேண்டிய ஆத்தும வாழ்வுகளும், சரீர பாக்கியங்களும் இயேசுவின் கையிலிருக்கின்றன. ஆகையால் ஆத்துமாவே! தேவ தயவோ, பாவமன்னிப்போ, நீதிமானாகுதலோ, பரிசுத்த இருதயமோ, மெய்விசுவாசமோ, மாயமற்ற அன்போ, தி_ நம்பிக்கையோ, உலகம் தரக்கூடாத மெய்ச் சமாதானமோ, என்னென்ன உன் ஆத்துமாவுக்கு வேண்டுமோ எல்லாம் இயேசுவின் கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் அவர் கரத்தையே நோக்குவாயாக. ஆ, நான் இனி ஒன்றுக்கும் கவலைப்படுகிறதில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் அகப்படுகிற பண்டகசாலை இன்னதென்று கண்டு கொண்டேன்; எனக்கு வேண்டியதற்கெல்லாம் பங்கிடும் அதிகாரி என் ரூபமெடுத்து வந்த தெய்வீக இயேசு என்று கண்டேன்; இனி நான் என் இரட்சிப்பை அவருடைய திருக்கரத்திலிருந்து எதிர்பார்ப்பேன்.

நான் என் ஜீவகால பிரயாணத்தில் செல்லும்போது என் ஆத்துமா கடக்க வேண்டிய துன்பம், துக்கம், பாடு, சாவு முதலான கடலும் சமுத்திரமும் என்னை ஆழ்த்தி, தங்கள் பாதாளப் படுக்கையில் என்னைச் சேர்க்கமாட்டாது. நான் துன்பக் கடலில் இறங்கு முன்னே அவர் அதின்மேல் நடந்து கொண்டு திரிகிறார். நான் சற்றே அமிழத் துவங்கையில் அவர் தமது கரத்தை நீட்டி என்னை இரட்சிக்கிறார். ஏனெனில், சாகிறவனுடைய சாவை அவர் விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார். பாவப்பிரளயங்களாவது, சிற்றின்ப எண்ணங்களாகிய புயல் காற்றாவது, பாவத்தின் தண்டனைகளாகிய அலைகளாவது என் விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தி என்னை ஆழ்த்தும் போது, நான்

பேதுருவைப்போல 'ஆண்டவரே என்னை இரட்சியும்' என்று கெஞ்சுவேன். அவர் என்னைக் கைநீட்டித் தூக்கி இரட்சிப்பார். ஒரு வேளை நான் வெகு ஆழமாய் ஆழ்ந்து போகு மட்டும் அவர் சும்மாயிருந்தாலும், யோனாவைக் காப்பாற்றினது போல ஒரு மீனைக் கொண்டாவது காப்பாற்றுவார்.

ஆத்துமாவே! ஆத்துமநேசரின் கரம் ஆசீர்வாதங்களால் வழிந்தோடுகிறது. அதோ நெருங்கி விழுகிற தாய்மார் கூட்டத்தைப் பார். என் பிள்ளையைத் தொடும் ஐயா! என் பாலனை ஆசீர்வதியும் ஐயா என்று கூப்பிடுகிற குரல் என் ஆத்துமாவை உயர்த்தி, நீயும் போ என்று தூண்டுகிறது. இயேசுவின் பன்னிரண்டு சீடரும் அதட்டுகிறார்கள், தாய்மார் அவர்கள் அதட்டுதலைச் சட்டை செய்யாமல் நெருக்குகிறார்கள். ஆ, தாய்மாரே! நீங்கள் வாழ்க; உங்கள் பிள்ளைகள் சர்வலோக தேவனுடைய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இவ்வுலகத்தில் உங்கள் பிள்ளைகளுக்குச் செய்யக் கூடிய பெரிய காரியத்தைச் செய்து முடித்தீர்கள். பரிசுத்த ஆவியானவராகிய என் தாயார் என்னைக் கிறிஸ்து இயேசுவின் ஆசீர்வாதங்களைப் பெறும்படி என் ஆத்துமாவைக் கொண்டு போகிறார். சந்தோஷம், சந்தோஷம்.

## பரவசம்

ஆ! என் இரட்சகரின் திருக்கரம் என் ஆத்துமாவின் சிரசின் மேல் வைக்கப்பட்ட காலத்தில் என் ஆத்துமாவுக்குண்டான வாழ்வை நான் என்ன சொல்ல! என்ன சொல்ல!! உலகம் என் இயேசுவின் கையைப் பிரம்பு என்றும், தண்டனை என்றும், சாவு என்றும், அழிவு என்றும், நாசம் என்றும், துன்பம் என்றும், கஷ்டம் என்றும் அழைத்தது. என் ஆத்துமாவோ அதைப் பால் பொழியும் மடு என்றும், தேன் ஒழுகும் தட்டென்றும் ஏற்றுக் கொண்டது. அவர் என் ஆத்துமாவை வானத்தின் பனியினாலும், பூமியின் புஷ்டியினாலும், திரள் தானியத்தினாலும், திராட்சப்பழ இரசத்தினாலும் ஆசீர்வதித்தார். அவருடைய ஆசீர்வாதம் அநாதி தேவனை எனக்கு அடைக்கலமாகவும்,

அவருடைய நித்திய புயங்களை எனக்கு ஆதாரமாகவும் தந்துவிட்டது. அவர் தமது திருச்சரீரத்தைப் பானமாகவும் தந்தார். இனி எனக்கென்ன குறைவு? வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரால் நான் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

## விசுவாச வணக்கம்

அருள் அடங்கும் கரமே நமஸ்காரம்!

அபாயம் நீக்கும் கரமே நமஸ்காரம்!

வரமளிக்கும் கரமே நமஸ்காரம்

வானாதிவான காலம் நமஸ்காரம்!

## ஜெபம்

தயவுள்ள இயேசுவே! எல்லாப் பாக்கியங்களையும் உமது கரத்தில் வைத்துக் கேட்கிறவர்களெல்லாருக்கும் பங்கிடுகிற இரட்சகா! இதோ நானும் கை நீட்டுகிறேன். பசியுள்ளவர்களை நன்மைகளால் நிரப்பி அனுப்புகிற கருணாகரனே! என் ஆத்துமப் பசியை ஆற்றும்படி போசனம் அளித்தருளும். என் ஆத்துமாவுக்கும் சரீரத்துக்குமுண்டாகும் எல்லா ஆபத்தினின்றும் என்னை விலக்கிக் காத்தருளும். உமது கரத்தின் அடிகளால் என் ஆத்துமாவைத் தொய்ந்து போகச் செய்யாமல் ஆசீர்வாதங்களினால் நிரப்பியருளும். ஏனெனில், உம்மால் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்றைக்கும் ஆசீர்வதிக்கப் பட்டவனாயிருப்பான். சமாதான கர்த்தராகிய இயேசுவே! உம்முடைய சமாதானத்தை அடியானுக்குத் தந்தருளும். பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

## துதி

அல்லேலூயா! தேவனுடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப் பார்த்து அவரைத் துதிக்கிறேன். அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதிக்கிறேன். வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதிக்கிறேன்.

# தியானம் 17

## ஆத்தும நேசரின் கை (5 ஆம் பங்கு)

### வேதம்

[1]"அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற் படியிட்டு, யூதருடைய இராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள்.'[2]"தோமா என்பவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான்.'[3]"எட்டு நாளைக்குப் பின்பு... இயேசு வந்து நடுவிலே நின்று... தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி! என் கைகளைப் பார்... அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு, என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக; என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.

### போதனை

இரட்சகருடைய திருக்கரத்தைப் பற்றிய வேறு சில போதனைகளை நாம் மேலே சொல்லிய வசனங்களினால் பார்க்கிறோம். அவை மற்றவைகளை விடத் தெய்வீக மகத்துவமாயிரா விட்டாலும் இரட்சண்ய மகத்துவமுள்ளவையாய் விளங்குகின்றன.

*1.* ஆத்துமநேசரின் திருக்கரம் ஒரு நாணல்கோலைப் பிடித்தது. இரட்சகர் பிலாத்துவுக்கு முன்பாக, தம்மை யூதருடைய இராஜா என்று அவர் சொல்லிக் கொள்ளுகிறதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். பிலாத்து அதைக் குறித்து விசாரித்த போது[4] நீர் சொல்லுகிறபடி நான் இராஜா தான் என்று ஒத்துக் கொண்டு, தமது இராஜ்யத்தின் தன்மையை உணர்த்தினார். பிலாத்துவும், யூதரும் இயேசுவின் இராஜ்ஜியத் தன்மையைக் கிரகித்து மனந்திரும்பவேண்டியதிருக்க 'நான் ராஜா தான்' என்று அவர் சொன்ன வார்த்தையைக் கொண்டு அவரை அதிகமாய்ப்

---

[1] *மத். 27:29.* [2] *யோ. 20:25.* [3] *யோ.20:26-28.* [4] *யோ. 18:37.*

பரியாசம் பண்ணத் தலைப்பட்டு, முள்முடி சூட்டி, அவருடைய வலது கையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள். சற்று நேரத்திற்குப் பின்பு [1]அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள். இந்தக் கோல் பிலாத்துவின் அரண்மனைக்குள் போட்டுவிடப் படாமல், கொல்கொதா மட்டும் கிறிஸ்துவின் திருக்கரத்தில் இருந்திருக்க வேண்டும். இயேசு 'தாகமாயிருக்கிறேன்' என்று சொன்னபோது காடிதோய்க்கப்பட்ட கடற்காளானை மாட்டி நீட்டிக் கொடுத்த கோல் இந்த நாணல் கோலாகவே இருக்கலாம். தம்மை இராஜா என்றவருக்குப் பரியாசமாக நாணல் கோலைச் செங்கோல் என்று கொடுத்துக் கேலி பண்ணியிருக்கிறார்கள்.

2. ஆத்தும நேசரின் கரம் ஆணிகளால் கடாவப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். [2]என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள் என்ற வேத வாக்கியம் நிறைவேற வேண்டியதாயும் இருந்தது. ரோமருடைய துரைத்தன வழக்கத் தின்படி சிலுவையில் அறைப்படத் தீர்ப்புப் பெற்றவர்கள், தீர்ப்பான கச்சேரியிலிருந்து கொலைக்கள மட்டும் தாங்கள் அறையப்படப் போகிற சிலுவை மரத்துண்டுகளைச் சுமந்து போக வேண்டும்; இயேசுவும் அப்படியே தம்முடைய சிலுவையைச் சுமந்து போனார். அவர் வழியில் பலதரம் சிலுவையின் பளுவால் இடறி விழுந்தாலும் மறுபடியும் எழுந்து, நடந்து சுமந்தார். சிரேனே ஊர் சீமோன் சிலுவையின் அடியைச் சற்றுத் தாங்கினாலும் அவரே அதின் பளுவைச் சுமந்து கொல்கொதா மேடேறி, மலையின் உச்சியில் இறங்கினார். அங்கே அந்தச் சிலுவை பூமியில் போடப்பட்டு, அதின்மேல் ஆத்தும இரட்சகர் கிடத்தப்பட்டார். அவருடைய கை சிலுவையின் இரு சட்டத்திலுமிருந்த பல துவாரங்களில் எதற்காவது சரியாய் வந்திராவிட்டால் அத்துவாரத்தில் வருமட்டும் பலமாய் இழுக்கப்பட்டு ஆணியடிக்கப் பட்டிருப்பார். அவ்வாணி இயேசுவின் கையை ஊடுருவி சிலுவையின் மறு பக்கமும் நீண்டிருக்கும். இயேசுவின் கையிலிருந்த காயத்தில் தோமா அப்போஸ்தலன் 'விரலைவிட்டு'

---

[1] மத். 27:30. [2] சங். 22:16.

பரீட்சிக்க வேண்டும் என்று சொன்ன வார்த்தையால் அவருக்கு அடிக்கப்பட்ட ஆணிகள் ஒரு விரலிலும் அதிகப் பருமனாகவே இருக்க வேண்டும். அந்த ஆணிகள் உள்ளங்கையையும் சிலுவையையும் துளைத்து வெளியே உருவ வேண்டியதானதால், சுமார் ஒன்றரைச் சாணுக்குக் குறைந்த நீளமாய் இருந்திருக்க மாட்டாது.

**தியானம்**

ஆத்துமாவே! நீ இரட்டுடுத்திச் சாம்பலில் உட்காரத்தக்கதான வேளை இப்பொழுது வருகிறது. இம்மட்டும் நீ உன் இரட்சகரின் அங்க மகத்துவங்களைப் பற்றிய பல குறிப்புகளை அறிந்து தியானித்தாய்; இப்பொழுதோ அப்படியல்ல.

உன் இரட்சகர் பரியாசம் செய்யப்படுகிறார். இரட்சகர் இம்மட்டும் பட்ட அடி போதாதா? அனுபவித்த நோவு போதாதா? பரியாசமும் நிந்தையும் கூட்டப்பட வேண்டுமோ? இரட்சகா! எத்தனை பேர்தான் கூடி உம்மை நிந்திக்கிறார்கள்? நீர் தனியாய்த் தேசாதிபதியின் அரண்மனைக்குள்ளே கொண்டு போகப்பட்டு அங்கே

உமது சொந்த வஸ்திரம் உரியப்படுகிறது,
ஒரு சிவப்பு அங்கி தரிக்கப்படுகிறது.
ஒருவன் உம்முடைய சிரசில் முள்முடி சூடுகிறான்.
ஒருவன் உமது கையில் மூங்கில் தடி தருகிறான்,
சிலர் முழங்காலில் நின்று கேலி செய்கிறார்கள்,
சிலர் உமது திருமுகத்தில் துப்புகிறார்கள்
பிலாத்து உம்மை முள்முடியோடும்,
மூங்கில் தடியோடும் அழைத்து வருகிறான்.

ஆ! இதென்ன? என்னிமித்தம் நீர் இவ்வளவும் பட வேண்டியதிருந்ததே! ஆ! இயேசுவே! ஜாதிகளை இருப்புக்கோலால் ஆண்டு, குயக்கலத்தைப் போல உடைத்துப் போடும் வல்ல இயேசுவே! என்னிமித்தம் நீர் உமது வலது கரத்தில் மூங்கிலையா செங்கோலாய்ப் பிடித்துப் புறப்பட நேரிட்டது! அந்த மூங்கில் உமக்குப் பரியாசச் செங்கோலாய் மாத்திரம் இருக்கவில்லை. அதைக் கொண்டே உம்மை அடிக்கவும் துணிந்தார்கள். ஒரு தரம் கொடுத்து வேடிக்கை

பார்த்து, மறுதரம் பிடுங்கி அடித்தார்கள். ஆ! நீர் சிங்கத்தின் கையில் அகப்பட்ட மானைப் போலும், புலியின் கையில் அகப்பட்ட ஆட்டுக் குட்டியைப் போலும் நடத்தப்படுகிறீர். ஆ! நான் உம்மை இங்கே விட்டு விட்டு என் வீட்டுக்குப் போய்விட மாட்டேன். சத்துருக்கள் உமக்கு இன்னும் என்ன தான் செய்யப் போகிறார்கள் என்று நான் என் ஆத்துமாவின் கண்ணால் பார்க்கட்டும்.

உமது தோளின் மேல் ஒரு பெரிய சிலுவை ஏற்றப்படுகிறது; அதைச் சுமந்து கொண்டு எருசலேமின் தெருவழியாய்ப் போகிறீர். சிலுவையின் பளுவால் அடிக்கடி இடறி விழுகிறீர்; உமக்குப் பின்னாலே சில ஸ்திரீகள் அழுது கொண்டு வருகிறார்கள். அந்தக் கண்ணீர் என் ஆத்துமாவில் சுரக்காதா! அந்தப் பிரலாபம் என் உதட்டில் எழும்பாதா! ஆ, நான் என்ன கல்நெஞ்சன்! ஆ! நான் உணர்ச்சியில்லாதவன். சிலுவைப் பாரத்தோடு, அழுத ஸ்திரீகள் முகமாய்த் திரும்புகிறீர்; அழுகிறவர்கள் அழட்டுமேன். நீர் ஏன் தான் திரும்புகிறீர்; உமது நோவு அதிகப்படுமே! அழுத ஸ்திரீகளை ஆறுதல்படுத்துகிறீர்; பின்னும் திரும்பி நடக்கிறீர்; பலதரம் இடறிவிழுகிறீர்; சிரேனே சீமோன் தாங்குகிறான்; ஊரைக் கடக்கிறீர்; பூர்வ அர்ச்சரின் கல்லறைத் தோட்டத்து வழியாய்ப் போகிறீர்; அங்கிருந்த உலர்ந்த எலும்புகளுக்கு ஜீவனின் அதிபதி கடந்து போகும் பாக்கியம் கிடைத்தது. அப்புறம் இன்னோம் பள்ளத்தாக்கைக் கடக்கிறீர். ஆ, மேடும் பள்ளமுமான அந்த மலைப் பாதையில் உமது சிலுவையோடு எவ்வளவு சங்கடப்படுகிறீர்? எத்தனை பேர் உமக்கு உதவி செய்ய உள்ளாசையுடையவர்களாயிருந்தாலும், தங்களுக்கு என்ன சம்பவிக்குமோ என்று அஞ்சிப் பின் வாங்கிப் போகிறார்கள்! நீர் கொல்கொதாவின் அடிவாரம் வருகிறீர்; நான் சற்று எட்டி நடந்து மலையின் முன் சற்றுதூரம் ஏறி உமக்குப் பின்னாலே வருகிற ஜனக்கூட்டத்தை நோக்குவேனாக. ஆ, எவ்வளவு கூட்டம்! சத்துருக்கள் உம்மைக் குரூரமாய் நடத்துவதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிகிறது. நீர் மகா வருத்தத்தோடு மலையேறிவிட்டீர்; இப்போது உமது பக்தரெல்லாரும் மார்பில் அடித்துக் கொண்டு ஓலமிடுகிறார்கள்.

என் கல்நெஞ்சு இன்னும் உருகக் காணோம்; என் மனம் இன்னும் உடையக் காணோம். உம்முடைய வஸ்திரங்களெல்லாவற்றையும் உரிகிறார்கள் - நீர் கொண்டு வந்த சிலுவையைப் பூமியிலே போடுகிறார்கள் - அதின் மேல் உம்மைக் கிடத்துகிறார்கள் - இன்னும் என் நெஞ்சு உடையவில்லை - என் ஆத்துமா வேடிக்கை பார்க்க வந்தது போலப் பாவ உணர்வற்றிருக்கிறது; இரட்சிப்பின் தாபம் இல்லாதிருக்கிறது. சிலுவையின் மேல் மல்லாக்கக் கிடக்கும் உமது திருக்கரங்கள் இரண்டையும் சேவகர் இழுக்கிறார்கள்; உமது உள்ளங்கை துவாரத்துக்குத் தூரமாயிருப்பதால் பலமாயிழுத்து அடுத்த துவாரமட்டும் கொண்டு வருகிறார்கள். உமது நெஞ்செலும்பெல்லாம் எண்ணக்கூடியதாய்த் தெரிகிறது; உமது முகம் வரவர மலருகிறது; நீர் சத்துருக்களைப் பார்த்துக் கொஞ்சக்காணோம்; உமது நோவையிட்டு முறையிடக்காணோம். இதோ ஒரு சேவகன் நீளமும் பருமனுமான ஆணிகளையும் பெரிய சுத்தியலையும் கொண்டு வருகிறான், அவ்வாணிகளை உமது உள்ளங்கையில் வைத்துப் பலமாய் அடிக்கிறான்.

இப்போதான் என் குலை அதிருகிறது<br>
இப்போதான் என் நெஞ்சு உடைகிறது,<br>
இப்போதான் என் கல்நெஞ்சு கிழிகிறது.<br>
இப்போதான் என் ஆத்துமா குலுங்குகிறது.<br>
இப்போதான் என் பெருமூச்சு எழும்புகிறது,<br>
இப்போதான் என் கண்ணீர் சொரிகிறது.

உமது கைகளில் அடிக்கப்பட்ட ஆணிகளின் முகாந்தரத்தை நான் காண்கிறேன். அது என் கையில் வரவேண்டிய ஆணியல்லோ! ஆம் - ஆம் - ஆம்!

என் இரட்சகரின் வல்லகரத்தை ஆணி ஊடுருவினது. என்ன அதிசயம்! ஆ! என் பாவம் சர்வ வல்லவரை மல்லாக்கக் கிடத்தி, அவர் திருக்கரத்தில் ஆணியைக் கடாவிவிட்டதே. என் இரட்சகா! இவ்வளவு பாடுகள் உமக்கேன்? பாதகனாகிய என் பாவத்தினாலே தான்.

என் இயேசு வானத்தின் முகமாய் மல்லாக்கக் கிடத்தப்பட்டிருக்கிறாரே! ஆ, பிதாவே! உமது குமாரன் கிடக்கிற கோலத்தைக் கண்டீரோ! சத்துருக்கள் அவருடைய திருக்கரத்தில் அடிக்கும் ஆணியையும், கடாவும் பேரோசையையும் கேட்டீரோ!! இவ்வளவாய் நீர் என்னில் அன்பு கூர்ந்தது எவ்வளவு பெரிய அதிசயம்!

தேவதூதர்களே, இதென்ன காட்சி! தேவகுமாரனை முப்பத்து மூன்று வருடங்களுக்குமுன் வானலோகத்தில் பார்த்தீர்களே! இதோ என்னிமித்தம் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரில் ஈனமானவரும், வேதனைகள் நிறைந்தவருமாய் கிடக்கிறார். நீங்கள் உங்கள் செட்டைகளால் பறந்து வந்து பாவிகளுக்காக அவர் படும் அவஸ்தையைப் பாருங்கள் - பாருங்கள்!

இரட்சகா! உம்மைக் கடாவின இரும்பாணி கொல்கொதாவையும் துளைத்து விட்டது; அது கல்நெஞ்சனாகிய என்னையும் என்னைப் போலொத்தவர்களுடைய மனதையும் ஊடுருவிச் சென்று, மனந்திரும்புதலுக்கேற்ற மனஸ்தாபத்தைக் கொடுக்கும்படி கிருபை செய்யும்.

### மௌனம்

வாசிக்கிறவனே! நீ இப்பொழுது சாஷ்டாங்கமாய் விழுந்து தியானி. உன் இரட்சகர் உனக்காகச் சிலுவையில் கிடத்தப்பட்டு ஆணிகளால் கடாவப்படுகிற துயரக் காட்சியை மனதில் கிரகித்துக்கொண்டு, வாய்விட்டுப் புலம்பாமல் மௌனத் தியானம் செய்து சில நேரம் பின்னிடு.

### விசுவாச வணக்கம்

**கோல் பிடித்த கரமே நமஸ்காரம் - செங்**
**கோல் பிடிக்கும் கரமே! நமஸ்காரம்,**
**ஆணி பூண்ட கரமே! நமஸ்காரம் - இரும்**
**பாணி பூண்ட கரமே! நமஸ்காரம்**

### விசுவாச முத்தம்

நீட்டப்பட்ட கரத்தில் ஆணிகளால் கடாவப்பட்டுக் கிடக்கும் என் இரட்சகா! அடியான் உமது திருக்கரத்தை

விசுவாசத்தால் முத்தமிடுகிறேன், உமது ஆணித்துவாரங்களின் வழியாய் வரும் உதிரச் சொட்டுகளில் அடியான் ஒரு சொட்டு உதிரம் எடுத்து என் ஆத்துமாவில் பூசிக்கொள்ள உத்தரவு தாரும். ஆ! என் இரட்சகரின் இரத்தச் சொட்டுகள் மல்லிகை மலரைப்போல் என் ஆத்துமாவுக்கு வாசனையைத் தருகின்றன.

### ஜெபம்

எனக்காகச் சிலுவையில் படுத்து ஆணிகடாவும்படி சம்மதித்துக் கொண்ட அன்புள்ள இயேசுவே! நான் பாவ இச்சைகள் அனைத்தையும் உம்மோடுகூட சிலுவையில அறையும்படி கிருபை செய்யும். உம்மை என் பாவங்களால் மறுபடியும் வேதனைக்குட்படுத்தி என்மேல் ஆக்கினையை வருவித்துக் கொள்ளாதபடி உமது பரிசுத்த ஆவியைக் கொண்டு என்னைப் புது மனுஷனாக்கியருளும். உம்முடைய திருக்கரத்தின் தழும்புகளால் என் தீய கையால் நடப்பிக்கப்பட்ட சகல பாவங்களும் மன்னிக்கப்படும்படி எனக்காக, பிதாவாகிய தேவனிடத்தில் மத்தியஸ்தஞ்செய்து என்னை இரட்சிக்க வேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறேன். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

### துதி

அல்லேலூயா! வானங்களிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; உன்னதங்களில் அவரைத் துதியுங்கள். அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள். வாலிபரே, கன்னிகைகளே, முதிர் வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள். அல்லேலூயா.

# தியானம் 13

## ஆத்தும நேசரின் கைவிரல்

### வேதம்

[1]'அவர் தீரு, சீதோன் பட்டணங்களின் எல்லைகளைவிட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன் மேல் வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்...அவர் தமது விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான். [2]'இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார், அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவன் மேல் முதலாவது கல்லெறியக்கடவன்' என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.

### போதனை

கடந்த ஐந்து தியானங்களிலும் இயேசுவின் திருக்கரத்தைப் பற்றிய பல போதனைகளை ஆராய்ந்தோம். இப்போது அவருடைய திருக்கரத்தின் விரல்களைப் பற்றி சுவிசேடத்தில் அடங்கிய குறிப்புகளை ஆராய்வோமாக. மேலே காட்டிய வாக்கியங்கள் இயேசுவின் விரல் மகத்துவங்கள் இரண்டை வெளிப்படுத்துகின்றன. அவையாவன:

*1.* ஆத்துமநேசரின் விரல் செவிடர் காதைத் திறக்கும் திறவுகோலும், ஊமையர் நாவின் கட்டை வெட்டும் கத்தரிக் கோலுமாயிருந்தது. மத்தேயு சுவிசேடகன், இயேசு [3]'ஓர் ஊமையனைக் குணமாக்கினதைப்பற்றி எழுதுகிறார்; பிசாசு பிடித்ததினால் அவன் ஊமையனாயிருந்தான். இவனோ இயல்பாய் ஊமையனாயிருந்தான், அதோடு இவன் செவிடனாயு மிருந்தான். செவிடர் பெரும்பாலும் ஊமையராயுமிருப்பார்கள்.

---

[1] *மா. 7:31-35* [2]*யோ. 8:6-8* [3]*மத். 9:32*

நாவின் குறைவினாலேயல்ல, பேசும் வார்த்தைகளைக் கேட்டு அறிந்து கொள்ளத்தக்க காதில்லாததினாலே அப்படியிருப் பார்கள். இவனைப் பற்றி அப்படியும் நினைக்க இடமில்லை. காது கேட்டாலும் நாவு பேச இயலாமலிருந்தது என்றே சொல்ல வேண்டும். அற்புதம் நடந்த பின்பு 'அவன் செவ்வையாய்ப் பேசினான்' என்று சொல்லப்படுகிற குறிப்பினால் சிலர், முன்னே அவனுக்குக் கொஞ்சம் பேச்சு இருந்தது என்றெண்ணு வார்கள். அவன் கொஞ்சம் பேசக் கூடுமானால் அல்லது நாவின் கட்டு இல்லையானால் இயேசு உமிழ்ந்து அவன் நாவைத் தொட வேண்டியதிராது. 'செவ்வையாய்ப் பேசினான்' என்ற குறிப்பு பூரண சுகத்தின் தன்மையைக் காட்டுகிறதென்று நாம் எண்ண வேண்டியது.

2. ஆத்துமநேசரின் விரல் பாவத்தைக் கிறுக்கிற்று. இதை விபசாரஸ்திரீயின் சரித்திரத்தில் பார்க்கிறோம். இயேசு தரையில் என்னத்தை எழுதினாரென்று தெரியாது. சிலர் நினைக்கிறபடி அங்கே வந்து நின்ற ஒவ்வொருவனுடைய பாவத்தையும் எழுதிக்காட்டி, அவரவரை வெட்கத்தோடு திரும்பிப்போகப் பண்ணியிருப்பார். ஆக்கினை செய்யும் கிரியை உடன்படிக் கையை முன்னே கல்லிலே எழுதிக் கொடுத்தார்; இப்போது ஆக்கினையைத் தமது சொந்த விரலால் கிறுக்கி, தண்டனையிலிருந்து தப்பப்பண்ணும் எழுத்தை எழுதுகிறார்.

### தியானம்

ஆத்துமாவே! இரட்சகருடைய திருக்கரத்தின் விரலை நோக்கி உன் கண்களை ஏறெடுத்துத் தியானஞ்செய். இயேசுவின் விரல் ஆத்துமாவின் செவியைத் திறக்கவும், நாவின் கட்டவிழ்க் கவும் வல்லமையுள்ளதாயிருக்கிறது என்ற செய்தி என் ஆவிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. [1]நானோ செவிடனைப் போலக் கேளாதவனாகவும், ஊமையனைப் போல வாய்திறவாத வனாகவும் இருக்கிறேன். [2]பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும், அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாத படிக்குத் தன் காதை அடைக்கிற செவிட்டு விரியனைப் போல் இருக்கிறேன். இரட்சகர் தமது திருவிரலால் என்னைத் தொடச் சித்தமாயிருக்கிறார். நான் அவரண்டை போவேன். சிலநாள்

[1] சங். 38:13; [2] சங். 58:5

பொறுத்தல்ல, இப்பொழுதே, இன்றைக்கே போவேன். அது முதல் சத்தியம் என் செவிக்குள் தடையின்றிச் செல்லும், தேவாவியானவரின் ஆலோசனைகள் என் மனதில் காதில் தொனிக்கும்.

ஆ, என் இயேசு கட்டுப்பட்டுப் போன என் நாவையும் திறக்கப் போகிறார். ஒரு குண்டினால் இரண்டு புலிகளை விழத்தட்டுகிறார். தமது திருவிரலால் என் ஊமையையும் செவிட்டுத் தனத்தையும் தொலைத்துவிட அவரால் கூடும். இனி எனக்கென்ன குறைச்சல்! செவிடும் ஊமையுமான என் ஆத்துமாவை அவர் தமது கரத்தின் விரலால் தொட்டுக் குணமாக்க இதோ, நான் நெருங்கிப் போகிறேன்; ஆவியே துணை; தேவாவியே துணை செய்வீராக.

## விசுவாச ஸ்பரிசம்

என் இரட்சகர் செவிடும் ஊமையுமான என் ஆத்துமாவைக் குணமாக்கும்படி என்னைத் தனியே கொண்டு போகிறார். என் பாவங்களிலிருந்தும், என் பழைய சிநேகிதரிலிருந்தும், சாத்தானின் உறவிலிருந்தும், வீடுவாசலி லிருந்தும், தேசம் ஜாதியிலிருந்தும் தனியே அழைத்துக்கொண்டு போகிறார். அவர் என்னை எங்கேயும் கொண்டுபோகட்டும், எவ்விடத்திலாவது என்னைத் தனிப்படச் செய்யட்டும், என் ஆத்துமச் செவிடும் ஊமையும் தீர்ந்தால் அதுவே போதும். இதோ என் இரட்சகர் தமது திருவிரலை என் காதுக்குள் விடுகிறார், அது திறந்துவிட்டது. சகல சத்தியங்களும் எனக்குள் ஓயாமல் இறங்குகின்றன. அவர் தமது அருளாகிய உமிழ்நீரை என் நாவில் பூசுகிறார், அதின் கட்டுகள் தெறிபடுகிறது. இப்போது நான் தேவ மகிமைகளையும் சத்தியங்களையும் கேட்கிறேன். இனி என் நாவினால் அவரைத் துதித்து மகிமைப்படுத்துவேனாக. சகரியா ஆசாரியன் பத்து மாதம் ஊமையாயிருந்து [1]வாய் திறக்கப்பட்டவுடனே தேவனைத் துதித்தானே, பிறந்த நாள்

---

[1] லூ. 1:64

முதல்... வருடங்களாய் செவிடும் ஊமையுமாயிருந்த நான் திறக்கப்பட்டிருக்க, என் வாயை மூடுவேனோ?

### துதி

சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்.

### தியானம்

என் இயேசுவின் விரல் என் பாவங்களைக் கிறுக்கிவிடுகிறது. இனி நான் பாவி என்று அழைக்கப்படாமல் இயேசுவினிமித்தம் நீதிமான் என்றெண்ணப்படுவேன். என் பாவம் கிறுக்கப்பட்டபடியால் ஜீவ புஸ்தகத்தில் என் பேர் எழுதப்பட்டிருக்கும். என்னைத் தண்டனைக்குட்படுத்த நியாயப் பிரமாணத்தினாலும், தேவகோபத்தினாலும், தேவ நீதியினாலும் கூடாது. ஏனெனில், என் பாவம் கிறுக்கப் பட்டாயிற்று. பிசாசு, பாவம், உலகம் முதலிய சத்துருக்களின் குற்றஞ்சாட்டுதல் இனி ஒப்புக் கொள்ளப்படவு மாட்டாது, விசாரிக்கப்படவு மாட்டாது, தீர்ப்பு செய்யப்படவு மாட்டாது. ஏனெனில், என் பாவம், பாவங்களை மன்னிக்க அதிகாரமுடை யவராய் மாம்ச தேகத்தை எடுத்துவந்த இயேசு தேவனால் கிறுக்கப்பட்டாயிற்று.

ஆத்துமாவே, இரட்சகரின் திருக்கரத்தின் மகத்துவங் களைக் கடைசியாக ஒரு கோர்வையாக்கி உன் கையில் காப்பு போல கட்டிக் கொண்டு திரிந்து உன் ஜீவகாலத்தைக் கழி.

அவர் கரம் குஷ்டரோகத்தைக் குணமாக்குகிறது
உன் காய்ச்சலைத் தீர்த்துவிடுகிறது,
உன் கண்களைத் திறந்துவிடுகிறது,
உன் கோணலைத் திருத்துகிறது,
உன் சாவில் ஜீவன் தருகிறது,
உன் பயத்தை நிவிர்த்தி செய்கிறது,
உன் மனதைச் சுத்தம் செய்கிறது,
உன் நீட்டைக் கழுவுகிறது,
உன் வெட்டை ஒட்ட வைக்கிறது.
உன் கோட்டையாய் இருக்கிறது,
உன் புதையலாய் இருக்கிறது,
உன் அமிழ்தலில் தூக்கி எடுக்கிறது.

உனக்குச் சகல வரங்களையுமளிக்கிறது,
உனக்குச் செங்கோலை சம்பாதித்தது,
உனக்காக ஆணிகளை ஏற்றுக் கொண்டது,
உன் செவிட்டுக் காதைத் திறக்கிறது,
உன் ஊமை வாயை அவிழ்க்கிறது,
உன் பாவங்களைக் கிறுக்கிவிடுகிறது.

இவ்வளவு நோயையும் தீர்த்துவிட்டாரே. ஆத்துமாவே, இனி உனக்கென்ன குறைச்சல்! விண்ணப்பங்களால் அவரைப் பணிந்து, ஸ்தோத்திரங்களால் அவரை மகிமைப்படுத்துவதேயன்றி வேறு வேலை உனக்கில்லை.

## விசுவாச வணக்கம்

காதின் பூட்டுடைக்கும் விரலே நமஸ்காரம்,
நாவின் கட்டைவெட்டும் விரலே நமஸ்காரம்,
பாவ மன்னிப்பெழுதும் விரலே நமஸ்காரம்,
பதினெட்டு நன்மைதரும் கரமே நமஸ்காரம்,
பராபர கரமே நமஸ்காரம், நமஸ்காரம்.

## ஜெபம்

எல்லா நன்மைகளுக்கும் ஊற்றும், எல்லா கிருபைகளுக்கும் மூலமுமாயிருக்கிற இயேசுவே! பாவ நோயினால் பலவிதமான துன்பங்களை அனுபவிக்கிற அடியானுக்குச் சகாயமாக உமது திருக்கரத்தை நீட்டியருளும். அதிலடங்கியிருக்கும் எல்லாப் பாக்கியங்களிலும் என் ஆத்துமா பங்குபெறும்படி தயவு செய்யும். உமது திருக்கரத்தின் அருளும் மகத்துவங்களும் என் பாவநோயின் பல குறைவுகளை நீக்கி, என் ஆத்துமாவைக் கரையேற்றும்படி அனுக்கிரகஞ் செய்யும். என் பாவங்கள் அனைத்தையும் கிறுக்கிப் போடும். நீர் ஒருவரே பாவங்களை மன்னிக்கும்படி வல்லவராயிருக்கிறீர். உமது கிருபாகரம் நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், வியாதியிலும், சொஸ்தத்திலும், மரணம் என்னைப் பிரிக்குமளவும் அணைப்பதாக. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற...

## துதி

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது. அவர் தமது அடியாளி(ளி)ன் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையுள்ளவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினாலே நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார், நீதிமான்களை அல்ல, பாவியாகிய என்னை ஆதரித்தார். அல்லேலூயா.

# தியானம் 19

## ஆத்தும நேசரின் காது - கன்னம்

### வேதம்

[1]'அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து, அவரை நோக்கி: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.' [2] வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்.'

### போதனை

இம்மட்டும் கிறிஸ்துவின் பாதமுதல் கரம் வரையுமுள்ள மகத்துவங்களை ஆராய்ந்த நாம், இப்போது அவருடைய காதையும் கன்னத்தையும் ஆராய்வோமாக. இவ்விரண்டு அவயவங்களையுங் குறித்து ஒவ்வொரு குறிப்பு மாத்திரம் சுவிசேடத்தில் காட்டப்பட்டிருப்பதால், அவ்விரண்டையும் ஒன்றாய் ஆராய்வது நலம்.

1. ஆத்துமநேசரின் காது பாலியர் துதியைக் கேட்டது. இயேசு கடைசிமுறையாய் எருசலேமுக்குப் பவனி போனபோது திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை விரித்து ஓசன்னா பாடினார்கள். அவர் தேவாலயத்திற்கு வந்ததின் பின் குருடரும், சப்பாணிகளும் அவரிடத்தில் வந்தார்கள். இவர்கள் தேவாலய வாசலில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவர்களாயிருக்கலாம். அவர்களை இயேசு குணமாக்கினது பக்கத்தில் நின்ற பாலியர் வாயைத் திறந்துவிடுகிறது போலிருக்கிறது. அவர்களெல்லோரும் மிகுந்த இரைச்சலோடு 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா' என்று பாடுகிறார்கள். இந்தப் பாலியரின் புகழை இயேசுவின் காது பிரியமாய் அங்கிகரித்தது என்று பார்க்கிறோம்.

---

[1] மத். 21:15,16 [2] மா. 14:65

2. ஆத்துமநேசரின் கன்னத்தைப் பற்றி ஒரே சங்கதி மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. சத்துருக்கள் இயேசுவின் 'கன்னத்தில் அறைந்தார்கள்' என்று அறிகிறோம். பரி. லூக்கா முகத்தில் அறைந்தார்கள் என்கிறார். இவை இரண்டும் ஒன்றுதான் என்று நினைக்கலாகாது. கன்னத்தில் அறைந்தது இயேசுவின் முகத்தை மூடுமுன்னும், முகத்தில் அறைந்தது மூடினபின்பும் நடந்தது.

**தியானம்**

ஆத்துமாவே! கிறிஸ்துவின் காதைக் கூர்மையாய் நோக்குவாயாக. பாலியர் துதியை அது அன்போடு ஏற்றுக் கொள்ளுகிறது. கிறிஸ்துவுக்குப் பாலியர் ஓசன்னா பாடினது பிரதான ஆசாரியர் முதலியவர்களுக்குப் பெரிய காரியமாய்க் காணப்படுகிறது. இரட்சகருக்கு அது ஒரு பெரிய காரியமா? இதற்கு முன் அவர் திருச்செவியில் கீதவாத்தியங்கள் கேட்கப்படவில்லையோ? துதியும் புகழும் அவருக்குப் புதிதாய்க் கிடைக்கிறதோ? ஆசாரியரே! நீங்கள் பொறாமை கொள்ளுவானேன்? வேதபாரகரே! உங்கள் முகநாடி வேறுபடுவானேன்? அவர் சிருஷ்டித்த பட்சிகளின் பாடல், மிருகங்களின் கர்ச்சிப்பு, கடல்களின் இரைச்சல், காற்றுகளின் சத்தம், இடிகளின் முழக்கம் இவையெல்லாம் நாடோறும் அவர் காதில் விழுகிறதே! இந்தப் பாலியருடைய துதி எம்மாத்திரம்? தேவதூதர் அனைவோரும், பரமண்டலங்களும் அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும், கேருபீன்களும் சேராபீன்களும் ஓயாமல் புகழ்ந்து போற்றின. இன்பநாதங்களைக் கேட்ட காதுக்கு இந்தப் பாலியருடைய கீதம் சிறந்ததோ? அல்ல, அல்ல. ஆத்துமாவே! நான் பாடுகிறது பெரிதல்ல, என் இரட்சகர் அதை ஏற்றுக் கொள்ளுகிறதே பெரிய காரியம். நான் இப்போதுதான் மறுபடியும் பிறந்த பாலகனாயிருக்கிறேன். அவர் என் குரலையாவது இலக்கண விதிகளையாவது கவனிக்கிறதில்லை. என் மதலை ஆத்துமாவின் ஸ்தோத்திரத்தை அவர் இன்பமாய்க் கேட்கிறார். உலகம் என்னை எப்படிக்கடிந்து

கொண்டாலும் நான் அதினிமித்தம் கலங்கி என் துதியை நிறுத்தமாட்டேன். என் ஆத்தும அந்தக் கரணங்களாகிய வீணைகளே! சுரமண்டலங்களே! தம்புருகளே! கைத்தாளங் களே! எக்காளங்களே! நாதசுரங்களே! எழும்புங்கள். என் பத்து நரம்பு வீணைகளே! என் நரம்புச் சுரமண்டலங்களே! நீங்கள் அனைவரும் ஏகமாய்க்கூடி தெய்வீக இரட்சகராகிய இயேசுவைத் துதியுங்கள்; அவருக்கு இப்பொழுதே ஓசன்னா பாடுங்கள் அவர் கேட்கட்டும்.

ஸ்திரீயின் வித்தவர்க்கு ஓசன்னா!
இம்மானுவேலருக்கு ஓசன்னா!
அதிசயமானவர்க்கு ஓசன்னா!
ஆலோசனைக்காரருக்கு ஓசன்னா!
கர்த்தத்துவ ராஜருக்கு ஓசன்னா!
கன்னிமரி மைந்தருக்கு ஓசன்னா!
பேயை அழித்தவருக்கு ஓசன்னா!
சாவை ஜெயித்தவர்க்கு ஓசன்னா!
நரகம் அடைத்தவர்க்கு ஓசன்னா!
மோட்சம் திறந்தவர்க்கு ஓசன்னா!
ஓசன்னா! ஓசன்னா!

ஓசன்னா பாடி உள்ளம் மகிழுகிற நான், புலம்பி ஒப்பாரி சொல்லத்தக்க ஒரு விஷயமுண்டு. என் இரட்சகருடைய கன்னம் அடிபட்டது. அவருடைய முக அழகெல்லாம் மாறிப் போயிற்று. ரோஜாவின் மலர்ந்த மலரைப் போலிருந்த கன்னம் என்ன பாடுபட்டது! எல்லா மனுபுத்திரரிலும் மகா அழகுள்ள என் நேசருடைய கன்னம், சத்துருக்களின் அறைகளால் இரத்தமயமாயிருக்கிறது. சகல ஜாதிகளாலும் இச்சிக்கப்படத் தக்கவர் இவ்வளவு அலங்கோலப்பட்டார். இதெல்லாம் என் பாவத்தால் உண்டானதென்று உணருகிறேன். நான் என் சரீரத்தின் முக அழகையும் கன்னத்தின் பளபளப்பையும் அநேக பாவங்களுக்குக் காரணமாக்கிக் கொண்டதால் என் இரட்சகருடைய கன்னத்தில் அறை விழுந்தது. என் கன்னம் என்னை நேசிக்கிறவர்களின் முத்தத்தைக் கண்டதேயன்றி அடிகளைக் கண்டதில்லை. இரட்சகா! உம்முடைய கன்னத்தை வேலைக்காரர் அறைந்து காயப்படுத்தினார்கள். பிலாத்துவே!

நீயாவது அறைந்தாலும் தோன்றாதே, உன் வேலைக்காரரையா விட்டு என் இயேசுவின் கன்னத்தில் அறைந்தாய்?

**நீயல்ல நான்தான் காரணன்.**

**நீயல்ல நான் தான் காரணன்.**

**விசுவாச முத்தம்**

பாவி துதியை ஏற்றுக் கொள்ளும் காதே

முத்தமிடுகிறேன்.

பாவிக்காய் அடிபட்ட திருக்கரமே

முத்தமிடுகிறேன்.

**ஜெபம்**

எங்கள் நிமித்தம் உம்மை நிந்தைக்கும் அவமானத்துக்கும் அடிகளுக்கும் ஒப்புக்கொடுத்த இயேசுவே! பிதாவாகிய தேவனுடைய அன்பையும், உம்முடைய நீடிய பொறுமையையும், சாந்தத்தையும் உமது பாடுகளிலே நன்றாய்ப் பார்க்கிறோம். ஆ, கிருபையுள்ள இயேசுவே! பாலகருடைய ஸ்தோத்திரங்களை உமது செவிகளில் இன்பமாய் ஏற்றுக் கொண்ட கர்த்தாவே! மறுபடியும் பிறந்து புத்திர சுவிகாரத்தினாலும் ஆவியினாலும் உமக்குப் பிள்ளைகளான எல்லாப் பாவிகளுடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் கேட்டருளி எங்களுக்கு வேண்டிய சகாயங்களை யெல்லாம் உமது தயவுள்ள சித்தத்தின்படியே அனுக்கிரகித்தருள வேண்டுமென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற...

**துதி**

**[1]"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்.' அல்லேலூயா! அல்லேலூயா. ஆமென்.**

[1] வெளி. 5:12.

# தியானம் 20

## ஆத்தும நேசரின் வாய்

### வேதம்

[1]''எல்லோரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.' [2]''இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார்; அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்.' [3]''தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள்.' [4]''அவர் பாவஞ் செய்யவில்லை; அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.' [5]''அவர்கள் மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்; எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.'

### போதனை

நம்முடைய இரட்சகருடைய திருவாயைப் பற்றிப் பேசுகிற மேலே காட்டிய வாக்கியங்களால் அவருடைய வாய்:

1. கிருபையுள்ள வசனங்களைப் பொழிந்தது என்று தெரிய வருகிறது. [6]'கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருந்தார். [7]'அவருடைய பரிபூரணத்தால் நாம் கிருபையின் மேல் கிருபை பெற்றோம். தேவன் நமது மேல் பொழியும்படி சித்தங் கொண்ட கிருபாநதி நமது இரட்சகராகிய இயேசுவின் வாயாகிய வாய்க்காலின் வழியாய் வடிந்தது. அவருடைய கிருபையுள்ள வசனத்தில் இரண்டொன்றைக் கேளுங்கள். [8]'வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். [9]'நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்கிறார்.

---

[1] லூ. 4:22. [2] லூ. 4:36. [3] யோ. 19:28,29 [4] 1பே. 2:22 [5] யோ. 20:22,23

[6] யோ. 1:14; [7] யோ.1:16. [8] மத். 11:28. [9] மத். 9:13.

உ. இயேசுவின் வாய் வல்லமையுள்ள வார்த்தைகளையும் பொழிந்தது. நாசரேத்தூர் ஆலயத்தில் இயேசுவின்[1] வார்த்தை ஒரு பேயை ஓட்டினது; அதைக் கண்ட எல்லோரும் இது எப்படிப்பட்ட வார்த்தையோ என்று பிரமித்தார்கள். நமக்கு [2] ஜெபத்தையும் உபவாசத்தையும் பேயோட்டும் முறையாகச் சொன்னார்; தாமோ தமது வல்லமையுள்ள வார்த்தையையே பிரயோகித்தார். [3]கடலின் கொந்தளிப்பையும் அவருடைய வாயின் வார்த்தை அடக்கிவிட வல்லமையுள்ளதாயிருந்தது; அவர் போதித்த உபதேசங்களும் வல்லமையுள்ளவையாயிருந்தன.

3. காடி கொடுக்கப்பட்டது. சிலுவையில் அறையப் படுகிறவர்களுக்கு வெறியுண்டாக்கும் ஒருவிதக் காடி கொடுக்கிறது வழக்கம். பரி. மத்தேயு அதைக் கசப்புக் கலந்த காடி என்றும், பரி. மாற்கு அதை [5] வெள்ளைப் போளம் கலந்த திராட்சரசம் என்றும் அழைக்கிறார்கள். இரட்சகர் கொல்கொதாவுக்குப் போய்ச் சேர்ந்தவுடனே வழக்கப்படி இந்த மதுவைக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இரட்சகரோடு சிலுவையில் அறையப்பட்டவர்கள் தங்கள் பங்கைச் சாப்பிட் டார்கள். இயேசு சிலுவையில் தொங்குகையில் தாகமாயிருக்கிறேன் என்று கூப்பிட்டபோது, அவர் வேண்டாமென்று தள்ளிவிட்ட காடியையே கொடுத்தார்கள்.

4. அவர் வாய் பாவஞ்செய்யவே இல்லை. இது எவ்வளவு அதிசயம்! [6] இருதயத்தின் நிறைவு வாயால் வெளிப்படும். இரட்சகரின் இருதயம் பரிசுத்தமுள்ளதானதால் அவர் வாயில் பாவம் வெளிப்படவேயில்லை. அவர் ஒரு தாம் [7] என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும் என்று கேட்டார். அவர் பாவஞ் செய்யாதது மாத்திரமல்ல, [8] பாவங்களையும் மன்னித்தார்.

5. அவர் வாய் பரிசுத்த ஆவியையும் பாவமன்னிப்பின் அதிகாரத்தையும் கொடுத்தது. ஆதிமனுஷனுக்கு ஜீவாத்துமாவை [9]ஊதினவர் இப்பொழுது தமது சீடருக்குப் பரிசுத்த ஆவியை ஊதி, பாவமன்னிப்பின் அதிகாரத்தை அருளினார்.

[1] லூா. 4:36. [2] மா. 9:29. [3] மா. 4:39 [4] மத். 27:34. [5] மா. 15:23
[6] லூா. 6:45; [7] யோ.8:46. [8] லூா. 7:48. [9] ஆதி. 2:7.

**தியானம்**

என் இரட்சகருடைய திருவாய் இரட்சண்யக் கிருபைகளாலும் ஆசீர்வாதங்களாலும் நிறைந்திருக்கிற ஒரு பொக்கிஷமாயும், பாவமன்னிப்பு என்னும் அமுதை ஒழுகச் செய்யும் தேன் தட்டாயும், இருதய சமாதானம் என்னும் கீலேயாத்தின் பிசின் தைலத்தைப் பொழியும் ஜீவ விருட்சமாயுமிருக்கிறது. பாவ பாரத்தின் இளைப்பை ஆற்றும்படியான திராட்சரசம் அங்கிருந்து கசிகிறது. அதைப் பானம் பண்ணி, அதினால் மகிழ்ச்சியடைய வேண்டியதேயன்றி வேறே வேலை எனக்கில்லை. ஆத்துமாவே! நீ வெகுகாலம் பிழைத்திருப்பதற்குப் போதுமானதெல்லாம் உனக்கு இருக்கிறது; ஆகையால் உன்னைத் தேற்றிக் கொள். ஆ! இரட்சகரைப் போல் கிருபையால் நிறைந்தவர்களை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை; அவரும் கிருபை, அவர் வாயும் கிருபை, அவர் பேரும் கிருபை, அவர் பேச்சும் கிருபை, அவர் செய்கையும் கிருபை, அவர் பிறப்பும் கிருபை, அவர் இறப்பும் கிருபை; கிருபையே கிருபை, எல்லாம் கிருபையே. ஆத்துமாவே! அவருடைய கிருபையுள்ள வாயின் வசனமொன்றைக்கேள்; [1]என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. இப்படி வேறே யாராவது உன்னை ஆறுதல்படுத்தினது உண்டோ, சொல்லு.

என் ஆத்துமாவை பிசாசின் வல்லமையில் நின்று விடுதலையாக்கும்படி நான் இயேசுவண்டை போவேன். அவர் தமது வாயிலிருந்து ஒரு வார்த்தை சொல்வார்; அந்நிமிட முதல் என் ஆத்துமாவைப் பிடித்திருக்கும் பேயானாலும் பாவமானாலும் பறந்தோடிப் போகும்.

பாவமில்லாதவரும், பாவிகளை விட்டுப்பிரிந்தவரும், பாவங்களை மன்னிக்க மனமும் அதிகாரமுடையவருமான இரட்சகர் என் ஆத்துமாவில் தமது ஆவியை ஊதுவார்; உடனே

[1] யோ. 6:37

நான் பலமடைவேன். அவருடைய திருவருள் உலர்ந்துபோன என் ஆத்துமாவின் எலும்புகளை அசையச் செய்து, அதில் சதை பிடிக்கச்செய்யும்.

கிருபையின் வரப்பிரசாதங்கள் இறங்குவது, என் ஆத்துமாவின் பேய்களை ஓட்டி, பயங்களை அமரச்செய்து பாவங்களை மன்னிக்கிறதுமான திருவாயில் காடி கொடுக்கப்படுகிறதை என் ஆத்துமா பார்த்துப் புலம்புகிறது. ஆ, என் ஆத்தும நேசரே! கெத்செமனேயில் உமது பிதா தந்த பாத்திரத்திலும் இது கசப்புள்ளதா? நீர் முப்பத்துமூன்று வருடமாய்க் குடித்த வியாகுலபானத்திலும் இது கசப்புள்ளதா? இல்லையே. பின்னே ஏன் நீர் அதைத் தள்ளிவிட்டீர்? தாகமெடுத்த உமக்கு அந்தப் பாதகர் ஜலம் கொடுக்கலாகாதா? சிசேராவைக் கொன்ற யாகேல் தண்ணீர் கேட்டவனுக்குப் பாலையும் வெண்ணெயையும் கொடுத்துக் கொன்றாளே. ஆ பாவமே, நீ என் இரட்சகரை என்னமாய் வதைக்கிறாய்? இரட்சகா! கானாவூரில் தண்ணீரை இரசமாக்கி, சகலரையும் சந்தோஷப்படுத்தின உமக்கு இந்தக் கசப்புள்ள காடியா கொடுக்கப்பட்டது!!

நீர் அதை வேண்டாமென்று சொன்னதற்காக உம்மைப் புகழுகிறேன். உமக்குச் சித்தமானால் அதைத் தேனாக மாறச் செய்து நீர் உண்ணலாம். ஆனால், என் இரட்கர் சொந்த புத்தியோடிருந்து என் இரட்சண்யத்தை நிறைவேற்றி முடித்தார் என்று என் மனம் மகிழுகிறது. அந்தக் காடியை மாத்திரம் நீர் குடித்தது மெய்யானால் உம்முடைய சத்துருக்கள் அனைவரும் நீர் என்மேலுள்ள அன்பினால் அல்ல, காடியின் வெறி மயக்கத்தால் துன்பங்களைச் சகித்தீர் என்று சொல்லலாமே. நீர் மனுஷர் பேரிலுள்ள அன்பையே மதுவாக உண்டு, அன்பின் வெறியினாலே மேற்கொள்ளப்பட்டு எல்லாவற்றையும் சகித்தீர் என்று என் ஆத்துமா உணர்ந்து கொள்ளுகிறது.

## விசுவாச விண்ணப்பம்

**அருள்பொழியும் வாயே நமஸ்காரம்**
**அலகை ஒட்டும் வாயே நமஸ்காரம்,**
**காடி மறுத்த வாயே நமஸ்காரம்,**
**பாவமில்லா வாயே நமஸ்காரம்;**
**ஆவியூதும் வாயே நமஸ்காரம்,**

## ஜெபம்

கிருபையுள்ள இயேசுவே! பாவியும் நிர்ப்பந்தனுமான அடியேன் மேல் தயவாயிரும். உம்முடைய திருவாயிலிருந்து புறப்பட்ட உபதேசங்களும், கட்டளைகளும் என் ஆத்துமாவுக்கு ஞானபோஜனமும், பானமுமாயிருக்கும்படி கிருபை செய்யும். நான் உம்முடைய வசனங்களின்படியே நடக்கத் தக்க நல்ல இருதயத்தை உமதடியானுக்குள் சிருஷ்டிக்கும்படி என்மேல் ஊதியருளும். நீர் ஊதுமட்டும் புதிய மனுஷன் என்னில் உருவாக்கப்படமாட்டான். சீடருக்குத் திருவாயால் ஊதின இயேசுவே! அடியான் மேலும் ஊதியருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

## துதி

**சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கின்றன. ஆமென்!**

# தியானம் 21

## ஆத்தும நேசரின் உமிழ்நீர்

### வேதம்

[1]'அவர் (இயேசு) அவனை ஜனக்கூட்டத்தைவிட்டுத் தனியே அழைத்துக் கொண்டு போய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டார்.'[2]'அவர் (இயேசு) குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய், அவன் கண்களில் உமிழ்ந்து.... எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப் போலக் காண்கிறேன் என்றான். '[3]'அவர் (இயேசு) தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி: நீ போய்ச் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார்... அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்.'

### போதனை

இயேசுவின் திரு அமுத மகத்துவத்தைப் பற்றிய இரண்டு குறிப்புகளை மேலே சொல்லிய வாசகங்களில் பார்க்கிறோம். அவையாவன:

1. இயேசுவின் அமுதம் நாவில் திமிரை நீக்குகிறது. கடிகாரங்கள், இயந்திரங்கள், வண்டிகள் எல்லாம் சக்கரங்களால் தம்தம் வேலைக்கு இயக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் தம்தம் அயனத்தில் சுழலும்படி அடிக்கடி எண்ணெய் அல்லது கொழுப்புப் போடுகிறதுண்டு. அப்படிச் செய்யாத பட்சத்தில் அச்சக்கரங்கள் துருப்பிடித்து, சேதப்படுகிறதோடு வேலைகளையும் முடக்கிப் போடும். [4]நாவானது பெரிய காரியங்களை நிறைவேற்றும் சிறிய சக்கரம் போல் இருக்கிறது. அது ஆயுள் சக்கரங்களையும் அதைச் சேர்ந்த இயந்திரங்கள் அனைத்தையும் கறைப்படுத்தித் துருவேற்றி, கொளுத்திப் போடத்தக்க சூட்சும சக்கரமாய் இருக்கிறதென்று பரி. யாக்கோபு சொல்லியிருக்கிறார். நரகத்திலுள்ள ஒரு வியாதி

---

[1] மா. 7:33. [2] மா. 8:23,24. [3] யோ. 9:6,7 [4] யாக். 3:5,6

அதைப் பிடிக்கிறதுண்டு. அதற்கு [1] நாவறட்சி என்று பேர். இந்த வியாதி கொண்டவர்கள் கொன்னை வாயரைப்போல் தேவனைத் தக்கபடி துதியார்கள், புகழார்கள். அவரை நோக்கி சரியான முறைப்படி விண்ணப்பம் பண்ணவு மாட்டார்கள்; அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபிக்கவு மாட்டார்கள். இப்படிப்பட்ட தடித்ததும் திமிர்த்ததுமான கொன்னை நாவின் நோய்க்கு இயேசுவின் உமிழ்நீர் மருந்தாயிருக்கிறது.

2. இயேசுவின் அமுதம் குருட்டுக் கண்களுக்குக் கலிக்கமாய் இருக்கிறது. இரட்சகர் இரண்டு தரம் தமது திருஅமுதத்தைக் குருடருக்குக் கலிக்கமாக உபயோகித்திருக்கிறார். இதில் பரி. யோவான் சொல்லும் குருடன், பிறப்பு முதல் குருடனாய் இருந்தான். கண்ணானது சரீரத்துக்கு விளக்காயிருக்கிறது; அந்த விளக்கு பிரகாசிக்கும்படி அதனுள் ஒரு தைலமிருக்கிறது. அந்தத் தைலம் இல்லாவிட்டால் அக்கண்ணில் காட்சியிராது. சரீரக் கண்ணைவிட மனக்கண் விசேடமானது. மனக்கண்ணுக்கும் ஒரு தைலம் அவசியம். அது இல்லாத மனதில் தன்னை அறியும் அறிவாவது தேவனை அறியும் காட்சியாவது இராது. ஆனால், இயேசுவின் திருஅமுதம் அப்படிப்பட்ட மனக்கண்களைத் தெளிவிக்கும் கலிக்கம் போலிருக்கிறது.

## தியானம்

ஆத்துமாவே! உன்னை நான் கூர்மையாய்ப் பரிசோதித்த பின்பு உனக்குக் கொன்னைவாய் உண்டென்று கண்டுபிடித்துக் கொண்டேன். நீ அதை ஆமென்று ஒத்துக் கொள்ளுகிறாயா, அல்லவென்று ஆட்சேபிக்கிறயா? சொல்லு. நான் கொன்னை நாவுடையவன் அல்லவென்று ரூபிக்கிறாயாக்கும்; உன் நியாயங்கள் உன்னோடிருக்கட்டும். உன் நாவு உன் மூக்கைத் தொடும்படியான நீள நாவாய்த் தானிருக்கிறது. அது மேலும் கீழும் இருபக்கமும் சக்கரம் போல வளையவும் சுழலவும் செய்கிறது மெய்தான். நீ ஊருக்கெல்லாம் அஷ்டாவதானி தான். தேவனுக்கோ நீ கொன்னை நாவுடையவன் தான். உன் பேச்சைக் கேட்கப் பெரும் கூட்டம் வரலாம். உன் பாட்டை கேட்கப்

[1] ஓா.16:24

பதினாயிரம் பேர் கூடலாம். என்றாலும் நீ கொன்னைவாயன் தான். உலக விஷயத்தில் உன் நாவு நீண்டிருக்கிறது, கிறிஸ்துவின் விஷயத்தில் உனக்குக் கொன்னை நாவு; சிற்றின்பப் பாட்டுக்கு உன் நாவு வளைகிறது, பேரின்ப கீதங்களுக்கோ உனக்குக் கொன்னை நாவு. இதற்குக் காரணம் என்ன? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று உலக இரட்சகர் சொன்னார். தெய்வீக விஷயத்தில் உன் இருதயத்தில் நிறைவில்லை, ஆதலால் அது கொன்னிப் பேசுகிறது. தேவ அன்பு உன் இருதயத்தில் நிறைவாயில்லை, ஆதலால் உன் இருதயம் தேவ அன்பு விஷயத்தைக் குறித்துக் கொன்னிப் பேசுகிறது. விசுவாசம், தாழ்மை, பொறுமை, தேவபக்தி முதலிய சற்குணங்கள் உன் இருதயத்தில் நிறைவாய் இல்லை; ஆதலால் அதைப்பற்றிய விஷயங்களை நீ பேசும்போதெல்லாம் கொன்னை வாயனைப் போல் திக்கித் திக்கிப் பேசுகிறாய். நான் உன்னைக் கொன்னை வாயன் என்று சொன்னது சரிதானா? சரிதான். அப்படியானால் நாம் அந்த நோயைத் தீர்க்கும் வைத்தியனாகிய இயேசுவண்டை போவோமாக.

ஆத்துமநேசரே! நான் ஆத்துமாவிலும், ஆவியிலும், சரீரத்திலும் கொன்னை நாவுடையவன் போலிருக்கிறேன்; இப்படிக் கொன்னை நாவோடே நான் காலங்கழிக்கிறதைவிட முழுவதும் ஊமையனாயிருந்துவிட்டால் நலமாயிருக்குமல்லோ? நான் எல்லா விஷயங்களையும் சாமர்த்தியமாய்ப் பேசி முடிக்கிறேன். உம்முடைய விஷயங்களிலோ என்னை விட திக்குவாயனை நீர் இந்த அகண்ட லோகத்தில் கண்டிருக்கவே மாட்டீர். என் கொன்னை நாவுக்கு நீர் வைத்தியம் செய்வீராக. இதோ என் நாவை நீட்டுகிறேன். அதைப் பிடித்துக் கொண்டு உமது சித்தத்துக்கு மிஞ்சினதைப் பேசத்தக்கதான நீளம் அதில் இருந்தால் அதை வெட்டிப்போடும் அல்லது உமது மனதுக்கேற்றபடி பேசவும் பிரஸ்தாபிக்கவும் என்ன செய்யவேண்டுமோ அதெல்லாம் செய்யும். அதற்குக் கடிவாளம் போடவேண்டுமானாலும் அதில் ஆணியடிக்க வேண்டுமானாலும் அதை உமது இஷ்டத்துக்கு ஒப்புக்

கொடுக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக அதில் ஒரு வறட்சியை வெகு காலமாய்ப் பார்க்கிறேன். அந்த வறட்சியானது காலத்துக்கும், இடத்துக்கும், காரியத்துக்கும் தக்கதாய் எனக்குள் மிஞ்சுகிறது. தெருவில் பாடுகிற நான் தேவாலயத்தில் கொன்னுகிறேன். செவ்வாய் புதனில் கலைக்கியானங்கள் பேசும் நாவு ஞாயிறில் திக்குவாயாகப் போகிறது; ஆதலால் ஆலய ஆராதனையில் ‘ஆமென்’ என்று சொல்ல முதலாய் அடிக்கடி நாவெழும்புகிறதில்லை. இப்படிப்பட்ட திக்கு நாவுக்கு நீர் ஒரு வைத்தியஞ் செய்யமாட்டீரா? என் இயேசுவே! இப்படியே நான் காலங்கழிப்பது எனக்கு நஷ்டத்தையே உண்டாக்குகிறதென்று கண்டேன். ஆதலால் என் அருமையுள்ள வைத்தியரே! அடியேனுக்கு வைத்தியம் செய்வீராக. உம்முடைய வைத்தியம் முடியுமட்டும் நான் என் நாவை நீட்டிக் கொண்டே இருப்பேன்.

## இயேசுவின் வைத்தியம்

ஆ! என் இயேசு என் நாவின் கட்டை அவிழ்க்கிறார். அதில் பெருமை என்னும் ஒரு ஜவ்வு தானாய் வளர்ந்து என் நாவைச் சுற்றி இறுக்கமாய்க் கட்டிக் கொண்டிருந்தது. அதை வெட்டினார். மற்றவர்களை நிந்திக்கவும் சபிக்கவும் தூஷிக்கவும் உதவும் ஒரு நஞ்சு மருந்து அதில் இருந்தது. அந்த மருந்தில் கோபம், வைராக்கியம் என்னும் பொறிகள் விழுந்தவுடனே அது பீரங்கி வெடித்ததுபோல் வெடிக்கும். அதை அவர் ஒருவிதக் கருவியால் இழைத்து எடுத்துவிட்டார். அதன் மேல் ஒரு கள்ளத்தோலும் வளர்ந்திருந்தது. அதற்குப் பொல்லாப்பு, கபடம் என்று பெயர்; அதையும் அவர் வாழைப்பழத்திற்குத் தோல் உரிப்பது போல் உரித்து, சுத்தப்படுத்திவிட்டார். எல்லா வைத்தியத்துக்கும் பின்பு அவர் தமது திருஅமுதை என் நாவில் தடவினார். அது முதல் அதின் வியாதி சமூலமாய் நீங்கிவிட்டது. அல்லேலூயா! இப்பொழுது என் நாவு தேவ மகிமைக்கும், அவரைத் தோத்தரிப்பதற்கும் நன்றாய் வருகிறது. திக்குவாய் என்னப்பட்டதே என் நாவில் இப்பொழுதில்லை. என் நாவிலிருந்து வரும் வார்த்தைகளைக்

கேட்க என் இரட்சகரும் பிரியமாய் இருக்கிறார். அது பரிசுத்த ஸ்தலத்திலுள்ள அக்கினியால் கொளுத்தப்பட்ட என் ஆயுள் சக்கரம் முழுவதையும் தேவஸ்துதியால் நிரப்புகிறது. என் நாவில் திவ்விய அமுதம் பூசப்பட்ட நாள்முதல் அதில் உண்டாகும் அன்பின் வசனங்களையும், ஆறுதலின் வாக்கையும் கேட்கும்படி அநேகர் வரக் காண்கிறேன். இனி நான் செய்யவேண்டிய ஒரே கடமை உண்டு. அதாவது, பழைய அழுக்குகளும் கட்டுகளும் கள்ளத் தோலும், மறுபடியும் என் நாவைச் சேதப்படுத்தாதபடி என் வைத்தியனை நோக்கி எப்போதும் மன்றாடி வருவேன்.

### வைத்தியப் பலன்

என் இயேசுவினிடத்தில் வைத்தியம் செய்யும்படி நான் என் நாவை நீட்டின நாள்முதல் ஒரு பெரிய வித்தியாசத்தைக் காண்கிறேன். அது கொடுக்கும் மெதுவான பிரதியுத்தரம் அநேகருடைய கோபத்தையும் உக்கிரத்தையும் தணித்து விடுகிறது. அது பெருமைப்பானவைகளைப் பேசாமல் ஞானத்தைப் பேசுகிறது. அது தன் ஒரு பக்கத்தால் துன்மார்க்கத்தைக் கண்டித்து, மறுபக்கத்தால் சன்மார்க்கரை உற்சாகப்படுத்துகிறது. தேவனைத் துதிக்கும் துதி எப்போதும் என் வாயில் இருக்கிறது. இனிப் பழைய நோய் என் நாவை ஒரு நாளும் பிடியாது; நான் திக்குவாயனாகவுமாட்டேன். ஏனெனில் நான் என் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு, என் வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பேன் என்று அவருக்கு உடன்படிக்கை செய்து கொடுத்திருக்கிறேன்.

என் ஆத்துமாவுக்குக் கொன்னைவாய் நோய் இருக்கிறதோடு கூட அதில் கண்ணும் கெட்டிருக்கிறது. ஐயோ! என் நிலைமையைப் போல பரிதாபமான நிலைமையுண்டா? அதை நீக்கும் வைத்தியமுண்டென்று நான் அறிந்திருக்கிறதால் என் நிலைமையைக் குறித்து அழுதுகொண்டிராமல், வைத்தியரிடம் போய் அதற்கும் வைத்தியம் செய்துகொள்வேனாக.

நான் இயேசுவின் உமிழ்நீர் தைலத்தை ஊற்றாமல் என் கண்ணைக் கெடுத்துப் போட்டேன்; ஐயோ! குருடாக்கிப் போட்டேன். என் மனதில் ஒருவிதக் கொழுப்புண்டாகி மனக்கண்ணை மூடிக்கொண்டதால் நான் குருடனானேன். நான் என்னை அறியாத குருடனும், என் இரட்சகரை அறியாத சுபோதியுமானேன். என்னைப் பெற்ற தகப்பனையும் எனக்குப் பாலூட்டின தாயையும் காணக் கண்ணில்லையே. ஐயோ, நான் என்ன செய்வேன்? எனக்குக் கைலாகு கொடுப்பாருமில்லை; கலிக்கமிடுவாருமில்லையே. நான் என்ன செய்வேன். இயேசுவின் வாயிலிருந்து வந்த உமிழ்நீரும் சரி, அவருடைய வசனமும் சரி. அவருடைய திரு இருதயத்திலிருந்து புறப்பட்ட சுவாசமானது சிலதரம் இரட்சண்ய நேச அனலால் குணமளிக்கும் உமிழ்நீராயும், சிலதரம் இரட்சண்ய வசனங்களைப் பொழியும் ஒலி அணுக்களாயும் வெளிப்பட்டது. ஆதலால் எனக்கு இப்பொழுது அவருடைய வசனமும் சரி. அவருடைய உமிழ்நீரும் சரிதான். என் மனக்கண் என்ன முகாந்தரத்தாலாவது தன் காட்சியில் குன்றினால் நான் உடனே இயேசுவின் திருவசனக் குப்பியைத் திறந்து அந்த வசனக் கலிக்கத்தில் இரண்டொரு சொட்டை எடுத்துப் பூசிக் குணமடைவேனாக.

## ஆத்துமக் குருடனுடைய பரவசம்

தமது திருவசனமாகிய திவ்விய உமிழ்நீரை அவர் எனக்குத் தந்திருக்கிறதோடு தாமும் வேளாவேளை தமது ஆவியின் மூலமாய் என் இருதயக் கதவைத் தட்டி, நீ குருடனாய் இருக்கிறாய், [1]நீ பார்வையடையும் படிக்கு உன் கண்களில் கலிக்கம் போடட்டுமா என்று கேட்கிறார்.

ஆ! என் நேச இயேசுவே! என் ஆத்துமக் கதவைத் தட்டுகிறது நீரா? யாரோ என்றிருந்தேன். இப்பொழுதும் நேச இயேசுவே! உள்ளே வாரும்.

**இயேசுவின் மறுமொழி:** நல்லது பாவி, கதவைத் திற.

[1] வெளி.3:18.

**பாவி :** ஐயா! நான் கதவைத் தடவியும் தாழ்ப்பாளைக் கண்டுபிடிக்க இயலாமல் அவதிப்படுகிறேனே. திறவுகோல் துவாரத்தின் வழியாய் ஏதாவதொரு வைத்தியம் செய்து, முதலாவது என் கண்ணைத் தெளிவித்தால் நான் கதவைத் திறக்க சக்தியடைவேன்.

**இயேசு:** நீ போய் சீலோவாம் குளத்திலே உன் கண்ணைக் கழுவு (அதாவது, கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைத்தல்); அப்பொழுது உன் கண் தெளிவாகும்.

**பாவி:** அப்படியே கழுவினேன், இப்பொழுது கண் தெளிவு - வெகு தெளிவு. எல்லோருக்கும் கண்ணாடி போட்டால் தான் தெரிகிறது; எனக்குத் தானாய்த் தெரிகிறது. இன்று முதல் உலகத்திலும் அதிலுள்ளவைகளிலும் என் கண் செல்லாதிருப்பதாக; தமது கலிக்கத்தால் என் கண்ணைக் குணமாக்கின இயேசுவை நோக்க என் கண் பிரகாசமாய் இருப்பதாக.

## ஜெபம்

தயவுள்ள சுவாமி! என் விண்ணப்பத்தைக் கேட்பீராக. அடியேனுக்கு நாவிலும் நோய், கண்ணிலும் நோய், என்னைப் போலொத்த நோயாளியையும், உம்மைப் போலொத்த வைத்தியனையும் இவ்வுலகம் கண்டிருக்க மாட்டாது. இப்பொழுதும் சுவாமி! என் நாவின் திமிரைத் தீர்த்தருளும். சகல நாவாலும் அறிக்கையையும் துதியையும் அடைய வேண்டிய தேவனே! அடியேனுடைய நாவும் அந்தத் துதியில் சேர்த்துக் கொள்ளும்படி என் நாவைத் தொட்டு அதின் திமிர் நீங்கும்படி உமது இரட்சண்ய தைலத்தைப் பூசியருளும். குழந்தைகள் வாயிலும் குருவிகள் வாயிலும் துதியை உண்டு பண்ணுகிறவரே! நானும் என் நாவினால் உம்மைப் போற்றும்படி செய்யும்.

திவ்விய இயேசுவே! எனக்குக் கண் குருடு. எந்த மாதிரி கண்ணாடியும் எனக்குப் பிரயோஜனப்படுகிறதில்லை. என் கண்ணில் நயனமே இல்லை என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு

குருடனாயிருக்கிறேன். உம்மிடத்திலிருக்கிற கலிக்கம் ஒன்று தவிர வேறு மருந்து ஒன்றும் என்னைக் குணமாக்க மாட்டாது; ஆதலால் இரவும் பகலும் என் கண்ணை வானத்துக்கு நேராக ஏந்திக் கொண்டிருக்கிறேன். எனக்கு வேண்டிய வெளிச்சமும், மழையும், காற்றும் உன்னதத்திலிருந்தே வருகின்றன. என் குருட்டுக் கண்ணுக்குக் கலிக்கமும் அங்கிருந்து தான் வர வேண்டியது. 'கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும்' என்று வாக்குப் பண்ணிய இரட்சகரே! உமது கலிக்கத்தை எனக்குத் தாரும்; உம்மிடத்தில் வந்த குருடரெல்லாரும் கண்ணில் காட்சியோடும் வாயில் பாட்டோடும் போனதுபோல் அடியானும் போக அருள்புரியும், சுவாமி. ஆமென்.

## துதி

**தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!**

**என் கண்ணைத் திறந்தவருக்கே ஓசன்னா!**

**கர்த்தாவே! தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராய் இருக்கிறீர்.**

# தியானம் 22

## ஆத்தும நேசரின் கண் (1 ஆம் பாங்கு)

### வேதம்

[1]'அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டார்.' [2]'அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்....பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார்.' [3]'கப்பலில் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்.' [4]'அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு' கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தார்'.

### போதனை

இரட்சகரின் திருக்கண்ணைப் பற்றியும் சில குறிப்புகளைப் பார்க்கிறோம். அவைகளில் மூன்றை மாத்திரம் இவ்விடத்தில் ஆராய்வோம்:

1. இயேசுவின் கண் அழுதது. இயேசு மூன்று தரம் கண்ணீர் விட்டதாக அறிகிறோம். [5]இலாசருவின் மரணத்துக்காகவும், [6]எருசலேமுக்காகவும், [7] சர்வலோகத்துக்காகவும் இயேசுவின் கண் கண்ணீர் விட்டிருக்கிறது. எபிரெயர் நிருபத்தில் அவர் கண்ணீர் விட்டதைப்பற்றிச் சொல்லிய குறிப்பு கெத்செமனேயின் கண்ணீரை விசேஷித்துக் குறித்தாலும் 'மாம்சத்திலிருந்த நாட்களில்' என்ற வார்த்தைகள் அவர் ஜீவகாலத்திலெல்லாம் சர்வலோகத்துக்காகத் தாம் ஏற்றுக் கொண்ட பெரிய வேலையை நினைத்துக் கண்ணீர் விட்டார் என்று காட்டுகிறது. இந்த முப்பத்துமூன்று வருடத்திலும் அவர் சிரித்ததாக யாதொரு குறிப்பும் நமக்குத் தெரிகிறதில்லை. ஒரே தரம் [8] ஆவியிலே களிகூர்ந்தார் என்று மாத்திரம் அறிகிறோம்.

2. இயேசுவின் கண் தூங்கினது. அவர் தூங்கினதாக வருகிற இந்த ஒரே குறிப்பு வீட்டுக்குள் அல்ல, ஊருக்குள் அல்ல, மலையில் அல்ல, கடலுக்குள். கப்பலே அவர் தூங்கின வீடும்

---

[1] லூ. 19:41. [2] எபி.5:7. [3] மா. 4:38. [4] மா. 3:5. [5] யோ. 11:35. [6] லூ. 19:42
[7] எபி. 5:7. [8] லூ.10:21.

கட்டிலாயுமிருந்தது. அப்போது [1]படகு நிற்காமல் ஓடிற்று; மேலும் [2]கடலில் பெருங்காற்று உண்டாயிற்று.

3. பாவவெறுப்பைக் காட்டினது. நமது இரட்சகர் தமது ஊழிய காலத்தில் ஏழு அற்புதங்களை ஓய்வு நாளில் நடப்பித்தார். ஓர் ஓய்வுநாளில் அவர் அற்புதம் செய்யப்போகிறதையிட்டு ஜனங்கள் அவர்மேல் குற்றஞ்சாட்ட வந்திருக்கிறதை அறிந்து, அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் தமது கண்களினால் கோபமாய்ப் பார்த்தார்.

## தியானம்

ஆத்துமநேசரின் கண் அழுதது என்ற வார்த்தை என் கண்ணீரைத் ததும்பப்பண்ணுகிறது. [3] எல்லோருடைய கண்ணீரையும் துடைத்து, அவர்களை மகிழ்ச்சியினால் இடை கட்டுகிறவர் அழுகிறார். 'இரட்சகா! [4] உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றன.' சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிப் போட்ட எருசலேமைக் கண்டவுடனே நீர் மனந்தாளாமல் அழுகிறீர். என் ஆத்துமாவாகிய ஞான எருசலேமுக்காக நீர் எத்தனைதரம் அழுதீரோ! என் இருதயக் கடினம் உம்மை அழச்செய்து, உமது திருக்கண்களை நீராகப் பிழிகிறது. எனக்குக் கிடைத்த இரட்சண்யக் காலத்தை நான் ஆதாயப்படுத்திக் கொள்ளவில்லை என்கிற ஆற்றாமை உமக்கு உண்டு. நானோ வெயிலில் வைக்கப்பட்ட களிமண்ணைப் போலக் கெட்டியாகிக் கடின இருதயமடைகிறேன். நீரோ எனக்காக நெருப்பிலிட்ட மெழுகைப்போல உருகி அனுதாபப்பட்டுக் கண்ணீர் சொரிகிறீர். ஏனெனில், என் அழிவின் தன்மையை நான் அறியாவிட்டாலும் அது உமக்கு நன்றாய்த் தெரியும்.

உம்முடைய ஆவி என்னிமித்தம் படவேண்டியதை எல்லாம் சகிக்க மனதுள்ளதாயிருந்தது. ஆனால், என் பலவீன மாம்சத்தை எடுத்ததையிட்டுத் தூங்காமலும் உறங்காமலுமிருந்து இஸ்ரவேலைக் காக்கிற நீர் தூங்கினீர். நீர் தூங்குகையில் கடலும்,

[1] லூ.8:23. [2] மத்.8:24. [3] எபி.5:7. [4] எரே. 5:3

அலையும், பெருங்காற்றும் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு சீடரைப் பயப்படுத்தின, இரட்சகா! இதை நான் அடிக்கடி என் ஆத்துமாவில் உணருகிறேன். நீர் உமது கண்ணை மூடும் போது நான் மிகவும் பாடுபடுவதுண்டு. பிசாசு, பாவம், உலகம் என்னும் சத்துருக்கள் நான் இராமலே போகத்தக்கதாக எனக்கு விரோதமாக எழும்புகிறார்கள். ஆகையால் இரட்சகா! அடியான் முகமாய் உமது கண் ஒரு நாளும், ஒரு நிமிடமும், ஒரு நொடியும் மூடாதிருக்கும்படி மன்றாடுகிறேன்.

**ஜெபம்**

இரக்கமுள்ள இயேசுவே! பாவத்தைப் பாராத சுத்தக் கண்ணனே! சத்தியத்தை நோக்கும் நீதியுள்ள தேவனே! பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும். என் பாவங்களைப் பாராதபடி என் அழிவையும், தேவரீருடைய கிருபையுள்ள வாக்குத் தத்தங்களையுமே நோக்கிச் சகாயஞ் செய்யும். நான் என் பாவத்துக்காக அழுது கண்ணீர்விட்டு மனந்திரும்பி, புது ஜீவமார்க்கத்தில் வழிவிலகாமல் சென்று உமது பரம இராஜ்யத்தின் படிகளிலேறக் கிருபை செய்ய வேண்டுமென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

**துதி**

அழுத கண்ணை ஆனந்தக் கண்ணாக மாற்றும் என் இரட்சகருக்கு ஸ்தோத்திரம், எந்நாளும் ஸ்தோத்திரம்.

# தியானம் 23

## ஆத்தும நேசரின் கண் (2 ஆம் பங்கு)

### வேதம்

[1]"அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்...என்றார்.' [2]"கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான். [3]"இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக் கட்டினார்கள்'

### போதனை

இரட்சகரின் திருக்கண்ணைக் குறித்து முந்தின தியானத்தில் மூன்று காரியங்களை ஆராய்ந்தோம். இப்பொழுது வேறு மூன்று காரியங்கள் நமக்கு உணர்த்தப்படுகின்றன.

*1.* இயேசுவின் கண் உத்தம ஈவை நோக்கினது. தேவாலயத்தில் கூடிவந்த ஜனங்களுக்குக் காணிக்கைப் பெட்டிக்கு எதிரே உட்கார்ந்து ஞானோபதேசங்களைப் போதித்துக் கொண்டிருந்த இயேசு, தமது கண்களை ஏறெடுத்து, பல பிரபுக்கள் காணிக்கைப் போடுகிறதைத் தம்மை சூழ்ந்து இருக்கிறவர்களுக்குக் காட்டினார். அந்தப் பிரபுக்கள் கூட்டத்தில் கந்தை கட்டி, தேகமெலிந்து, கோல் பிடித்துவரும் ஓர் ஏழையுமிருந்தாள். அவள் காணிக்கை போட்டவுடனே இரட்சகர், இந்தக் கைம்பெண்தான் எல்லோரிலும் அதிகம் போட்டாள் என்று சொன்னார். அவளோ பித்தளையால் செய்யப்பட்ட இரண்டு காசை மாத்திரம் போட்டாள். அந்த இரண்டு காசும் கால் அணாவுக்கும் கொஞ்சம் குறைவு தான்.

---

[1] லூா.21:1-4. [2] லூா.22:61,62,. [3] லூா. 22:63,64

**2. அது பாவத்தை உணர்த்தும் நியாயப்பிரமாணக் கோலாயுமிருந்தது.** பரி. பவுல் நியாயப்பிரமாணமானது [1] பாவத்தை அறியும் அறிவைக் கொடுக்கிறது என்றும், [2] கிறிஸ்துவினிடத்துக்கு வழிநடத்துகிறதென்றும் சொல்லுகிறார். பேதுரு, இரட்சகரை மறுதலித்த போது நியாயப் பிரமாணத்தின் வேலைகளின் முன் குறித்திருக்கும் இரண்டையும் இயேசுவின் கண் நிறைவேற்றினது. அது பேதுருவின், நன்றிகெட்ட துரோகத்தை அவனுக்கு உணர்த்தினதோடு, கிறிஸ்துவினால் இரட்சண்யத்தை நாடவும் அவனுக்கு வழி காட்டினது.

**3. இயேசுவின் கண் கட்டப்பட்டு பாடுகளில் பங்கு பெற்றது.** அன்று காய்பாவின் அரண்மனையில் அவருடைய [3] கைகள் கட்டப்பட்டது போலவே, அவர் கண்களும் கட்டப்பட்டன.

## தியானம்

இரட்சகா! நீர் ஏழைகளின் தேவன்; நீர் [4] பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்துகிறீர். எமக்கு எதிரேயிருந்த காணிக்கைப் பெட்டியண்டை வந்த எப்பிராயீம் தலைவர், எருசலேமின் பிரபுக்கள் முதலிய ஐசுவரியவான்களின் பொற்சரிகையுடுப்புகளையாவது, தமஸ்குவின் பட்டு பட்டாவளிகளையாவது, பணமூட்டைகளையாவது உமது கண் நோக்காமல் ஏழையின் இரண்டு பித்தளைக் காசை நோக்கிற்று. யூதப் பிரப்புக்களின் கண்களோ, தங்கள் கூட்டத்தோடு வந்து காணிக்கை போட்ட ஏழையைச் சூடாய்ப் பார்த்தது. அவள் காணிக்கை போடத் தன் கையை நீட்டினபோது, அவர்கள் தங்கள் முகத்தை அவளைவிட்டு வேறு திசைக்குத் திருப்பினார்கள். நீரோ உம்முடைய கிருபையின் கண்களை அவள் முகமாய்த் திருப்பினீர்; அவள் போட்ட தொகையை அறிந்து கொண்டீர். அவள் பையைப் பரிசோதித்து அந்த ஏழை தன் ஜீவனத்துக்கு உண்டானதெல்லாம் போட்டுவிட்டதையும் ஞானதிருஷ்டியினால் பார்த்தீர்: கொஞ்சம் போட்ட அவளைப் பரலோக மட்டும் உயர்த்திவிட்டீர். அவள் இருதயத்தின் தன்மை உமக்கு மறைவாயிருக்கவில்லை. ஆ! சிறியவனை மண்ணிலிருந்தும்

எளியனைப் புழுதியிலிருந்தும் தூக்கியெடுத்து உயர்த்திவிடுகிற என் இயேசுநாதருக்குச் சமானமானவருண்டோ! அல்லேலூயா! பிரபுக்களின் காணிக்கைகளின் பலன் தேவாலயத்துக்குள் கேட்ட கலீர் கலீர் என்ற சத்தத்தோடு முடிந்தது; ஏழைக் கைம்பெண் போட்ட ஓசையில்லா இரண்டு பித்தளைக் காசும் பூலோகத்திலும் பரலோகத்திலும் ஓசையிடுகிறது. இன்றைக்கும் பரலோகத்தின் தூதரும், பரிசுத்தவான்களின் ஆவிகளும்,

'அதோ, இரண்டு காசு போட்ட விதவை'

என்று சொல்லி, அவளை அழைக்கிறதை என் விசுவாசக் காது கேட்கிறது.

இயேசுவே! நான் அடிக்கடி உமது காணிக்கைப் பெட்டியில் பணம் போட்டிருக்கிறேன். ஆனால், நீர் புகழ்ந்த ஏழையைப் போல நல்மனதோடு போட்டதே இல்லை; இனி நான் உமது நாமத்துக்கு மகிமையாகக் கொடுக்கிற காணிக்கைகளையும், பணங்களையும் மன உற்சாகமாய்ச் செலுத்த இதோ தீர்மானஞ் செய்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக நான் ஞான தேவாலயப் பொக்கிஷமாகிய உமது திருப்பாதத்தில் செலுத்தும்படி வைத்துக்கொண்டிருக்கிற இரண்டு காசுகளுடன் வந்திருக் கிறேன்; தயவாய் அதை வாங்கிக் கொள்ளும்.

**விசுவாசப் படைப்பு**

இரட்சகா! இதோ என் இரண்டு காசுகளாகிய என் ஆத்துமாவையும், சரீரத்தையும் உமது பாதபொக்கிஷத்தில் படைக்கிறேன். ஒரு காலத்தில் விலை மதிக்கப்படாததாக இருந்த இந்த இரண்டு காசையும் நான் சிற்றின்பச் சேற்றிலும், பொருளாசைப் புதரிலும், பாவப் பாதாளத்திலும் புதைத்து வைத்துப் பித்தளைக் காசுகளாக்கி விட்டேன். கைம்பெண்ணின் இரண்டு பித்தளைக் காசுகளையும் தள்ளாத இயேசுவே! இவற்றையும் தள்ளாமல் ஏற்றுக் கொண்டு இவை இரண்டையும் உமது தங்கசாலைக்கு அனுப்பி, தேவாவியாகிய தங்கசாலைத் தலைவரைக் கொண்டு முன்போல் பொன்னாக்கி, இவை இரண்டும் பரலோக வீதிகளில் தடையின்றிச் செல்லும்படி செய்யும்.

**தியானம்**

என் இரட்சகர் பேதுருவைப் பார்க்குமட்டும் அவன் பாவம் அதிகரித்தது, முற்றினது. கர்த்தர் திரும்பிப் பார்த்தார்; பேதுரு அழுதான். ஆ, பேதுருவே! எல்லோரும் உம்மை விட்டுப் போனாலும் நான் உம்மை மறுதலிக்கவே மாட்டேன் என்று சொன்ன வாய் இப்போது எங்கே? உம்மோடுகூட சாக வேண்டியதிருந்தாலும் மறுதலிக்கமாட்டேன் என்ற நாவெங்கே? நீரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்ட மனமெங்கே? ஆ, நீ உன் சுயபலத்தில் நம்பிக்கை வைத்திருந்தாய், நானும் இப்படியே அடிக்கடி என் பலத்தை நம்பி என் ஆத்துமாவின் இடுப்பு முறிய விழுகிறேன்! ஆனால், நீ பன்னிரு சீடரிலும் பாக்கியம் பெற்றவன், இயேசுவின் கிருபைக் கண்கள் உன்னைப் பார்த்தன. என் அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பி வழிகையிலும் இரட்சகர் என்னைத் தள்ளிவிடாமல் நோக்கிப் பார்க்கிறார். நான் துன்பக்கடலில் ஆழும்போது அவர் தமது கை நீட்டி இரட்சிக்கிறார்; பாவ பாதாளத்தில் விழும் போது கண்ணோக்கி என் நிலைமையை உணர்த்துகிறார். என் இரட்சகருடைய கண் தமக்கு விரோதமாய் எழும்பின பேதுருவின் இருதயத்தை ஊடுருவும் அம்புபோலிருந்தது. அவர் தமது அம்பைக் கொண்டு பாவப் பிளவையைக் குத்தி அறுத்துப் போட்டதுமன்றி ஆற்றியும் போட்டார். பாவத்தை உணர்த்தி அறுக்கும் அவர் பார்வையாகிய அம்பின் முனையில் அழிவாகிய நஞ்சையல்ல, இரட்சண்ய அன்பாகிய தைலத்தைப் பூசி எய்தார். ஆதலால், அவருடைய அன்பு பேதுருவின் இருதயத்தை அறுத்து ஆற்றிவிட்டது.

கடைசியாக, என் இரட்சகருடைய திருக்கண் மூடப்படுகிறது. என் கண்களின் இச்சையாகிய சகல தோஷங் களும் நிவர்த்தி செய்யப்பட வேண்டியனவாகையால் அவருடைய கண்ணையும் வேதனைப்படுத்திக் கட்டுகிறார்கள். இரட்சகா! சத்துருக்கள் தங்கள் மனங்கொண்டபடி உம்மைப் பரியாசம் பண்ணவும், அடிக்கவும், குட்டவும் இப்படி உம்மைக்

கண்களைக் கட்டிவிட்டார்கள். சிம்சோனைக் கண்ணைப் பிடுங்கிப் பரியாசஞ் செய்தார்கள்; உம்மைக் கண்களைக் கட்டி அவமானஞ் செய்கிறார்கள். சிறு பிள்ளைகள் கூடி ஒரு பிள்ளையைக் கண்ணைக் கட்டி அடித்து விளையாடுவார்கள். நீர் துன்மார்க்கர் நடுவில் சிறு பிள்ளைபோல் கண்கள் கட்டப்பட்டு நிற்கிறீர். இயல்பாகவே உமது கண் மயங்குகிறது. உமக்கிருக்கும் பசி, தாகம், ஆயாசம், கண் விழிப்பு இவை உமது கண்ணுக்குமுன் ஒரு மெல்லிய திரை போலிருந்தன. அதோடு முள்முடி அழுத்திய காயங்களிலும், தலையில் அடித்த அடிகளிலுமிருந்து வடிந்த இரத்தம் உமது கண்ணில் இறங்கி அதைச் செம்மச் செய்தது. சத்துருக்கள் தங்கள் வர்மத்தைத் தீர்க்க இவை இரண்டு திரைகளே போதும்; அதோடு மூன்றாம் திரையாக உமது கண்களைக் கட்டினார்கள்.

சத்துருக்கள் எத்தனையாய்த்தான் உமது கண்களைக் கட்டினாலுமென்ன? உமது திருப்பார்வை அக்கட்டுகளை ஊடுருவி என் ஆத்துமாவில் பாவமன்னிப்பின் கிரணங்களை வீசச் செய்ய உமக்கு வல்லமையுண்டு. ஏனெனில், நீர் தேவன். நீர் என்னை உமது கட்டப்பட்ட கண்ணோடு பார்த்தால் அதே போதும். இரட்சிக்கும் சித்தம் மாத்திரம் உமது உள்ளத்தில் இருந்தால் உமது சரீரக் கண்ணானது மூடப்பட்டிருந்தாலென்ன, திறக்கப்பட்டிருந்தாலென்ன? இரண்டும் சரிதான்.

ஏழையைப் பார்த்த கண்ணே நமஸ்காரம்,
நான் ஓர் ஏழை பாருமையா நமஸ்காரம்,
பேதுருவை அழச் செய்த கண்ணே நமஸ்காரம்,
என்னையும் அழ நோக்கும் ஐயா நமஸ்காரம்,
கட்டுண்ணப்பட்ட கண்ணே நமஸ்காரம்,
என் கண்ணிச்சைக் கட்டகற்றுவீர் நமஸ்காரம்.

**ஜெபம்**

மகா இரக்கமுள்ள இயேசுவே! நான் உமது திருச்சரீரத்தின் அங்கங்களைத் தியானிக்கத் தியானிக்க உமது பேரிலுள்ள நேசம் பெருகி பாவத்தின் மேலுள்ள பாசம் குறைகிறது. அதற்காக உமக்கே ஸ்தோத்திரம். பேதுருவை இரட்சிக்கும்படி உமது

கண்களை நோக்கினது போல, பெரும்பாவியாகிய நான் பாவ மன்னிப்படையும்படி உமது திருக்கண்களால் என்னை நோக்கியருளும். உமது பார்வையே பார்வையற்ற என் கண்களுக்குக் கலிக்கமாயிருக்கிறது. நீர் பார்க்குமட்டும் என் பாவம் என்னில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆ, இயேசுவே! அடியானை உமது பூரணக் கண்ணினால் நோக்க சித்தங்கொள்ளாவிட்டாலும் கடைக்கண்ணினால் நோக்கினால் போதும் ஐயா, இவ்வளவு சகாயத்தை இந்த ஏழைக்கு செய்தால் நான் பிழைத்துக் கொள்வேன். இயேசுவே பாரும், இரட்சகா நோக்கும், இயேசுவே பாரும்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

**துதி**

உலக இரட்சகரே! உமது சிலுவையினாலும் உமது அருமையான இரத்தத்தினாலும் எங்களை மீட்டுக் கொண்ட கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம். உம்மை வணங்குகிறோம். உம்மை மகிமைப்படுத்துகிறோம். உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்.

# தியானம் 24

## ஆத்தும நேசரின் முகம் (1 ஆம் பாங்கு)

### வேதம்

'இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது.'[1] 'இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை... எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.' [2]'இயேசு எடுத்துக் கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பினார்.' [3]'யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.'

### போதனை

மேலே சொல்லிய வாக்கியங்களில் இயேசுவின் திருமுகத்தைப் பற்றி நாலு குறிப்புகளை அறிகிறோம்.

1. அது ஒரு நாள் சூரியனைப் போல் பிரகாசித்தது. அது எந்த நாள்? இரட்சகர் தாபோர் மலையில் மறுரூபப்பட்ட அன்று தான். அதுதான் பாவமில்லாத அவருடைய சரியான முகச் சாயலாயிருக்கவேண்டியது. இந்தச் சாயலை அவர் ஒருதரம் மோசேக்குக் காட்டினார். [4]அந்தச் சாயலின் மகிமை அவன் முகத்தில் பிரகாசித்தது. ஜனங்கள் அதைக் கண்டு பயந்ததினால் மோசே தன் முகத்தை மூடிக்கொண்டான். ஏசாயா தீர்க்கதரிசி இவருடைய முகத்தின் வெளிச்சத்தைக் கண்டு [5]ஐயோ அதமானேன் என்று அழுதான்.

2. இயேசுவின் முகத்தில் தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளி இருந்தது என்று அறிகிறோம். மாம்சக்

---

[1] 2 கொ. 4:6. [2] லூா. 9:51. [3] யோ. 8:57. [4] யாத். 34:33-35. ஏசா. 6:5.

கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாத தேவ மகிமையும், தேவனைப் பற்றிய மெய் அறிவும் கிறிஸ்துவின் முக அழகாயிருந்து பாவிகளுக்கு உணர்த்திற்று.

*3.* இயேசுவின் முகம் பாடுபடும் திசையை நோக்கி மனச் சந்தோஷமாய்த் திரும்பினது. [1] இயேசுவை இராஜாவாக்கும்படி ஜனங்கள் திரண்டு வந்தபோது அவர் மலையின் மேலேறி மறைந்து கொண்டார். பாடுபடும்படி தாமே சொல்லிக் கொண்டு போனார். இரட்சகர் கடைசி முறையாய் எருசலேமுக்குப் போகுமுன் தமக்குச் சம்பவிக்கப்போகிற பாடுகளைக் குறித்து மூன்று தரம் பேசியிருக்கிறார் என்று [2]மத்தேயு [3]மாற்கு [4]லூக்கா என்னும் மூன்று சுவிசேடகரும் சொல்லியிருக்கிறதால் அறியலாம்.

*4.* இயேசுவின் முகச்சாயல் அவர் வயதை மறைத்தது என்பது வெளியாகிறது. நம்முடைய இரட்சகர் மரணமடையும் போது முப்பத்துமூன்று வயதுடையவராயிருந்தார். அவர் சுமார் முப்பத்தொரு வயதுடையவராயிருந்தபொழுது ஒருநாள் யூதரோடு தர்க்கித்தார். ஒருவன் அவருடைய முகச்சாயலைக் கூர்மையாய்க் கவனித்து, 'உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே; நீ ஆபிரகாமைக் கண்டாயோ?' என்று கேட்டான். இதினால் முப்பத்தொரு வயதாயிருந்த இயேசுவின் முகம் ஐம்பது வயது முகம் போல் தோன்றியிருக்கிறது.

**தியானம்**

ஆத்துமாவே! நீ இயேசுவைப் பெத்லகேமின் தொழுவத்திலும், பிலாத்துவின் அரண்மனையிலும், கொல்கொதா மலையிலும் போய்ப் பார்த்து அடிக்கடி அவருடைய தெய்வீகத்தைக் குறித்து மலைக்கலாம். தாபோரிலும், சீனாயிலும் அவர் வெளிப்பட்ட மகிமைகளைப் போய்ப் பார்த்துக் கொள்வது நலம்.

இரட்சகா! நீர் தாபோரில் வெளிப்பட்ட மகிமையோடு, உமது மானிடவதார காலமுழுவதையும் செலவிட்டால் நானும்

---

[1] யோ. 6:15. [2] மத். 16:21; 17:22; 20:18. [3] மாற். 8:31; 10:34, [4] லூக். 9:22, 44; 18:31.

என்னைப்போலொத்த பாவியும் கிட்ட வரலாமா? வரலாகாது. ஒரு குஷ்டரோகியும் கிட்ட நெருங்கான்; ஒரு திமிர்வாதக் காரனும் துணிந்துவரான்; ஒரு குருடனும் கூப்பிடான். நீர் உமது சுய ரூபத்தோடு வெளிப்பட்டால் மனுஷர் உம்மை அண்டக்கூடாததாயிருக்குமென்று நீரே அறிந்து [1]அடிமையின் ரூபமெடுத்து மனுஷனாய் அவதரிக்கும்படி கன்னிமரியம்மாளின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை. நீர் தாபோரில் காண்பித்த சாயலைக் குறித்து பரி. யோவான் [2]அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று சொல்லிய வாசகம் உம்மையும் பிதாவையும் ஒரே படத்தில், ஒரே நேரத்தில் கண்டுகொள்ள உதவியாயிருக்கிறது. என் இரட்சகர் அடிக்கடி இந்த மகிமையைத் தமது சீடருக்குக் காட்டியிருப்பதினால் தைரியமுள்ள கேபாவும், அன்புள்ள யோவானும் அவரிடத்தில் முடியுமட்டுமிராமல் ஓட்டம் பிடிக்கலாம். இயேசுவே! தாபோரின் காட்சியை நீர் எனக்குக் காட்ட வந்தால் நான் குப்புற விழுந்திடுவேன்; எனக்குக் கொல்கொதாவின் காட்சியைக் காட்டினால் போதும். தாபோரில் உமது பரிசுத்த மகிமை உமது முகத்தில் பிரகாசிக்கிறது; கொல்கொதாவின் பிதாவினுடைய அன்பின் மகிமையைப் பற்றிய அறிவாகிய பிரகாசம் உமது முகத்தில் இலங்குகிறது.

நீர் கடைசி முறையாய் எனக்காகவும் சர்வலோகத்துக் காகவும் பாடுபடும்படி உமது திருமுகத்தை எருசலேமுக்கு நேரே நடத்துகிறீர்; உமது சீடர்கூட வந்தாலும் நீர் விரைவாய் முந்தி நடக்கிறீர்; நீர் போகிற விரைவை அவர்கள் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். உம்முடன் தொடர்ந்து நடக்க அவர்களால் முடியவில்லை; இப்படியும் சாகும்படி ஓடுவாருண்டா? பரியாசம், வாரடி, சிலுவை, கொலை இவையனைத்தும் வருமென்று சொல்லிக்கொண்டு அந்த ஊருக்கு சந்தோஷத்தோடு எட்டி நடக்கிற இவர் யார் என்று [3]திகைத்துப் பயத்தோடு வருகிறார்கள். பிதாவின் அன்பும் உம்முடைய அன்பும் உமது முகத்தை எருசலேமுக்கு நோக்கி,

[1]பிலி. 2:7; [2]யோ. 1:14. [3]மாற். 10:32.

முதுகைத் தள்ளிக் கொண்டு போகிறதென்று என் விசுவாசக் கண் காண்கிறது. ஆ, என் இரட்சகர் எனக்காக மரணமடைய எவ்வளவு ஆசையுள்ள முகத்தோடு எருசலேமை நோக்கி நடக்கிறார்!

எல்லா மனுபுத்திரரிலும் மகா அழகுள்ள முகமுடைய நீர் எவ்வளவு விருத்தாப்பியனைப் போலக் காணப்படுகிறீர்! என் பாவங்களும் சர்வலோகத்தின் பாவங்களும் நிமிடந்தோறும் உமக்குமுன் நின்று கொண்டு உம்மைத் தூங்க விடாமலும், நடக்கவிடாமலும், உண்ணவிடாமலும், உடுக்கவிடாமலும் தொந்தரவு செய்து கொண்டு இன்னும் சில நாளில் உம்மைப் பிடிப்பேன், கட்டுவேன், அடிப்பேன், முள்முடி சூட்டுவேன், முகத்தில் உமிழ்வேன், முதுகில் சிலுவையைச் சுமத்துவேன். சிலுவையில் அறைவேன், சிலுவையில் தொங்க வைப்பேன் என்று சொல்லிச் சொல்லி உமது ஆத்துமாவை வியாகுலப் படுத்தினதால் உமது புருஷத்துவ முகரூபம் விருத்தாப்பிய ரூபமாய் மாறும்படி செய்தது என்று என் ஆத்துமாவுக்குத் தெரிகிறது. ஆ, இரட்சகா! என் வயது அதிகமாயிருந்தாலும் எல்லோரும் வயது கொஞ்சமென்கிறார்கள். உமக்கு வயது கொஞ்சமானாலும் அதிகமென்று கணிக்கப்பட்டது. அது ஏன்? என் பாவத்தை முதலாய் நான் உணர்ந்து என் முகத்துக்கு முன் நிறுத்துகிறதில்லை. உமது முகத்தின் முன் சர்வலோக பாவங்களும் நிமிடந்தோறும் கடந்தன. அதினால் நீர் அழகும் சௌந்தரியமுமில்லாமல் [1]அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந் தவருமான முகமுடையவராயிருக்கிறீர்.

**விசுவாச வணக்கம்**

**ஒளிமய முகமே நமஸ்காரம்,**

**அறிவொளி முகமே நமஸ்காரம்,**

**அன்புள்ள முகமே நமஸ்காரம்,**

**ஆ இயேசுவின் முகமே நமஸ்காரம்,**

---

[1] ஏசா. 53:3

## ஜெபம்

மகா இரக்கமுள்ள இயேசுவே! தேவரீருடைய திருமுக தரிசனையின் அறிவை எனக்கு இன்று காட்டினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். உமது முகத்தின் வெளிச்சம் பாவத்தால் இருண்ட என் ஆத்துமாவில் செல்லும்படி இதோ அதின் கதவைத் திறந்து தருகிறேன். நான் தாய் முகங்காணாத பாலனைப்போலும் மழை முகங்காணாத பயிரைப்போலும் உமது திருமுகம் காணாமல் தவிக்கிறேன். உமது மகிமையின் ஒளியும் உம்மை அறிகிற அறிவின் ஒளியும் எனக்குள் செல்லும்படி உமது ஆவியைக் கொண்டு கிருபை செய்யும். உம்முடைய நாமத்தினிமித்தம் உண்டாகும் எந்தத் துன்பங்களையும் முறுமுறுப்பில்லாமலும், முகங்கோணாமலும் சகிக்கும்படி கிருபை செய்ய வேண்டுமென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற....

## துதி

கர்த்தராயிருக்கிற ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்களுக்கு இரங்கும் உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக் கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும். நீரே பரிசுத்தர், நீரே பரிசுத்தர், நீரே பரிசுத்தர்.

# தியானம் 25

## ஆத்தும நேசரின் முகம் (2 ஆம் பங்கு)

### வேதம்

[1]''இயேசு கெத்செமனே என்னப்பட்ட இடத்துக்கு வந்து முகங்குப்புற விழுந்து... ஜெபம் பண்ணினார்.' [2]'' அப்பொழுது சிலர்... அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும்...' தொடங்கினார்கள்.'' [3]''இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்து அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து... அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்.'' [4]''அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்'.

### போதனை

இயேசுவின் திருமுகத்தைப் பற்றி முந்தின தியானத்தில் நான்கு குறிப்புகளை ஆராயந்தோமே, இதில் மீதியாயிருக்கிற வேறு நான்கு குறிப்புகளை ஆராய்வோமாக. மேலே காட்டிய வாக்கியங்களில் இயேசுவின் திருமுகம்.

1. குப்புற விழுந்தது என்று அறிகிறோம். இயேசு முகங் குப்புற விழுந்ததைப் பற்றி ஒரே தரம் மாத்திரம் வாசிக்கிறோம். இயேசுவின் பாதத்தில் [5] ஒரு யூத குஷ்டரோகியும், [6] ஒரு சமாரிய குஷ்டரோகியும் முகங்குப்புற விழுந்ததாக சுவிசேடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நீசநிலைமை அவர்களைக் குப்புற விழச் செய்திருக்கிறது அல்லது அவர்கள் பெற்றுக் கொண்ட பெரிய சகாயம் அவர்களைக் குப்புற விழச் செய்திருக்கிறது.

2. இயேசுவின் திருமுகம் மூடப்பட்டது என்று காண்கிறோம். பிரதான ஆசாரியனுடைய அரண்மனையில் இயேசுவின் [7]கண்கள் கட்டப்பட்டன என்று பரி. லூக்கா சொல்லுகிறார்; பரி. மாற்கு முகத்தை மூடினார்கள் என்கிறார். இவ்விரண்டும் நடந்திருக்கலாம். சத்துருக்கள் இயேசுவின்

[1] மத். 26:39. [2] மா. 14:65. [3] லூ. 22:63-65. [4] மத். 26:67. [5] லூ. 5:12. [6] லூ. 17:16. [7] லூ.22:64

முகத்தை முதலாவது ஒரு துணியால் மூடி அவரை அடித்த பின்பு அந்தத் துணியின் இடைவழியாய் அவர் தமக்குச் செய்யப்படும் நிந்தைகளை அறிந்துகொள்ளாதபடி கண்களைக் கட்டியிருக்கலாம்.

3. இயேசுவின் திருமுகத்தில் சத்துருக்கள் அறைந்தார்கள் என்று அறிகிறோம். முன்னே இயேசுவின் [1]கன்னத்தில் அறை விழுந்ததென்று பார்த்தோம். இப்போது அவர் முகத்தில் அறைந்தார்கள் என்று பார்க்கிறோம். இவை இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லக்கூடாது. கிறிஸ்துவின் கண்களைக் கட்டி முகத்தை மூடுமுன்னே கன்னத்திலும், கண்கள் கட்டப்பட்டு முகம் மூடப்பட்ட பிற்பாடு முகத்திலும் அடித்தார்கள் என்று சொல்லலாம்.

கடைசியாக இயேசுவின் திருமுகத்தில் இன்னொரு அநியாயமான நிந்தை நடந்ததைப் பார்க்கிறோம். அந்த நிந்தையின் பேரைச் சொல்ல முதலாய் வாய் வருகிறதில்லை; அதைத் துணிந்து உச்சரிக்கையிலும் உடம்பு சிலிர்க்கும், அதை மெதுவான சத்தத்தால் சொல்லுகிறேன்: நமது இரட்சகருடைய முகத்தில் துப்பினார்கள்; அவர் [2]தமது முகத்தை உமிழ் நீருக்கு மறைக்கமாட்டாரென்று ஏசாயா தீர்க்கதரிசனமுரைத்திருந்தார். [3]இரட்சகர் கடைசியாக எருசலேமுக்குப் போகையில் தமக்கு நேரிடும் பாடுகளில் துப்பப்படுகிறதும் ஒன்று என்று சொன்னார். இயேசு துப்பப்பட்டார் என்பதைப்பற்றிச் சொல்லும் மத்தேயுவும், மாற்கும் அவருக்கு இருமுறை அந்த நிந்தை நேரிட்டதாகக் காட்டுகிறார்கள். [4]பிரதான ஆசாரியனுடைய வீட்டில் முகத்திலும் [5]பிலாத்துவின் அரண்மனையில் மேலேயும் துப்பப்பட்டார்.

## தியானம்

ஆத்துமாவே! உன் இரட்சகருடைய திருமுகம் உன் தியானத்துக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விசுவாசத்தால் நோக்கிப் பார். ஐயோ, நான் என் இரட்சகருடைய முகத்தைக்

---

[1]மத். 26:67. [2]ஏசா. 50:6. [3]மா. 10:34. [4]மத். 26:67; மா.14:65. [5]மத்.27:30; மா. 15:19.

காண ஏதுவில்லாதபடி அது குப்புறக் கிடக்கிறதே, நான் என்ன செய்வேன்? நான் என் விசுவாசத்தால் அவருக்கு எதிரே முகங்குப்புற விழுந்துகொண்டு அவர் திருமுக தியானத்தில் இருப்பேனாக.

இரட்சகர், நீர் முகங்குப்புறக் கிடப்பானேன்? பிசாசாகிய கெர்ச்சிக்கிற சிங்கத்தின்மேல் பாய்ந்து, அதைக் கீழ்ப்படுத்தி ஜெயிக்க யூதகோத்திர சிங்கமாகிய நீர் பதிவிருக்கிறீரோ? ஆத்துமநேசரே! உமது முகமெல்லாம் மண்பட்டு, தூசியால் நிறைந்திருப்பானேன்? உம்மையும் உமது பிள்ளைகளையும் சோதித்துக் கெடுத்த பழைய பாம்பின் தலையை நசுக்கும்படி முகங்குப்புறக் கிடந்து ஊர்ந்துபோகிறீரோ? அதனால் உமது முகம் மண்ணாலும் தூசியாலும் நிறைந்ததென்று என் ஆத்துமா உணருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நீர் என் பிணையாளியானதால் எனக்கு வரவேண்டிய பாவத்தின் தீர்ப்புகளையும் தண்டனைகளையும் நிறைவேற்றும் படி தேவநீதி என்னும் சேவகன் உமது கழுத்தை முறித்துத் தொண்டையை நெருக்குகிறான்; அந்தத் தண்டனையின் அகோரத்தால் நீர் அடியற்ற மரம்போல் குப்புற விழுந்து கிடக்கிறீர்!

நீர் வெகுநேரம் கெத்செமனேயில் முகங்குப்புறக் கிடந்ததுமன்றி, அடிக்கடி உமது முகம் மூடப்பட்டது. பைத்தியக்காரருக்கு முகத்தை மூடுவார்கள்: இரட்சகா! நீர் பைத்தியம் பிடித்தவரா? நீர் சகல ஞானத்துக்கும் ஊற்றாயிருக்கிறீர். உமக்குப் பைத்தியமிருந்ததென்று சொன்னால் அந்தப் பைத்தியம் பாவிகளாகிய எங்களை நேசித்ததே. நீர் எங்கள்மேல் காட்டிய நேசமானது பிசாசுக்கும் அவன் மக்களுக்கும் பைத்தியம்போல் தோன்றிற்று. மோசேயின் முகத்தில் விளங்கிய தேவமகிமையின் ஒளியை மற்றவர்கள் உணர்ந்து பயப்படாதபடி அவன் முகம் மூடப்பட்டது. என் இரட்சகருடைய முகத்தில் நடத்தப்பட்ட உபத்திரவங்களை மற்றவர்கள் உணர்ந்து தங்கள் இம்சைகளை நிறுத்திவிடாதபடி அவர் முகம் மூடப்பட்டது. ஆ, என் இரட்சகர் தாபோரில் காட்டின தமது முகரூபை இந்த நேரத்தில் காட்டியிருப்பாரானால்

எப்படியிருக்கும்! என் இரட்சகர் அப்படிக் காட்டாத்தும் எனக்காகவே. அப்படிக் காட்டியிருந்தால் அவரைச் சத்துருக்கள் சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள்; அப்போது என் இரட்சிப்பும் சர்வலோக இரட்சிப்பும் நிறைவேறி முடியாது; நாம் அனைவரும் அவரவர் பாவங்களிலே சாகவேண்டியதாய் வரும்!

எல்லாவற்றிலும் என் ஆவியை அடக்கி, ஆத்துமாவைக் குப்புற விழச்செய்யும் ஒரு பாடு என் இரட்சகர் முகத்தில் விளங்குகிறது. என் இரட்சகருடைய திருமுகம் உமிழ்நீரால் நிறைந்திருக்கிறது. இதைவிட நிந்தையுண்டோ? இதைவிட அவமானமுண்டோ? இதைவிடப் பாடுண்டோ? [1]ஒரு நோயாளி சுகமுள்ளவனைத் துப்பினாலும் [2]தகப்பன் மகளைத் துப்பினாலும் தீட்டு என்று யூதப் பிரமாணம் விதித்திருந்ததே. இரட்சகா! என்னிமித்தம் இந்த நிந்தையையும் நீர் சகிக்க வேண்டியதாயிருந்ததே. தேவனை மனுஷன் துப்புகிறான். பரிசுத்தரைப் பாவி துப்புகிறான், தகப்பனை மகன் துப்புகிறான், அரசனை அடிமை துப்புகிறான், இரட்சகரை இரட்சிக்கப்படுகிறவன் துப்புகிறான். வானமே! பூமியே! இதைவிட அநியாயமுண்டோ? சூரியனே! சந்திரனே! இதை விட நன்றிக் கேடுண்டோ? கடலே! மலையே! இதைவிட அக்கிரமமுண்டோ? சொல்லு.

**பிரலாபம்**

**ஐயோ என் இரட்சகர் குப்புறக் கிடக்கிறாரே!**
**ஐயோ என் மீட்பர் முகம் மூடப்படுகிறாரே!**
**ஐயோ என் நாதர் முகத்தில் அடிபடுகிறாரே!**
**ஐயோ என் பரிசுத்தர் முகத்தில் துப்பப்படுகிறாரே!**

**வியாகுலம்**

**தலையில் முள் முடியோ!**
**கையில் மூங்கில் தடியோ!**
**ஆ இது என் பாவமே**
**முகத்தில் உமிழ்நீரோ!**
**முதுகில் சிலுவையோ!**
**ஆ இது என் பாவமே.**

---

[1]லேவி. 15:8. [2]எண். 12:14.

## விசுவாசப் பரவசம்

என் இயேசு அனுபவிக்கிற நிந்தைகள், அவமானங்கள், அடிகள், பரியாசங்கள், உமிழ்நீர் முதலிய யாவும் பரலோகத்தில் பகிரங்கமாய்த் தெரிகிறது. தேவதூதர் அனைவோரும், பரமண்டலங்களும் அவைகளின் அதிகாரங்கள் அனைத்தும் தாங்கள் ஸ்தோத்திரிக்கும் சச்சிதானந்தக் கடவுளைப் பாவிகள் படுத்தும் இம்சையை நோக்கி அவர்கள் அனைவரையும் நாசம்பண்ணி வருவோம் வாருங்கள் என்று ஆர்ப்பரிக்கிறார்கள். அவர்களெல்லோரும் ஏகமாய்ப் பிதாவாகிய தேவனுடைய சிம்மாசனத்துக்குமுன் சாஷ்டாங்கமாய் விழுந்து, பரிசுத்தமுள்ள கர்த்தாவே, எங்கள் ஆண்டவரை அதோ பூலோகத்தில் பங்கப்படுத்தும் மனுஷஜன்மம் அனைத்தையும் நிக்கிரகம்பண்ணித் திரும்ப விடைதாரும். எங்கள் ஆண்டவனைக் குறித்த பக்தி வைராக்கியம் எங்களைப் பட்சிக்கிறது என்கிறார்கள். அப்போது என் தேவன்,

> **இன்னும் கொஞ்ச நேரந்தான்,**
> **என் குமாரன் மகிமை அடைவார்,**
> **ஜெயம் அவருடைய்தாகட்டும்**
> **இப்படி மனுஷரை நேசித்தோம்**

என்று திருவாய்மலர்ந்தருளுகிறார். உடனே அவரவர் தங்கள் தங்கள் ஊழியங்களுக்குப் போய்விடுகிறார்கள் என்பதை என் ஆத்துமா விசுவாசத்தால் காண்கிறது.

## மௌன தியானம்

வாசிக்கிறவனே! இப்பொழுது நீ முகங்குப்புற விழுந்து கொண்டு வாய்விடாமல், உன் ஆத்துமநேசர் திருமுகம் ஒரு நாள் சூரியனைப்போல் பிரகாசித்ததையும், அவர் மலர்ந்த முகத்தோடு பாடுபடப்போகிறதையும், அவர் முகம் மூடப் பட்டதையும், அடிக்கப்பட்டதையும், விசேஷமாய் உமிழப் பட்டதையும் ஆத்துமாவில் உணர்ந்து பெருமூச்சோடும், கண்ணீரோடும் தியான சிந்தனையில் சற்றுநேரம் பின்னிடுவாயாக.

## விசுவாச வணக்கம்

மண்ணுண்ட முகமே நமஸ்காரம்,
மூடுண்ட முகமே நமஸ்காரம்,
அடிக்கப்பட்ட முகமே நமஸ்காரம்
உமிழ்நீருண்ட முகமே நமஸ்காரம்

## விசுவாச முத்தம்

இரட்சகா! நான் இதோ உம்மை உமது திருமுகத்தில் முத்தமிட வருகிறேன். நான் மாத்திரமல்ல, என் சகல பாவசேனைகளாகிய கூட்டமும் என்னோடுகூட வருகிறது. உமது உமிழ்நீரோடும், மற்ற நிந்தைகளோடும் தேவரீர் உமது திருமுகத்தைச் சற்றே குனிந்துதாரும். நான் பழைய யூதாசைப்போல் உம்மைக் காட்டிக்கொடுக்கவல்ல. என் பாவங்களெல்லாம் அதைப் பார்த்து வெட்கப்பட்டு என்னைவிட்டு அகலவும், நீரே என் இரட்சகர் என்று உலகத்துக்குக் காட்டவும் முத்தமிட வருகிறேன்.

இயேசு - தந்தோம் முகத்தை பாவி!
முத்தமிடு முகத்தை பாவி!
முத்தமிடு முத்தியடை பாவி!

பாவி - முத்தமிட்டேன் இரட்சகா! ஸ்துதி,
முத்தமிடுகிறேன் இரட்சகா! ஸ்துதி,
முத்தமிடுவேன் இரட்சகா! ஸ்துதி.

## ஜெபம்

சர்வ வல்லமையுள்ள தேவனே! எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் தேவரீருடைய வீட்டாராகிய எங்களுக்காகக் காட்டிக் கொடுக்கப்படவும் அக்கிரமக்காரருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும் சிலுவையில் மரணமடையவும் மனதாரச் சம்மதித்ததினிமித்தம் எங்களைக் கிருபையோடே கண்ணோக்கிப் பார்க்க வேண்டுமென்று உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற...

## ஆசீர்வாதம்

கர்த்தர் நம்மை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தமது திருமுகப் பிரகாசத்தை நம்மேல் வீசச்செய்து, இப்பொழுதும் எப்பொழுதும் சமாதானம் தரக்கடவர். ஆமென்.

## துதி

பிதாவுக்கு மகிமையுண்டாவதாக அல்லேலூயா!
குமாரனுக்கு மகிமையுண்டாவதாக அல்லேலூயா!
பரிசுத்த ஆவிக்கு மகிமையுண்டாவதாக அல்லேலூயா!
திரியேக தேவனுக்கு மகிமையுண்டாவதாக அல்லேலூயா!

# தியானம் 26

## ஆத்தும நேசரின் சிரசு (1ஆம் பாங்கு)

### வேதம்

[1]இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள். [2]அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றிவருவேன் என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.'

### போதனை

நமது ஆத்தும மீட்பராகிய இயேசுவின் திருச்சிரசை இப்பொழுது ஆராயப் போகிறோம். மேலே காட்டிய வாக்கியங்களில் ஆத்துமநேசரின் சிரசைக் குறித்து இரண்டு குறிப்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

*1.* பரிமள தைலாபிஷேகம் பெற்றது. இயேசுவின் திருப்பாதத்தை நாம் உற்றுப்பார்த்தபோது ஒரு [3]ஸ்திரீ அவருடைய பாதத்தில் பரிமளதைலம் பூசி அதை முத்தமிட்டாள் என்று பார்த்தோம். இப்பொழுது அவருடைய சிரசு பரிமள தைலாபிஷேகம் பெறுகிறது. பாதாபிஷேகம் இயேசுவின் ஊழியத்தின் முதலாம் வருடத்திலும், சிரசாபிஷேகம் அவர் பாடுபடுவதற்கு நான்கு நாட்களுக்கு முந்தியும் செய்யப்பட்டது. பாதாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு வேண்டுமென்று விண்ணப்ப முறையாய்ச் செய்தாள்; சிரசாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு பெற்றதையிட்டு ஸ்தோத்திர முறையாய்ச் செய்தாள் என்று இரண்டு சங்கதிகளையும் பரிசோதிக்கிறதினால் தெரியவரும். பிதாவாகிய தேவன் தமது குமாரனை பரிசுத்த ஆவியாகிய ஆனந்த [4]தைலத்தால்

---

[1]மா. 14:3. [2]லூ. 9:57,58 [3]லூ. 7:37,38 [4]சங். 45:7.

அபிஷேகம் செய்தார். யோவான் ஸ்நானகன் அவரை யோர்தானின் ஜலத்தால் அபிஷேகஞ் செய்தார்; பாவியான ஸ்திரீயும், மரியாளும் அவரை நளத தைலத்தால் அபிஷேகஞ் செய்தார்கள்.

2.இயேசுவின் தலை **சாய்க்க இடமில்லாதிருந்தது.** ஆத்தும நேசர் தங்க இடமற்று, தாபரிக்க ஸ்தலமற்று மிகவும் அவதிப்பட்டிருக்கிறதை நாம் நன்றாய்ப் பார்க்கிறோம். அவர் பிறந்த நாளில் [1]சத்திரத்திலும் அவருக்கு இடமில்லாதிருந்தது. [2]அவர் வளர்ந்த நாசரேத்திலும் அவருக்கு இடமிருந்ததில்லை; அவர்கள் அவரை ஊரைவிட்டுத் துரத்தினார்கள். இயேசு அநேக அற்புதங்களைச் செய்த கப்பர்நகூமிலும் அவருக்கு இடமிருந்த தில்லை; அவர் ஐயாயிரம் பேரைப் போஷித்தவுடனே இராஜாவாக்க வந்தவர்கள் கடிந்துகொள்ளப்பட்டவுடனே [3]அவரைவிட்டுப் பின்வாங்கிப்போனார்கள். கதரேனர் நாட்டிலும் அவருக்குத் தங்க இடமில்லாமற் போயிற்று; அவர்கள் இயேசுவைத் தங்கள் எல்லையைவிட்டு [4]ஓடிப்போகச் சொன்னார்கள். நியாயஸ்தலங்களிலும் அவருக்கு இடமிருந்ததில்லை; [5]இவனை அகற்றும், அகற்றும் என்று கூக்குரலிட்டார்கள். [6]இயேசு இடமற்றதால் அடிக்கடி வனாந்தரமான இடத்துக்குப் போனதாக வாசிக்கிறோம். ஒருநாள் இயேசு செய்த வேலைகளையும், பண்ணின போதனைகளையும் சொல்லும் பரி. யோவான் கடைசியாக, [7]பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப்போனார்கள். இயேசு ஒலிவமலைக்குப் போனார் என்று சொல்லி முடிக்கிறான். எருசலேமில் எல்லோருக்கும் இடமிருந்தாலும் இயேசுவுக்கு இடமில்லாததால் [8]பகலை எருசலேமிலும், இரவை ஒலிவமலையிலும் கழித்தார். அவர் பஸ்காவை ஆசரிக்க முதலாய் இடம் [9]தேடவேண்டியது நேரிட்டது. அவர் மரித்தபின்பும் அரிமத்தியா ஊர் யோசேப்பின் கல்லறையே அவருக்கு இரவல் இடமாயிருந்தது. மெய்யாகவே நமது இரட்சகர், நரிகளுக்குக் குழிகளுண்டு, பறவைகளுக்குக் கூடுண்டு, எனக்குத் தலைசாய்க்க இடமில்லை என்று சொன்னது சரிதான்.

[1]லூ. 2:7. [2]லூ. 4:29. [3]யோ. 6:66. [4]லூ. 8:37. [5]யோ. 19:15. [6]மா. 1:35; 6:31. [7]யோ. 7:53;8:1. [8]லூ. 21:37. [9]மா. 14:14.

## தியானம்

ஆத்துமாவே! இரட்சகர் நளது என்னும் பரிமளத் தைலத்தால் அபிஷேகம் பெற்றதை என் ஆவி உணர்ந்து கொள்ளுகிறது. இந்த நளது என்னும் செடி இந்துகுஷ் மலையடிவாரத்திலும், கங்காநதியோரங்களிலுமுள்ள ஒரு மருந்துச்செடி என்று பூதத்துவ சாஸ்திரிகளும் தேறின வைத்தியரும் சொல்லியிருப்பது என் மனதை மகிழ்ச்சியால் நிரப்புகிறது. இந்தியா முழுவதும் குணப்பட்டு, என் இரட்சகரின் சிரசில் ஆனந்த தைலமாய் ஊற்றப்பட்டு, அவருடைய தாடியின் வழியாய் இறங்கி; அங்கிகளின் வழியாய் ஒழுகும் என்பதற்குச் சந்தேகமில்லை என்று என் ஆத்துமா உணருகிறது. ஆ! இந்தியாவே! நீ பூலோகத்திலுள்ள அநேக தேசங்களிலும் பாக்கியமுள்ளது; உன் மண்ணின் சாரம் என் இரட்சகரை ஒருநாள் மகிழச் செய்தது. உன் தேசத்தாருடைய முதற்தரமான பாவங்களெல்லாம் நளது தைலமாக பாவநாசர் தலையில் வார்க்கப்பட்டாயிற்று என்று சொல்ல வேண்டியது. இந்தியாவுக்கும் இரட்சகருடைய திருச்சிரசில் இடங்கிடைத்தது என்ன பாக்கியம்!

## பரவசம்

நான் ஒரு தைலம் இறக்கி என் ஆத்துமநேசர் சிரசில் வார்த்து அபிஷேகம் செய்வேன். அதற்குப் பிராயச்சித்த தைலம் என்று பெயர். அதற்கு நான் சேர்க்கும் மருந்துகளாவன: [1]விக்கிரகாராதனை விருட்சவேர்; அநியாய மரத்து அடிவேர்; வேசித்தனத்தின் சல்லிவேர்; துரோகச்செடி வேர்; பொருளாசையின் பாதாள வேர்; பொறாமையின் வேர்; வாக்குவாதம் வஞ்சனை வன்மம் இவைகளின் வேர்; புறங்கூறுதல்; அவதூறு, தேவ பகை, துராகிருதம்; அகந்தை; வீம்பு இவைகளின் பட்டைகளும், ஆணிவேர்களும், சல்லி வேர்களும், கீழ்ப்படியாமை, வாக்கைப் புரட்டல்; இணக்கமில்லாமை என்ற செடிகளின் வேர், விபசாரம், [2]வைராக்கியம், கோபம், சண்டை, மார்க்க பேதங்கள் ஆகிய

---

[1]ரோ. 1:29-31. [2]கலா. 5:19-21.

இவைகளின் கொழுந்தும், வேரும், பூவும்; பொய், வெறி, களியாட்டு முதலிய செடிகளின் வேரும், காயும், பழமும் ஆகிய இவைகளை என் மனமலைச் சார்புகளிலும் புதர்களிலும் பள்ளத்தாக்குகளிலுமிருந்து பிடுங்கி, [1]ஜெபமாகிய பனியாலும், உபவாசமாகிய வெயிலாலும் பதப்படுத்தி, உலர்த்தி, முதலாவது கெத்செமனேயின் செக்கிலும் அப்புறம் கொல்கொதாவின் உரலிலும் போட்டு, [2]பத்துக் கட்டளைகளாகிய இருப்பு உலக்கைகளையும், [3]இயேசுவின் இரண்டு கற்பனைகளாகிய வைர உலக்கைகளையும் ஆகப் பன்னிரண்டு உலக்கைகளையும் கொண்டு இடித்து, சத்தியம் என்னும் அடுப்பிலேற்றி பொறுமை என்னும் பானையிலிட்டு, பாவக்கண்ணீரால் மேற்படி தைலப் பொடிகளைக் கலக்கி, சிலுவை மரத்து விறகு போட்டு, தேவாவியாகிய அனலை மூட்டி, பெருமூச்சோடும் வியாகுலத்தோடும் ஊதிக் கொதிக்க வைத்து, அது நன்றாய்ப் பொங்கி வரும்போது இயேசுவின் திருஇரத்தச் சொட்டுகளில் சிலவற்றை விட்டு மணம்ரக்குவேன்; அப்புறம் அதை இறக்கி அன்பு என்னும் புட்டியிலடைத்து, விசுவாசமென்னும் தட்டில் வைத்து, இயேசுவண்டை போய் அவர் சிரசின் மேல் வார்ப்பேன். மரியாளின் நளது சீமோன் வீடு முழுவதுந்தான் மணத்தது, நான் ஊற்றும் தைலமோ பரலோக முழுவதும் மணக்கும், என் தைல வாசனை தேவகுமாரனை மகிழப்பண்ணும், தேவதூதரைப் பாடப்பண்ணும், என்னைத் துதிக்கப் பண்ணும், பரிசுத்தவான்களைக் கெம்பீரத்தால் நிரப்பும்.

## தியானம்

ஆத்துமாவே! இரட்சகர் தமது மனுடாவதார காலத்தில் தங்க ஸ்தலமில்லாமலும், தாபரிக்க வீடில்லாமலும் எவ்வளவு அவதிப்பட்டார். கடலும் வனமும் மலையும் அவருக்குக் கட்டிலாய் அல்லது தலை சாயுமிடமாயிருக்கிறது. பூலோகத்தை நரிக்குணமுடைய மனுஷரும், மிருகக் குணமுடைய மனுப்புத்திரரும் ஆண்டுகொண்டு நெடுகப் படுத்துக் கொண்டு

[1]மா. 9:29. [2]யாத். 20:3-17. [3]மத். 22:37-39.

கிடக்கிறார்கள். பூலோகத்தைச் சிருஷ்டித்தவருக்குத் தலை சாய்க்க முதலாய் இடமில்லை. ஆத்துமாவே! உன் இரட்சகர் தலை சாய்க்க இடமில்லாமல் திரிகையில் நீ உன் பாவப் பஞ்சு மெத்தையில் சல்லாபமாய்ப் படுத்து, சுகமாய் உன் கண்ணை மூடப்போகிறாய்! இது தர்மமா? [1]அவர் உன் வாசல்படியில் நின்று தட்டிக்கொண்டு நிற்கிறாரே! [2]என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற, என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்கிறாரே! ஐயோ, திறந்து அவர் தலைசாய்க்கச் சற்றே இடங்கொடு அப்பா!

## பாவி இடங்கொடுத்தல்

ஆத்தும நேசரே! அருமை இரட்சகா! பூலோக தேவா! புண்ணிய நாதா! பாவிகளின் நேசரே! பரிசுத்த மைந்தா! பரலோகத்தில் படுத்த தலைக்குப் பூலோகத்தில் இடமில்லையே! ஆ இயேசுவே வாரும், என் இருதயத்தில் வந்து தலை சாயும். நீர் என் வீட்டுக்குள் வந்து படுக்கிறது பெரிய காரியமேயன்றி, நான் அதைத் தருகிறது பெரிய காரியமல்ல. வானாதி வானங்களும் கொள்ளாத தேவனே! என் குடிசைக்குள் வாரும்! பரலோகமும் உமது பார்வைக்குப் பரிசுத்தமில்லையே, இந்தப் பாவ இருதயக் குடிசைக்குள் வாரும்; நீர் வந்து உம்முடைய தலையைச் சாயும். கொந்தளிக்கிற என் பாவாத்துமக் கடலில் வந்து நீர் படுத்தால் அது அடங்கி விடும். உம்முடைய பரிசுத்த சரீரத்தால் என் பாவ சரீரம் சுத்தமாகும்; வந்து தலை சாயும். உம்முடைய விலையுயர்ந்த இரத்தத்தால் என் ஆத்துமா கழுவப்படும்; வாரும், இரட்சகா வாரும்; வந்து தலை சாயும். [3]நீர் புகும் வீடும் சமாதானம் பெறும்; வாரும், இயேசுவே வந்து தலை சாயும்.

## விசுவாச விண்ணப்பம்

*தைலமோடும் சிரசே நமஸ்காரம்*
*தலை சாய்க்கா சிரசே நமஸ்காரம்.*

---

[1]வெளி. 3:20. [2]உன். 5:2. [3]லூ. 19:9.

## ஜெபம்

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீடத்தில் பரிபூரணமாய் அன்பு கூறவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப் படுத்தவும், எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணியருள வேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற...

## துதி

**இயேசுவே! நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், கிறிஸ்துவே! தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனுகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர், ஆமென்.**

# தியானம் 27

## ஆத்துமநேசரின் சிரசு (2ஆம் பங்கு)

### வேதம்

[1]'போர்ச்சேவகர்... முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து... அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.' [2]'அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும் பொருட்டு, இவன் யூதருடைய இராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள்.'

### போதனை

இரட்சகருடைய திருச்சிரசைக் குறித்து முந்தின தியானத்தில் இரண்டொரு குறிப்புகளை ஆராய்ந்தோமே. வேறு சில விஷயங்களை இப்பொழுது ஆராய்வோம், மேலே காட்டிய வசனங்களினால்.

*1.*இயேசுவின் சிரசில் முள்முடி சூட்டப்பட்டது என்று பார்க்கிறோம். இரட்சகர் முள்முடி சூட்டப்பட்டதை பரி.லூக்கா தவிர மற்ற மூன்று சுவிசேடகரும் சொல்லுகிறார்கள். பிலாத்து இயேசுவை விடுதலை செய்யும்படி முள்முடி சூட்டித் தண்டித்தான்.

2.இயேசுவின் சிரசில் அடித்தார்கள். அவர் முதுகிலும், கன்னத்திலும், முகத்திலும் அடிபட்டதோடு தலையிலும் அடிபட்டார். செங்கோல் என்று பரியாசமாக யூதர் கொடுத்த நாணல் கோலையே பிடுங்கி முள்முடியின்மேல் அடித்து அழுத்தினார்கள். அதோடுகூட அநேகர் தங்கள் விரல்களை மடக்கிக் [3]குட்டினார்கள்.

3.இயேசுவின் சிரசுக்குமேல் ஒரு வாசகம் எழுதி வைக்கப்பட்டது. இந்த வாசகம் நாலு சுவிசேடகராலும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அவை ஒன்றுக்கொன்று

---

[1]மத். 27:27-30. [2]மத். 27:37. [3]மாா. 14:65.

வார்த்தைகளில் சற்று வித்தியாசப்பட்டிருந்தாலும் பொருளில் ஒன்று தான். அவர்களில் பரி. யோவான் காட்டிய வாசகமே பூரண வாசகம் என்று சொல்ல வேண்டியது. அதாவது:-

'நசரேயனுகிய இயேசு யூதருடைய ராஜா'

நான்கு சுவிசேடகரும் காட்டிய வாசகத்திலுள்ள வார்த்தைகளில் ஒன்றையும் விடாதபடி பூரணமாய் அமைத்து ஒரு வாசகமெழுதிஞல்,

நசரேயனுகிய இவன்
யூதருடைய ராஜாவாகிய இயேசு

என்றாவது

யூதருடைய ராஜாவாகிய இவன்
நசரேயனுகிய இயேசு

என்றாவது இருக்கவேண்டியது. [1]யூதருடைய ராஜா என்ற வார்த்தைகள் நான்கு சுவிசேடகராலும் வரையப் பட்டிருக்கிறது. இரட்சகருடைய சிரசுக்குமேல் வைக்கப்பட்ட வாசகத்தில் நசரேயன், இயேசு, ராஜா என்ற மூன்று வார்த்தைகள் விசேஷித்தவைகள். நசரேயன் என்ற பதம் இரட்சகரின் [2]தீர்க்கதரிசனத் தொழிலையும், இயேசு என்ற பதம் அவருடைய ஆசாரியத்துவத்தையும், ராஜா என்னும் பதம் அவருடைய ராஜத்துவத்தையும் குறிக்கின்றன என்று சொல்ல வேண்டியது. ஆகவே, நமது இரட்சகரின் முத்தொழிலும் சிலுவையின்மேல், சிலுவையின் மூலமாய் விளம்பரம் பண்ணப்படுகிறது.

## தியானம்

ஆத்துமாவே! இயேசுவின் சிரசின் மேலிருக்கும் முள்முடியை நோக்கித் தியானஞ்செய். அவர் பிலாத்துவின் நியாய ஸ்தலத்திலுள்ள ஓர் அறையிலிருந்து முட்கிரீடத்தோடு எழுந்தருளியாகிறார். அவர் எனக்காக மனுடாவதாரம் எடுக்கும்படியாகப் பரலோகமாகிய தங்க அரண்மனையிலிருந்து புறப்பட்டு,

[1]மத். 27:37; மா. 15:26; லூ. 23:38; யோ. 19:19. [2]மத். 21:11.

அதன் [1]பொற்றள வீதிகளைக் கடந்து, [2]வச்சிரக்கல் மதிலைத் தாண்டி, [3]இரத்தின வாசல்களில் மிதித்த போது [4]அவர் சூரியனைய் என் விசுவாசக் கண்ணுக்கு விளங்கினர். வாசல் காக்கும் தூதர் தங்கள் வெள்ளி எக்காளங்களைப் பலமாய் ஊதி, தங்கள் பொன் சுரமண்டலங்களால் 'சேனைகளையுடைய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர்; பூமி அனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கின்றன' என்று வாழ்த்தினதை என் ஆத்துமா கேட்டது. அவருடைய வஸ்திரம் ஒளிமயமாயும், வெள்ளைப் போளம், சந்தனம், லவங்கம் இவைகளின் மணமாயுமிருந்தது. அவர் மரியம்மாளின் மாம்சவாசலைக் கடந்து புறப்பட்டபோது பரலோக தூதரனைவரையும் பூலோகத்தில் கண்டேன், [5]அவர்கள் பாடலையும் கேட்டேன். அவருடைய சிரசில்:

> **தேவனுக்கு மகிமை,**
> **பூமிக்குச் சமாதானம்,**
> **மனுஷருக்குப் பிரியம்**

என்ற வாசகத்தை என் விசுவாசக் கண் கண்டது. இப்பொழுது அவர் பிலாத்துவின் அரண்மனைக்குள்ளிருந்து வருகிறார். அவர் ரூபம் என் ஆத்துமாவைக்கீழே தள்ளி விடுகிறது; என் கண்ணைக் கசக்கி நீராய்ப் பிழிகிறது; காலைத் தடுமாறச் செய்து மூளையைச் சிதறடிக்கிறது; ஆவியில் துயராக்கினையைக் கொளுத்தி பெருமூச்சால் புகையச் செய்கிறது; உடம்பைச் சிலிர்க்கச் செய்கிறது. உடம்பில் சிவப்பங்கி, கையில் மூங்கில்தடி, சிரசில் முள்முடி, முகத்தில் உமிழ் நீர். ஆ! இதென்ன காட்சி? எல்லாவற்றுக்கும் இதென்ன துயரக் காட்சி : இதென்ன வியாகுலக் காட்சி எல்லாவற்றுக்கும் மேலாக என் சொந்தப் பாவங்களே பிலாத்துவின் அரண்மனைக்குள் என் இயேசுவைக் காலாகோலமாக்குகின்றன. ஆதியில் பிசாசு சர்ப்பத்துக்குள் புகுந்து ஆதித் தாய் தந்தைகளை வியாகுலத்துக்குட்படுத்தினது.

[1]வெளி. 21:18. [2]வெளி. 21:18. [3]வெளி. 21:19. [4]வெளி. 21:23. [5]லூக். 2:14.

என் இளவயதின் பாவங்களும், வாலிபத்தின் பாவங்களும், முதிர்வயதின் பாவங்களும், பலருக்குள் சென்று, பல மாதிரியாக வேஷம் போட்டு என் இரட்சகரைத் துன்பப்படுத்துகின்றன. என் பாவங்களில் சில சவுக்குக்குள்ளும், சில மூங்கில் தடிக்குள்ளும், சில சிவப்பங்கிக்குள்ளும், சில உமிழ் நீருக்குள்ளும், சில முள்முடிக்குள்ளும் புகுந்துகொண்டு என் ஆத்துமநேசரை அவமானப் படுத்துகின்றன. என் அக்கிரமங்களில் சில, அன்னாவாகவும், சில சேவகராகவும், சில யூதராகவும், சில பிலாத்துவாகவும், சில ஏரோதுவாகவும் மறுரூபப்பட்டு அதிகாரம் செய்கின்றன. என் தோஷங்களில் சில ஆணியாகவும், சில சுத்தியாகவும், சிலுவையாகவுமிருந்து என் இரட்சகரைப் பாடுகளுக்கு உட்படுத்துகின்றன. இவற்றையெல்லாம் என் ஆத்துமா விசுவாசத்தால் காண்கிறது. இரட்சகரே! இந்தப் பாவியையும் நீர் மறுபடியும் உமது கிருபையில் பங்குபெறக் கூப்பிடுகிறீர். ஆ, இதென்ன அன்பு! இதென்ன நேசம்!!

## வியாகுலம்

இரட்சகா! உமது தலையில் முள்முடியோ!
கையில் மூங்கில் தடியோ!
ஆ இது என் பாவமே!!
முகத்தில் உமிழ்நீரோ!
முதுகில் வாரடியோ!
ஆ இது என் பாவமே!!

## விசுவாசப் பரவசம்

காபிரியேலே கேள், மிகாவேலே செவிகொடு, தேவதூதரே வாருங்கள், வானதிவானங்களே கேளுங்கள்: சர்வலோக இராஜா பூலோகப்பட்டணப்பிரவேசம் வந்தபோது அங்குள்ள குடிகளெல்லோரும் ஏகமாய்க்கூடி, அவருக்குப் பட்டத்து அங்கியாக ஒரு சிவப்புச் சட்டையையும், செங்கோலாக ஒரு மூங்கில் தடியையும், கிரீடமாக ஒரு முள்முடியையும் இதோ வெகுமானம் பண்ணுகிறார்கள். இதைவிட அவமானமுண்டோ! இந்தப் பெரும் பாவிகளில் நானும் ஒருவனாயிருக்கிறேன், என் குற்றத்தை இரட்சகரே மன்னியும்! மன்னியும்!! மன்னியும்!!!

ஆத்துமாவே! இரட்சகர் முள்முடி சூட்டப்பட்டபின்பு அந்தமுள்முடியின்மேல் தடியால் அடிக்கப்படுகிறார். சத்துருக்கள் முன்போல் கையாலடித்தால் தங்கள் கையில் முள் தைக்குமென்று எண்ணி, அவருடைய கோலையே பிடுங்கி அவரை அடிக்கிறார்கள். இரட்சகா! நீர் கன்னத்தில் அடிபட்டீர், முகத்தில் அடிபட்டீர், முதுகில் அடிபட்டீர், தலையாவது தப்பாதா? முள்முடி சூடுமுன் உமது சிரசில் பட்ட குட்டும், அடியும் போதாதா? முள்முடி மேலும் அடிபட்டுமுள் அழுந்த வேண்டியதா? என் தலையின் மூளையால் நான் யோசித்துச் செய்த எல்லாப் பாவங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு உமக்குச் சூடப்பட்ட முட்கிரீடத்தின் முள் உமது மூளைமட்டும் இறங்கவேண்டியிருந்ததால், சத்துருக்கள் இப்படி உமது திருச்சிரசிலடித்து முள்ளைப் பதியச் செய்கிறார்களென்று என் ஆத்துமா உணருகிறது.

நீர் சிலுவையில் தொங்குகையில் உமது சிரசின்மேல் ஒரு வாசகம் எழுதிவைக்கப்பட்டிருக்க என் சரீரத்தின் கண்காண்கிறது; என் ஆத்துமா இப்போது தியானிக்கிறது. பிலாத்து உமது மரணாக்கினையின் முகாந்தரத்தைச் சகலரும் அறிந்து கொள்ளட்டும் என்று 'நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா' என்று எழுதிவைத்தான். சிலர் அந்த வாசகத்தை மாற்றி [1]யூதருடைய இராஜா என்று சொன்னதாக எழுதச் சொன்னார்கள். இனி அது மாற்றப்படுமா? பிலாத்துவா அப்படி எழுதினான்? இல்லை; அப்படி எழுதும்படி பிலாத்து தேவாவியால் கட்டாயஞ் செய்யப்பட்டான் என்றே என் ஆத்துமா உணருகிறது. பிலேயாம் இஸ்ரவேலைச் சபிக்க வாயைத் திறந்தாலும் வார்த்தைகள் ஆசீர்வாதமாயிருந்தன. பிலாத்துவும், யூதரும் இயேசுவை அவமானப் படுத்தப் பிரயத்தனப்பட்டாலும் மகிமை வெளிப்படுத்தப்படுகிறது. பிலாத்து அதை மாற்ற அப்புறம் பிரியப்படவில்லை; [2]நான் எழுதினது எழுதினதே என்று சொல்லி விட்டான். இது என் ஆத்துமாவுக்கு

---

[1]யோ. 19:21. [2]யோ. 19:22.

சந்தோஷமாயிருக்கிறது. பிலாத்துவே! இந்தப் புத்தி முன் உனக்கிருந்தால் உன்னை நீதிமான் என்று புகழுவேன்!

ஆத்துமாவே! அந்த வாசகத்தைப் படி. அதைக் காண்கிற அநேகர் தங்கள் தலைகளைத் துலுக்கி, உதட்டைப் பிதுக்குகிறார்கள்; அநேகர், நீ யூதருடைய இராஜாவானால் இப்பொழுதே சிலுவையிலிருந்து இறங்கிவா என்று பரியாசஞ் செய்கிறார்கள். என் ஆத்துமா, அந்த வாசகங்களை வாசித்து தேவனை மகிமைப்படுத்துகிறது. நான் அவருடைய நிர்வாண கோலத்தையும், உமிழ்நீர் முகத்தையும், முள்முடி சூடியிருக்கும் சிரசையும், ஆணிகளில் தொங்கும் உடலையும் பார்த்து, என் இயேசுவை அற்பமாய் எண்ணிக் கொள்ள மாட்டேன். [1]என் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள். [2]என் எலும்புகளை எல்லாம் எண்ணலாம். [3]என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள். [4]நம்முடைய மீறுதல் களினிமித்தம் நொறுக்கப்பட்டார். [5]கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். [6]பட்டயமே, என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு. மேய்ப்பனை வெட்டு என்பதுபோலொத்த பல பழைய ஏற்பாட்டு வாசகங்கள் இயேசுவின் சிரசின்மேல் தொங்கும் பலகையின் எழுத்துக்களையும், வாசகங்களையும் சரியாய் உணர்ந்து கொள்ளும்படி என் ஆத்துமாவுக்கு மத்தாப்பு வெளிச்சமாயிருக்கின்றன. நான் நாசரேத்திலிருந்து எழுந்தருளிய தெய்வீகத் தீர்க்கதரிசியினிடத்தில் முழங்காலில் நின்று உபதேசம் கேட்பேன்; பெத்லகேமில் பிறந்த இயேசுவாகிய தெய்வீக ஆசாரியரிடத்தில் நொறுங்குண்ட இருதயமாகிய என் பலியைச் சமர்ப்பிப்பேன்; என் இராஜாவைப் பணிந்து குனிந்து வணங்குவேன். யூதரும் மற்ற அநேகரும் அலங்கோலமான ஓர் உடலைச் சிலுவையிலே காண்கிறோம், முள்முடியையும் மேலெழுத்து வாசகத்தையும் பார்க்கிறோம் என்று சொல்லுகிறார்கள்; என். ஆத்துமாவோ அவைகளொன்றையும்

[1]சங். 22:16; [2]சங். 22:17. [3]சங். 69:21. [4]ஏசா. 53:5. [5]ஏசா. 9:6. [6]சக. 13:7.

காண்கிறதில்லை. எனக்கு முட்கிரீடமல்ல ஜீவ கிரீடமும், நிர்வாண தேகமல்ல நீதியின் நிலையங்கியும், சிலுவையல்ல சிம்மாசனமும், ஆணிகளல்ல அன்பும், பல பாஷையுள்ள வாசகமல்ல பல வருணமான வானவில்லும் தெரிகின்றன. முற்பிதாக்கள், தரிசனக்காரர், பரிசுத்தவான்கள், புலவர், தீர்க்கதரிசிகள், அரசர், ஆசாரியர் முதலிய பரிசுத்தவான்களின் ஆவிகள் சிலுவையின் முன்னின்று இரட்சகரைப் பணிகின்றன. தேவதூதரும் பரமண்டல அதிகாரங்களனைத்தும், சிலுவையின்மேல் பறந்து நிழலிட்டு அடிக்கப்படுகிற ஆட்டுக்குட்டியானவர் சகல கனத்தையும், மகிமையையும், வல்லமையையும், ஸ்தோத்திரத்தையும் பெறப் பாத்திரராயிருக்கிறார் என்று துயரமாய்ப் பாடுகிறார்கள். என் ஆத்துமாவின் பரம காட்சி அதின் துக்கத்தை ஆற்றுகிறது. அது தன் ஆணவத்தில் இனி நிலைத்திராது; அது தன் பொறாமையை இனி ஸ்தாபிக்காது; அது சிலுவையின்முன் விழுந்து சிலுவையின்மேல் தொங்கும் தன் இராஜனை நமஸ்கரிக்கிறது.

### விசுவாச வணக்கம்

முள்முடி தாங்கும் சிரசே நமஸ்காரம்,
கோலடி தாங்கும் சிரசே நமஸ்காரம்,
தெய்வீக தீர்க்கதரிசியே நமஸ்காரம்,
தெய்வீக ஆசாரியரே நமஸ்காரம்,
தெய்வீக இராசாவே நமஸ்காரம்.

### மௌனம்

வாசிக்கிறவனே! நீ இப்பொழுது உன் மனதில் இயேசு முள்முடி சூடினவராய்ச் சிலுவையில் தொங்குவதை உணர்ந்து சாஷ்டாங்கமாய் விழுந்து, சற்று நேரம் வாய் விடாமல் மௌன தியானம் செய்யும்படி உன்னை விரும்பிக் கேட்கிறேன்.

### ஜெபம்

மகா கிருபை பொருந்திய இயேசுவே! தேவலோக ஆடே! என் நித்திய பிரதான ஆசாரியரே! பாவியாகிய என் மேல்

இரக்கமாயிரும். என் பாவங்கள் உமது திருச்சிரசில் முள்முடியாகவும், உமது சிரசின்மேல் அவமான வாசகப் பலகையாகவும் இருக்கிறது. என் இளவயதின் பாவங்களையும், என் வாலிபத்தின் பாவங்களையும் மன்னித்து, உமது பாடுகளின் ஆசீர்வாதங்களை அடியானுக்குத் தந்தருளும். சர்வ உலகமும் உமது சிலுவையின் பாடுகளால் மீட்கப்படும்படி வந்த இயேசுவே! இந்த தேசத்தை உம்மை விசுவாசிக்கும் நாடாக்கும்படி உமது பரிசுத்த ஆவியை அனுப்பியருளும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே. ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற,....

**துதி**

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக; ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

# தியானம் 28

## ஆத்துமநேசரின் சிரசு (3ஆம் பங்கு)

### வேதம்

[1]"இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக் கொடுத்தார்.' [2]"சீமோன் பேதுரு... கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே... வைத்திருக்கிறதையும் கண்டான்.'

### போதனை

முந்தின இரண்டு தியானங்களிலும் இயேசுவின் திருச்சிரசைக் காட்டும் ஐந்து காரியங்களை ஆராய்ந்தோம். இதில் மீதியான வேறு இரண்டு குறிப்புகளையும் ஆராய்வோம். மேலே காட்டிய வசனங்களில்:

1. நமது இரட்சகர் தமது தலையைச் சிலுவையில் சாய்த்தார் என்று அறிகிறோம், தலைசாய்க்க இடமில்லை என்று சொன்னவருக்குக் கடைசியாக ஓர் இடம் அகப்பட்டது; அது அவருடைய சிலுவையே. அவர் சிலுவையில் தமது தலையைச் சாய்த்துக் கொண்டு 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை ஒப்புவித்தார். [3]சிலுவை அவருடைய கடைசிக் கட்டிலென்று இயேசு நன்றாய் அறிந்திருந்தார்.

2. நமது இரட்சகர் அடக்கஞ்செய்யப்பட்டபோது அவருடைய தலை ஒரு [4]மெல்லிய சீலையால் சுற்றப்பட்டிருந்தது என்று அறிகிறோம். இயேசு உயிர்த்தெழுந்தபோது அதை அவிழ்த்துச் சுருட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டார். இது அவர் உயிர்த்தெழுதலின் உண்மையை ருசுப்படுத்தும் ஒரு நியாயமாயுமிருக்கிறது.

---

[1]யோா. 19:30. [2]யோா. 20:6, 7. [3]மத்.26:2. [4]மா. 15:46.

**தியானம்**

ஆத்துமாவே! நீ இந்நிமிடமே கொல்கொதா மலைக்கு எழுந்து புறப்படு. மானிடவதாரமெடுத்த தேவன் சாகத் தலை சாய்த்தார். என் ஆத்துமா தேவகுமாரன் தலைசாய்ந்து கிடக்கிறதைக் கண்டு பலவாறாய்த் தியானிக்கிறது.

இரட்சகா! நீர் பூலோகத்தில் இருக்கும்படி குறித்திருந்த காலம் முடிந்தது, ஆகையால் தலைசாய்க்கிறீர். இனி இந்தப் பாழுலகத்தின் அவஸ்தைகள் உமக்கில்லை. நீர் உமது பிதாவின் சமூகத்தில் முடிசூட்டப்படும் காலம் கிட்டினபடியால் தலைசாய்கிறீர்.

நித்திய பிரதான ஆசாரியரே! உம்முடைய பூலோக ஆசாரிய வேலை முடிந்தது. ஆகையால் தலைசாய்கிறீர். நீர் பலியிடப்படும் தேவாட்டுக்குட்டியாயும், பலியிடும் ஆசாரியனுயும் வந்தீர்; உம்மை நீரே பலியிட்டீர். சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும் பூரணமுமான பிராணத்தியாகம் செய்து முடித்துவிட்டு இளைப்பாறும்படி தலைசாய்கிறீர்.

இராஜாதி இராஜாவே! உமது போர் ஆயிற்று, யுத்தம் ஓய்ந்தது; இனி நீர் தலைசாய்க்க வேண்டாமோ! பாவத்தின் தண்டனைக்கு நிவிர்த்தியாயிற்று, தேவகோபத்துக்குத் திருப்தியாயிற்று, உம்முடைய சத்துருக்கள் அபஜெய மானூர்கள்; ஆகையால் தலைசாய்கிறீர். என்னுடைய இரட்சண்ய வேலை ஒரு கடுகளவு பாக்கியில்லை. இன்னும் கொஞ்சமிருக்குமானுல், நீர் தலைசாயவே மாட்டீர். அநாதி தேவமைந்தா! ஆதியில் சகல லோகங்களையும் சிருஷ்டித்து ஓய்ந்திருந்தீர்; இப்போது இரட்சண்ய வேலையை முற்றிலும் முடித்து இளைப்பாறுகிறீர்.

வெற்றி வேந்தரே! நீர் உமது மரணத்தால் அடைந்த வெற்றி உமது திருத்தலையைச் சாய்த்துக் கிடக்கிறது. பரமண்டலத்திலிருந்து தேவதூதர் உமது சிலுவையைச் சூழ அணி அணியாய் நின்று கீதம் பாடுகிறார்கள்; அந்த இன்பக் கீதத்தைக் கேட்கும்படி நீர் உமது தலையைச் சாய்க்கிறீராக்கும். அவர்கள் பாடும் கீதம் என் ஆத்துமாவுக்குப் பின்வரும் கீதம்போல் கேட்கிறது.

போர் ஆயிற்று யுத்தம் ஓய்வு, சாத்தான் பலம் அடக்கினர்.
கர்த்தரின் பக்கம் கெலிப்பு, சத்துருக்கள் சிதறுண்டார்,
துதி கீதம் முழக்குவோம். துதி கீதம் முழங்கட்டும்.
அல்லேலூயா! அல்லேலூயா!

என்பதுபோல் பாடுவதை ஏற்றுக்கொள்ளும்படி தலை சாய்கிறீர்.

பூமியிலிருந்து உயர்த்தப்பட்டுச் சிலுவையின்மேல் வெற்றி சிறந்த இயேசுவே! நீர் இரட்சித்த பூலோகத்தை, ஆ! நீர் உமது பெரும்பாடுகளால் பெற்ற பிள்ளையைப் பார்க்க உமது திருத்தலையைத் தாழ்த்துகிறீர். உமது சிலுவையின் வலது பக்கத்தில் அறையப்பட்ட கள்ளன் உம்முடைய இராஜ்யத்தில் சேர்க்கக் கேட்ட விண்ணப்பத்தோடு வேறு சில மன்றாட்டுகளைக் கேட்கிறானுக்கும்; அதற்குத் தலைசாய்கிறீரோ? சிலுவையின் அருகே நிற்கும் உமது பக்தர் செய்யும் மன்றாட்டுகளைக் காதுகொடுத்துக் கேட்க ஒரு பக்கமாய்த் தலைசாய்கிறீராக்கும். இரட்சகா! உமது தலை சாய்ந்து கிடக்கிறது. என் ஆத்துமாவுக்குக் கடைசியாகக் கிடைத்திருக்கிற விசேஷித்த பாக்கியமென்று உணர்ந்து கொள்ளுகிறேன். சாய்ந்து கிடக்கும் தோளின் மேல் என் பாவங்களையெல்லாம் ஏற்றும்படி நீர் என்னைக் கூப்பிடுகிறதுபோல இருக்கிறது. நான் என் இளவயதின் பாவங்களையும், வாலிபத்தின் பாவங்களையும், முதிர் வயதின் பாவங்களையும் இதோ விசுவாசத்தால் ஏற்றுகிறேன்.

அன்பின் சொரூபியே! என்பேரில் நீர் கொண்ட நேசத்தின் பூரண வெறியை உமது தலை சாய்ந்து கிடக்கும் இந்நேரத்தில் நன்றாய் அறிகிறேன்; என்மேலுள்ள அன்பால் நீர் மயங்கிக் கிடக்கிறீர்; உமது தலை சாய்கிறது.

தெய்வீக இரட்சகா! உமது ஜீவனைவிட்டு உலகத்தாருக்கு நித்திய ஜீவனை வாங்கும்படி உமது தலையைச் சாய்க்கிறீர் என்று உணருகிறேன். இதை சூரியனும், மலையும், திரைச்சீலையும், பூமியும் நன்றாய் அறிந்துகொண்டன. அந்தச் சிருஷ்டிகளெல்லாம் ஏகமாய்க் கூடி தேவகுமாரன் தமது சாவால்

ஜீவனைச் சம்பாதிக்கும் நேரத்தில் நாம் எல்லோரும் ஒன்றுகூடிப் புலம்ப வேண்டுமென்று ஒழுங்கு செய்து கொள்ளுகின்றன.

## நீர் எனக்காக ஜீவனை விட்டீர்

உடனே சூரியன் மறைந்தது, பூமி அதிர்ந்தது, கல்லறைகள் திறந்தன. திரைச்சீலைக் கிழிந்தது; என் மனமலை இன்னும் அதிரக் காணோம், என் கடின இருதயம் இன்னும் பிளக்க வில்லை, என் பாவத்திரை இன்னும் கிழியக்காணோம். ஆ! என்னிலும் பெரும்பாவி இல்லை, என்னிலும் படுதோஷி இல்லை.

## விசுவாச சாஷ்டாங்கம்

திவ்விய இரட்சகா! இதோ சிலுவையினடியில் சாஷ்டாங்கமாய் விழும் அடியேனைக் கண்ணோக்கும்படி உமது தலையைச் சாய்த்தருளும். என் ஆத்துமாவின் பக்கமாய் உமது தலைசாய்க்கப்படுமட்டும் நான் சிலுவையை விடேன், சிலுவையை விடேன். என் பாவங்கள் மன்னிக்கப்படவும், என் தண்டனை நீக்கப் படவும், உமது சிலுவையின் பாதமேயன்றி வேறே இடம் எனக்கில்லை. ஆ! புண்ணியநாதரே தயை செய்யும், புண்ணியநாதரே இரங்கும்.

*என் பாவங்களை நான் ஏற்றும்படி தலை சாயும் இரட்சகா!*
*என் பாவங்களை நீர் ஏற்றுக்கொள்ளத் தலை சாயும் ஐயா!*
*உன் பாவங்களை மன்னித்தோம் என்று தலை சாயும் அப்பனே!*
*இயேசுவே சாஷ்டாங்கம் செய்கிறேன்.*
*கிறிஸ்துவே சாஷ்டாங்கம் செய்கிறேன்.*
*இயேசுவே சாஷ்டாங்கம் செய்கிறேன்.*

## மௌனம்

வாசிக்கிறவனே, இப்போது நீ முகங்குப்புறக் கிடந்து இயேசு சிலுவையில் தலைசாய்ந்து ஜீவனை விடுகிறதை உன் மனதில் உணர்ந்து, உன் பாவங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் நினைவுகூர்ந்து, சற்றுநேரம் வாய்விடாமல் மௌனத்தியானம் பண்ணி, கண்ணீர் சிந்தி, பெருமூச்சுகளை விடு.

## தஞ்சகீத ஜெபம்

உன் மௌனத் தியானம் முடிந்தது; இப்பொழுது முழங்காலில் நின்று பின்வரும் தஞ்சகீத ஜெபத்தைச் சொல்லு. இதை இராகப்படி பாடினால் உன் மனதுக்கு மிகவும் எழுப்புதலாயிருக்கும்.

கெத்செமனேத் தோட்டத்தில்
என்னை மீட்க வென்று நீர்
இரத்த வேர்வை சிந்தினீர்
இரட்சகா! தஞ்சம், தஞ்சம்!

கொல்கதா மலைஏறி
கொலைபாதகரோடு
சிலுவையிலே தொங்கும்
தேவனே! தஞ்சம், தஞ்சம்!

சிவப்பங்கி முள்முடி
சூடி, எனக்கு நீதி
அங்கி ஜீவகிரீடம்
தந்தவர்! தஞ்சம், தஞ்சம்!

சர்வலோக பாவத்தை
நாசமாக்கி மன்னிப்பை
தரும் ஊற்றைத் திறந்த
இரட்சகா! தஞ்சம், தஞ்சம்!

சிலுவைபாரம் ஏந்தி
பாவபாரம் இறக்கி
மானிடரை இரட்சித்தீர்
இயேசுவே! தஞ்சம், தஞ்சம்!

எனக்காக இயேசுவின்
கைகள், கால்கள், விலாவில்
உண்டான காயம் ஐந்தும்
எந்நாளும் தஞ்சம், தஞ்சம்!

சாலேமின் வீதிவழி
சிலுவையால் இடறி
விழுந்து எழுந்துபோம்
இரட்சகா! தஞ்சம், தஞ்சம்!

குருசில் தலை சாய்ந்தே
மாண்ட தேவ சுதனே!
சாய்ந்த தோளில் சாய்கிறேன்!
இரட்சகா! தஞ்சம், தஞ்சம்!

## தியானம்

ஆத்துமாவே! சிலுவையில் தலை சாய்ந்து உனக்குத் தஞ்சமான இயேசுவின் திருத்தலை மெல்லிய துணிகளால் சுற்றப்பட்டுக் கல்லறையில் வைக்கப்பட்டது. பூலோக ஆண்டவர் புதைக்கப்பட்டார் என்ற செய்தி ஆத்துமாவுக்கு எவ்வளவோ விசனமானது! பூலோக புஷ்பங்களைப் பல வர்ண உடுப்பால் உடுத்தி அழகு பார்க்கிற வல்ல தேவனுடைய தலையைக் கட்ட அரிமத்தியா ஊர் யோசேப்பு கொஞ்சம் மெல்லிய துணி கொண்டு வந்தார். இயேசுவின் தலையில் துணி கட்டப்பட்டது. பிணங்களுக்குச் சாதாரணமாய்க் கட்டப்படுகிற வழக்கப்படி என்று நான் இலேசாய் எண்ணிவிடமாட்டேன். உயிரோடெழுந்திருந்த லாசருவின் விஷயத்தில், [1]அவன் முகம் சீலையால் சுற்றப்பட்டிருந்தன. இதுதான் சாதாரண வழக்கம்.

[1]யோா. 11:44.

நமது இரட்சகருடைய [1]தலையில் துணி சுற்றப்பட்டிருந்தது. ஆத்துமநேசரே! உமது சிரசு லாசருவின் சிரசைப்போல் வடுப்படாதிருக்கவில்லை, அது சேவகருடைய தடி அடிகளாலும் யூதருடைய குட்டுகளாலும் முள்முடியாலும் படுகாயப்பட்டு, இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது; அவைகளிலெல்லாவற்றையும் மறைத்துப்போடும் படி உமது தலை துணிகளால் சுற்றப்பட்டது என்று நான் எண்ணுகிறேன்.

நீர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீர்; அல்லேலூயா! அல்லேலூயா! நீர் உயிர்த்தெழுந்தீர். அப்போது மெதுவாய் எழும்பி உமது தலையின் துணியை அவிழ்த்து அதை ஒரு பக்கத்திலும், உடலை மூடிய துணியை ஒரு பக்கத்திலும் சுருட்டி வைத்துவிட்டு வெற்றி வேந்தராய் எழும்பினீர். நீர் உமது தலையைக் கல்லறையிலிருந்து உயர்த்தினபோது:

> **[2]மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்.**
> **'நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்'**

என்ற வாசகத்தை முழக்கமாய்ச் சொன்னாற்போல் என் ஆவி உணருகிறது. சிலுவையில் சாய்ந்த தலை, கல்லறையில் கிடத்தின தலை எழுந்தது என்ற செய்தி என் ஆத்துமாவை ஆட்டுக்கடாக்களைப்போலவும், ஆட்டுக் குட்டிகளைப் போலவும் துள்ளப்பண்ணுகிறது. இனி நான் இரட்டுடுப்பானேன், சாம்பலில் உட்காருவானேன், பெருமூச்சு விடுவானேன், வியாகுலப்படுவானேன். சிலுவையில் சாய்ந்த தலை எழுந்தது. கல்லறையில் படுத்த தலை நிமிர்ந்தது, என் பாவ நிவாரணம் நிறைவேறிற்று. தேவனுக்கே மகிமை உண்டாவதாக, திரியேகத் தேவனுக்கே மகிமை உண்டாவதாக, [3]என் மீட்பர் உயிரோடிக்கிறார்.

## விசுவாச வணக்கம்

**சிலுவையில் சாய்ந்த தலையே நமஸ்காரம்!**
**கல்லறையில் படுத்த தலையே நமஸ்காரம்!**
**கல்லறையை விட்ட தலையே நமஸ்காரம்!**

---

[1]யோா. 20:7. [2]வெளி. 1:18. [3]யோபு. 19:25.

## ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே! உமது அங்கங்களின் மகத்துவங்களைப் பாவியாகிய நான் கண்டுகொள்ளும்படி கிருபை செய்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நான் என் விசுவாசக் கண்ணால் உமது திருச்சரீரத்தின் பாதம் முதல் உச்சிவரையும் பார்த்துக் கொண்டேன். நீர் எல்லா மனுபுத்திரரிலும் என் ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் மகா அழகாயிருக்கிறீர். கிருபை உமது உதடுகளில் ஊற்றப்பட்டிருக்கிறது. நீர் எனக்கு மகிமையாக விளங்குகிறீர். இரட்சகா! எல்லாவற்றையும் உமக்குக் கீழ்ப்படுத்தத்தக்க உம்முடைய வல்லமையான செயலின்படியே என்னுடைய அற்பமான சரீரத்தை உம்முடைய மகிமையான சரீரத்துக்கொப்பாக மறுரூபப்படுத்தியருளும். நான் தேவரீர் மூலமாய் நித்திய ஜீவனை அடைய உயிரோடெழுப்பப்படுவேன் என்று உறுதியாய் நம்பி, என்னுடைய சரீரத்தை மண்ணுக்கு மண்ணாகவும், சாம்பலுக்குச் சாம்பலாகவும், புழுதிக்குப் புழுதியாகவும் பூமிக்கு ஒப்புக் கொடுக்கும்படி அனுக்கிரகஞ் செய்யும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

பரமண்டலங்களிலிருக்கிற,....

## துதி

உலக இரட்சகரே! [1]நீர் அடிக்கப்பட்டு, சகலக் கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உமது இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர். உமக்கு இந்நாளும் ஓசன்னா! உமக்கு எந்நாளும் ஓசன்னா!

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரே! நீர் [2]வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும் மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறீர். உமக்கு இந்நாளும் ஓசன்னா! உமக்கு எந்நாளும் ஓசன்னா!

[3]சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; பூமி அனைத்தும் உமது மகிமையால் நிறைந்தன. உன்னதமானவராகிய தேவரீருக்கே

[1]வெளி. 5:9, 10. [2]வெளி. 5:12. [3]ஏசா. 6:3.

மகிமை உண்டாவதாக என்று தூதரோடும், பிரதான தூதரோடும், பரம சபையனைத்தோடும் இடைவிடாமல் உமது நாமத்தைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். உமக்கு இந்நாளும் ஓசன்னு! உமக்கு எந்நாளும் ஓசன்னு! ஆமென்.

## தியான முடிவு ஜெபம்

ஆண்டவரே உமது அடியேனை
ஆசிர்வதித்து அனுப்பி விடும்;
ஆத்துமநேசரின் அங்க தரிசனை
கண்டேன், கண்டேன். ஆமென்.



THE BEAUTY OF JESUS

by Rev. Samuel Paul

Regd No. SI : 36/2004

Price : Rs. 70-00